www.tamilarangam.net

# களம் புதிது

இதழ் : 7

சனவரி : 2002

ஷோபாசக்தி



நேர்காணல்

## அ. மார்க்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# களம் புதிது

இதழ்–7

2002


---

**ஆசிரியர் குழு**

இரத்தின. புகழேந்தி

இளம் பிறை

கரிகாலன்

---

**சிறப்பு ஆலோசகர்**

இரா. ந. ராசன்

---

**இதழ் வெளியீட்டில் உதவி**

சோ. சுந்தர் செல்வன்

அசோக்

பாலமுருகன்

கோவிந்தராசு

பிரகாஷ்

ஆதி

---


**தொடர்பு முகவரி**

கரிகாலன்

486,1,பாலாஜி நகர்

பெரியார் நகர் தெற்கு (விரிவு)

விருத்தாசலம்–606 001.


---


**அச்சாக்கம்**

கபிலா பிரிண்டர்ஸ்

37, மெயின் ரோடு

புதுப்பாளையம்

கடலூர் – 607 001.

போன் : 314168 (04142)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அ. மார்க்ஸ் நேர்காணல்

## எப்போதும் இளைஞர்கள் மத்தியிலேயே வாழ்கிறேன்

*பேராசிரியர் அ.மார்க்ஸ் : இலக்கிய உலகிலும் அரசியல் களத்திலும் பெரிதும் அறியப்பட்ட ஒரு பெயர். இவரின் கருத்துக்கள் நிலவும் அதிகார மய்யங்களை அதிரடித்திருக்கின்றன. அதனாலேயே அதிகார நிறுவனங்களின் – மய்ய நிறுவனங்களாயினும் சரி, இணை நிறுவனங்களாயினும் சரி அவற்றின் – கடுந் தாக்குதல்களுக்கு அவர் உள்ளாகி வருகிறார். தனி நபராக அவர் தாக்கப்படுவது என்பது தவிர அவர் அறிமுகப்படுத்துகிற நவீன சிந்தனைகள் உருவாக்கும் கேள்விகளால் அலைப்புற்று இந்தச் சிந்தனைகளையும் கருத்தாக்கங்களையுமே காய்கிறவர்கள் இன்னொரு புறம். இத்தனைக்கும் மத்தியில் இன்று தமிழ்ச் சூழலில் பெரிய அளவில் அனைவரையும் பாதிக்கக் கூடிய, எல்லோராலும் கவனிக்கப் படக் கூடியவைகளாக அவரது வெளிப்பாடுகள் அமைகின்றன. *கவிதா சரண்* சமீபத்தில் எழுதியிருந்தது போல அவரது எதிரிகளும் கூட அவரைத் தாக்குவதற்கு அவரது கருத்தாக்கங்களையே பயன்படுத்த வேண்டிய நிலை. கடந்த இரண்டாண்டுகளில் அவர் மீது வீசப்பட்ட தனிப்பட்ட விமர்சனங்கள் பற்றி விரிவாகக் கேட்டோம். மனந் திறந்து அவர் பேசிய பேச்சுக்கள் கீழே. அக்டோபர் மாதப் பிற்பகுதியில் பாண்டியிலும் நவம்பர் முற்பகுதியில் குடந்தையிலும் மேற்கொள்ளப்பட்ட இரு சந்திப்புகளில் பதிவானவை இவை.*

*சந்திப்பு : இரத்தின கரிகாலன்.*

<u>கரிகாலன்</u> : <u>உங்கள் இளமைக் காலத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்.</u>

மார்க்ஸ் : காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட அடுத்த ஆண்டு ஒரு காந்தி பிறந்த நாளில் பிறந்தேன். கடும் வறுமையான சூழலில் என் இளமை கழிந்தது. பெரும் பணக்காரரான என் தாத்தா திருத்துறைப்பூண்டியிலிருந்த தன் சொத்துக்களை எல்லாம் இழந்து தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு வட்டத்தில் வெள்ளூர் கிராமம் அருகிலுள்ள மேலப்பத்தை என்னும் குக்கிராமத்தில் "செட்டில்" ஆகியிருந்தார். சம்பாதிப்பதற்காகப் பதினான்கு வயதில் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்ட என் தந்தை மலேசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனர்களில் ஒருவர். கடும் அடக்குமுறையின் ஊடாக நாடு கடத்தப்பட்டு இங்கு வந்த அவரின் வெளிநாட்டுப் பயணம் பொருளியல் பலன் என்கிற அடிப்படையில் வயதான பெற்றோருக்குப் பெரிய ஏமாற்றம். என் அப்பாயி அடிக்கடி சொல்வார் "உங்க அப்பன் சம்பாரிச்சுட்டு வருவான்னு சிங்கப்பூர் அனுப்பிச்சோம். வந்தானே ஒரு தோல் பையையும் சவரக் கத்தியையும் தூக்கிகிட்டு". ஒரே சொத்தாக அவர் கொண்டு வந்திருந்த கில்லட் ரேசரைத்தான் அப்பாயி அப்படிச் சொல்வார். சாலைத் தொடர்பு கூட இல்லாத படு குக்கிராமம் அது. வெளிநாட்டிலிருந்து வந்தவுடன் அப்பாவுக்குத் திருமணம் செய்தார்கள். அம்மா மன்னார்குடி அருகிலுள்ள ஆதிச்சபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர். இன்னும் மோசமான ஏழைக் குடும்பம். நான் பிறந்த சில ஆண்டுகளில் என் அப்பா செய்த ஒரு புத்திசாலித்தனமான காரியம் மேலப்பத்தையிலிருந்த கொஞ்ச நஞ்ச நிலபுலன்களையும் விற்று விட்டு சாலை ஓரமாக இருந்த பாப்பாநாடு கிராமத்தை நோக்கி இடம் பெயர்ந்ததுதான். இதற்கிடையில் மலேசியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டு வந்த சுப்பையா என்கிற தலித் இளைஞர் ஒருவரும் அவரது தம்பி முத்துச்சாமியும் அவர்களுக்கு யாரும் உறவினர்கள் இல்லாததால் அப்பாவிடம் வந்தார்கள். அப்பா அவர்களைத் தம்மோடு வைத்துக் கொண்டார்.

<u>கே: உங்கள் வீட்டிலேயாவா ?</u>

ஆமாம். சுப்பையா அண்ணன், முத்தண்ணன் என்று நான் அவர்களை அழைப்பேன். நிலத்தை விற்ற பணத்தில் அப்பா ஒரு சோடா கம்பெனி ஆரம்பித்தார். சுப்பையா அதிலேயே வேலை செய்தார். முத்து போஸ்ட் ஆபிஸில் ஊழியராகச் சேர்ந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் மேன்மைகள், மார்க்ஸ் – ஏங்கல்ஸ் பெருமைகள், மலேசியாவில் தாங்கள் நடத்திய கொரில்லா யுத்தம், ஒரு சீனப் பெண்ணுடன் தான் அகப்பட்டுக் கொண்டது, அப்பா அங்கே ஒரு முக்கிய தலைவராக வாழ்ந்திருந்தது, தூக்கில் கொல்லப்பட்ட கணபதி, சுட்டுக் கொல்லப்பட்ட மணியம்.... இவர்கள் பற்றியெல்லாம் சுப்பையா எனக்குப் சொல்வார். சுப்பையா அண்ணன்தான் என் முதல் நண்பன், ஆசிரியன். என்னுள் லட்சிய விதைகளை விதைத்தவர். இரண்டு மாதத்துக்கு ஒரு முறை இரவில் இரண்டாவது ஆட்டம் சினிமா பார்க்கப் பட்டுக்கோட்டை அழைத்துச் செல்வார். சைக்கிளிலேயே பன்னிரண்டு கிலோமீட்டர் தொலைவு சென்று படம் பார்த்து வருவோம். வரும்போது அண்ணனைக்கட்டிப் பிடித்துக் கொண்டு தூங்கிவிடுவேன். டேய் தம்பி, மார்க்ஸ், தூங்காதே என்று என்னை எழுப்பிக் கதை பேசிக் கொண்டே சைக்கிளை மிதிப்பார். இரும்புத்திரை, வீரபாண்டிய கட்டபொம்மன், தீன்தேவியான் என்றொரு இந்திப்படம் இவை எல்லாம் பார்த்துவிட்டு வந்தது நினைவிருக்கிறது. சுப்பையா சுமாராகப் பாடுவார். "பட்டினிக் கொடுஞ் சிறைக்குப் பதறுகின்ற மனிதர்கள், பாரில் கடையரே எழுவீர் வீறுகொண்டே தோழர்கள்– என்கிற சர்வ தேச கீதத்தை உரக்க குரலில் பாடுவார். பட்டுக் கோட்டை கலியான சுந்தரத்தின் பாடல்களை பாடுவார். இரும்புத் திரை–யில் அந்த – மார்ச் சாங்– ஒன்று இருக்குமே. நெஞ்சினிக்கப் பொய்யுரைக்கும் பேரை நம்ப மாட்டோம்". என்று சுப்பையா அண்ணன் உரத்த குரலில் நள்ளிரவில் சைக்கிளில் பாடி வந்தது இன்றும் என் நினைவில் இருக்கிறது. காதுகளில் ஒலிக்கிறது. ஒருமுறை ஜீவா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களின் கூட்டத்திற்கு அழைத்துப் போனார். சின்ன அண்ணன் முத்து ஒரே ஜாலி பேர்வழி. அவர் எந்தக் காலத்திலும் எங்கள் வீட்டோடு இருந்ததில்லை. வருவார், சாப்பிடுவார், போய்விடுவார். அரட்டை அடிப்பார். திருமண வயது வந்த போது இருவருக்கும் அப்பா தனது உறவுப் பெண்களைத் திருமணம் செய்து வைத்தார்.

கே: திருமணம் எப்படி நடந்தது ? கிறிஸ்துவ முறைப்படியா ?

அப்பா முற்றிலும் மத நம்பிக்கையற்றவர். கோவிலுக்குப் போனதேயில்லை. அம்மா ரொம்பவும் மத நம்பிக்கையுடைய ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர். கான்வென்ட்டில் 9ம் வகுப்பு வரை படித்தவர். வீட்டில் தினம் ஜெபம் செய்கிற வழக்கம். இல்லாவிட்டாலும் பண்டிகை தினங்களில் –சர்ச்–சுக்குப் போகத் தவறாதவர். நான் பிறந்த போது மார்க்ஸ் என்கிற பெயரை சர்ச்சில் வைக்க மறுத்துவிட்டனர். அப்பாவும் பரவாயில்லை எனச் சொல்லி என்னைத் தூக்கி வந்துவிட்டார். பிறகு சர்ச் இறங்கி வந்தது. அப்பாவுடன் சமாதானம் செய்து கொண்டு **"மார்க்ஸ்"** என்னும் பெயரை வைக்கச் சம்மதித்தது. சுப்பையாவுக்குப் பெண் தேடும்போது அனாதைப் பையன், தலித் என்கிற பிரச்சனைகளால் உறவினர்கள் யாரும் பெண் தரச் சம்மதிக்கவில்லை. மிகவும் வறுமையில் உழன்றிருந்த தனது உறவுக்காரர் ஒருவரது மகளுக்கு இத் திருமணத்தில் சம்மதம் இருந்ததை அறிந்த அப்பா, மற்ற உறவினர்களின் சம்மதமின்றி அவரை அழைத்து வந்து அவசரமாகத் திருமணம் செய்வித்தார். பாப்பாநாட்டிலிருந்த துரை அரசன் என்கிற தி.மு.க. தலைவரின் தலைமையில் நடைபெற்ற சீர்திருத்தத் திருமணம் அது. திருமணத்திற்குப் பிறகு சுமார் 20 ஆண்டுகள் அண்ணன் குடும்பமும் நாங்களும் ஒன்றாக இருந்தோம். அண்ணன் மனைவி மேரி எனக்கு அக்கா முறை வேண்டும். அண்ணன் மனைவியை அக்கா என அழைக்கும் என்னை நண்பர்கள் கேலி செய்வார்கள். சின்ன அண்ணன் முத்துவுக்குத் திருமணம் செய்யும்போது உறவினர்கள் ஒரு உடன்பாட்டிற்கு வந்தனர். மதம் மாறினால் பெண் குடுப்பதென. அதன்படி முத்துவுக்கு லாரன்ஸ் எனப் பெயர் மாற்றி –சர்ச்–சில் திருமணம் நடந்தது. திருமணத்தைச் செய்வித்த சில்வேயிரா என்னும் பாதிரியார் இரண்டு பிள்ளைகளுடனிருந்த சுப்பையாவையும் மதம் மாற்றி மீண்டும் சர்ச்சில் ஒரு தாலியைக் கட்டிவைத்தார். உறவு வேர்கள் அற்ற அண்ணன்கள் இருவருக்கும் இந்த மதமாற்றம் ஒரு பாதுகாப்பாக இருந்தது. இன்று அண்ணன்கள் இருவரும் இறந்துவிட்டனர். அவரது மனைவியர், குழந்தைகள் கிறிஸ்துவர்களாக வாழ்கின்றனர். சின்னவயதில் நானும் எனது தம்பியும் மூன்று தங்கையரும் எப்போதாவது சர்ச்சுக்குப் போவதுண்டு. எங்கள் வீட்டுத் திருமணங்கள் எல்லாம் சர்ச் சில்தான் நடைபெற்றன. ஆனால் என் குழந்தைகள் சர்ச்சுக்குப் போவதில்லை. மூத்த மகளின் திருமணமும் சர்ச்சில் நடக்கவில்லை. என் மருமகன் இந்து மத நம்பிக்கைகள் உடையவர். வெறும் பதிவு திருமணமாக அதை நடத்தினார்.

கே: உங்கள் தந்தையின் அரசியல் மற்றும் இலக்கியப் பார்வைகள் உங்களை எந்த அளவு பாதித்தன ?

இந்தியாவில் வந்து இறங்கியவுடன் அவர் கைது செய்யப்பட்டார். விசாரணைக்குப் பின் விடுதலை செய்யப்பட்டபோதும் அடுத்த பத்தாண்டுகள் அவர் கடும் கண்காணிப்பிற்குள்ளாக்கப் பட்டிருந்தார். அப்போதுதான் திருமணமாகி வந்திருந்த என் அம்மாவிற்கு இது பெரிய அச்சத்தை ஏற்படுத்தியது. அரசியல் ஈடுபாடுகளுக்கு எதிரான ஒரு மனநிலை அவரிடம் வளர்ந்தது. இங்கே வந்தபிறகு தனது அரசியல் ஈடுபாட்டை அப்பா குறைத்துக் கொண்ட போதிலும், குறைத்துக் கொண்டது என்பதை விட முற்றிலுமாய்த் துண்டித்துக் கொண்ட போதிலும் பழைய நண்பர்கள் வருவது, கட்சிக்காரர்கள் உதவி கோரி வருவது, மிகவும் ஒதுக்குப்புறமாக இருந்த அந்தக் கிராமத்தில் தலைமறைவுத் தோழர்கள் வந்து தங்குவது என்பதாகத் தொடர்புகள் தொடரவும் செய்தன. அன்று கடும் தேடுதலுக்குள்ளாகியிருந்த வாட்டாக்குடி இரணியன் பிடிபடுகிற நாள் காலை வரை எங்கள் வீட்டில்தான் இருந்தார். அன்று காலை எழும்பி குறுக்குப் பாதை வழியாக வடசேரி நோக்கிச் சில மைல்கள் அவரைக் கொண்டு சென்று விட்டுத் திரும்பி வந்தார் அப்பா. அடுத்த சில மணி நேரங்களில் இரணியனையும் கூடச் சென்ற ஆறுமுத்தையும் பிடித்துச் சுட்டுக் கொன்றது தமிழ்நாடு போலீஸ். மலேசியாவில் இருந்த காலத்திலேயே இரணியன் அப்பாவுக்குப் பழக்கம். பழைய மலேசியக் கம்யூனிஸ்ட் தோழர்கள் அவ்வப்போது வீட்டுக்கு வருவார்கள். திருச்சி மோகன், நகரம் ராமசாமி, செம்பனார் கோவில் தம்பையா, மணப்பாரை சங்கையா, இங்கே வந்து கம்யூனிஸ்ட் கட்சியல் இணைந்து பணியாற்றிக் கொண்டிருந்த ஆர்.எச்.நாதன், கோ.பாரதி மோகன், கவிஞர் டி.வி.எஸ். பாரதிமோகன் முதலியோர் இவர்களில் சிலர். கடும் வறுமை நிறைந்த காலமாயினும் இந்த நண்பர்கள் வரும்போது அப்பா ரொம்பவும் மகிழ்ச்சியாக இருப்பார். இலங்கையிலிருந்து ஸ்ரீ என்றொரு தோழரும் வருவார்.

தமிழ் நாட்டிலிருந்த பிழைக்கச் சென்று சுரங்கம், உணவுக் கடைகள், வட்டிக் கடைகள், ரப்பர் தோட்டம் ஆகியவற்றில் பணி செய்து கொண்டிருந்த ஏராளமானோர் இரண்டாம் உலகப் போரின்போது கடும் நெருக்கடிக்குள்ளாயினர். இவர்களில் ஒரு பகுதியினர் சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய ராணுவத்தில் இணைந்தனர். இன்னொரு பகுதியினர் அன்று முகிழ்த்து வந்த மாவோயிசக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இணைந்து கெரில்லா வீரர்களாயினர். இந்திய தேசிய ராணுவத்தில் இணைந்தவர்களின் வாழ்க்கையைத்தான் ப.சிங்கரம் தனது நாவல்களில் படம் பிடித்துள்ளார். கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்து பின்னர் கடும் அடக்குமுறைக் குள்ளாகி இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்ட குடும்பங்கள் இரண்டாயிரம் இருக்கலாம். தமிழக மக்களின் இந்தப் பகுதி வரலாறு இதுவரை யாராலும் பதிவு செய்யப் பட்டதில்லை.

இங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் எதிலும் அப்பா உறுப்பினராகவில்லை என்ற போதிலும் எல்லாவற்றுடனும் உறவு வைத்திருந்தார். குறிப்பாக எங்கள் பகுதியில் செயல்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அறுபதுகளின் பிற்பகுதியில் உருவான நக்சலைட் கட்சி இரண்டுடனும் மேலோட்டமான தொடர்புகளைக் கொண்டிருந்தார். எப்போதாவது சில சந்தர்ப்பங்களில் வீட்டில் *கமிட்டி*க் கூட்டங்கள் நடத்துவார்கள். அன்று எல்லோருக்கும் எங்கள் வீட்டில்தான் சாப்பாடு, அல்லது தலைவர்கள் யாராவது வந்தால் எங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீட்டில் கொண்டு வந்து தங்க வைப்பதுண்டு. மணலி கந்தசாமி, காத்தமுத்து என்பன உடனடியாக நினைவுக்கு வருகிற சில
தலைவர்களில் பெயர்கள். தற்போது கட்சியில் முக்கிய பொறுப்பிலுள்ள டாக்டர் துரை மாணிக்கம் மற்றபடி எங்களூரின் பழைய
கம்யூனிஸ்டுகளான வெ.அ.சுப்பையன், காசிநாதன் முதலியோர் அடிக்கடி வருவார்கள்.
நக்சலைட் கட்சியின் மீது கடும் அடக்கு முறைகள் ஏவப்பட்டிருந்த கால கட்டத்தில் தலைமறைவுத் தலைவர்கள் வந்து தங்கத்
தொடங்கினர். என் அம்மா இதைக் கடுமையாக எதிர்த்தார். அப்பாவிடம் மன்றாடுவாரே தவிர தங்கியிருப்பவர்களை உபசரிப்பதில்
எந்தக் குறையும் வைக்கமாட்டார். கல்லூரி மாணவனாகிய என்னை ஈர்ப்பதற்கு அவர்கள் முயற்சி எடுப்பார்கள். அவர்களோடு
நான் பேசக் கூடாது, அவர்கள் கொடுக்கின்ற அச்சிட்ட பிரசுரங்களை நான் வாசிக்கக் கூடாது, வைத்திருக்கக் கூடாது என்பதில்
அம்மா ரொம்பவும் குறியாக இருப்பார். பத்திரிகைகளில் வரும் அடக்குமுறைச் செய்திகளால் கலவரப்பட்ட என் அம்மா
தலைமறைவுத் தோழர்கள் போகிற வரை வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு அலைவார். அம்மா ஊட்டிய பயம் என்னிடம்
அவர் விரும்பிய விளைவை ஏற்படுத்தியது. நான் அவர்களோடு எந்தத் தொடர்பையும் வைத்துக் கொள்ள மாட்டேன்.
பதினைந்தாண்டுகட்கு பின்னர் **(1983–84)** நான் நக்சலைட் கட்சியில் ஈடுபட்டுத் தீவிரமாகச் செயல்படத் தொடங்கியபோது தோழர்.
ஏ.எம்.கோதண்டராமன் அவர்கள் இதைச் சுட்டிக் காட்டுவார். பொன்னேரி கல்லூரியில் நான் பணியாற்றியபோது **(1971)** என்னைச்
சந்திக்க அவர் முயற்சித்ததையும் நான் மறுத்ததையும் அவர் நினைவு கூர்வார்.
**1971–72**ல் ஆறுமாத இடைவெளியில் அப்பாவும் அம்மாவும் செத்துப் போனார்கள். மூன்று தங்கைகள், ஒரு தம்பி. ஒரு தங்கைக்கு
மட்டும் திருமணம் மட்டும் நடந்திருந்தது. பைசா கூட அப்பா சொத்து வைத்துச் செல்லவில்லை. எனது ஊதியம், சோடா கம்பெனி
வருமானம் ஆகியவற்றைக் கொண்டு அடுத்த சில ஆண்டுகளில் எல்லோருக்கும் திருமணம் செய்து வைத்தோம். பொருளியல்
ரீதியாக ரொம்பவும் கஷ்டப்பட்ட நாட்கள் அவை.
**1975–77** காலகட்டத்தில் நெருக்கடி நிலை அறிவிப்பு, அத்துடனான சனநாயகப் பறிப்பு நடவடிக்கைகள் முதலியன என்னுள் இருந்த
அரசியல் உணர்வைத் தூண்டி விட்டன. அரசு கல்லூரிகளில் தற்காலிக ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போதிலும்
நெருக்கடி நிலைக்கு எதிராக இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்தாபன காங்கிரஸ் ஆகியவற்றின்பால் எனக்கு ஈடுபாடு
இருந்தது. அந்தக் கட்சிப் பத்திரிகைகள் வாங்குவேன், மாநாடுகளுக்குப் போவேன். திருச்சியில் பா. இராமச்சந்திரன் தலைமையில்
நடைபெற்ற ஸ்தாபன காங்கிரஸ் மாநாட்டுக்கெல்லாம் போய் வந்தேன். என் தந்தையின் தாக்கம் காரணமாக சின்ன வயதிலிருந்தே
எனக்குத் திராவிட அரசியலின் பால் ஈடுபாடு கிடையாது. பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கைகள் விதி விலக்கு.
எனது இளமைக்கால வாழ்க்கை என்னில் ஏற்படுத்திய மிக முக்கியமான பாதிப்பு எனச் சொல்வதனால் சாதி, மதம் முதலிய
அடையாளங்கள் என் மீது படராததுதான். எங்கள் ஊரில் நாங்கள் பெரும்பான்மைச் சாதியர்கள் அல்ல. ஒன்றிரண்டு குடும்பங்களே
எம் உறவினர்கள். உறவு என்பதைக் காட்டிலும் நட்புக்கு, தோழமைக்கு முதலிடம் கொடுத்த குடும்பப் பின்னணி. வீட்டுக்குள்ளேயே
சாதி ஒழிந்த திருமணம் ,தீண்டாமை என்றால் என்னவென்று அறியாத நிலை, நாத்திகச் சிந்தனைகள், பொதுவுடைமைக்
கருத்துக்கள் என்பதாக என் இளமைக் கால உருவாக்கம் நிகழ்ந்தது.

<u>கே: இளமைக்கால இலக்கிய ஈடுபாடு குறித்து ஒன்றும் சொல்லவில்லை நீங்கள்.</u>
அப்பாவுக்குப் பண்டைய இலக்கியங்களில் பெரும் பரிச்சயம் கிடையாது. நவீன இலக்கியங்களில் பாரதி, ஜெயகாந்தன், சரத் சந்திரர்,
காண்டேகர் முதலியோரைப் பிடிக்கும். சோவியத் இலக்கியங்கள், கார்க்கி, டால்ஸ்டாய் முதலியவர்களைப் பற்றிப் பேசுவார்.
பி.எஸ்.ராமையா, கு. அழகிரிசாமி, கு.ப. இராசகோபாலன், புதுமைப்பித்தன் ஆகியோரின் கதைகளையும் மணிக்கொடி பற்றியும்
கூட அப்பா என்னிடம் பேசியிருக்கிறார். அப்பாவுக்குப் பண்டைத் தமிழ்ப் பெருமைகள் பிடிக்காது. அப்போது எல்லோராலும்
வாசிக்கப்பட்ட மு. வரதராசனாரைச் சுத்தமாகப் பிடிக்காது. ஒரு சம்பவம். நான் ஆறாவது படித்துக் கொண்டிருந்த போது எனது
வகுப்பாசிரியர் மு.வ.வின் கையடக்கத் திருக்குறள் உரையை – கழக வெளியீடு விலை ரூ.1.75 வகுப்பில் விற்பனை செய்தார்.
அந்தச் சிறிய அழகிய நூல் என்னை மிகவும் ஈர்த்தது. வாங்க ஆசை. கையில் காசில்லை. பள்ளிக்கு வரும் வழியில் அப்பா ஒரு
டீக்கடையில் உட்கார்ந்திருந்தைப் பார்த்தேன். ஆசிரியரிடம் அனுமதி வாங்கிக் கொண்டு அப்பாவிடம் போய் "திருக்குறள்"
வாங்கக்காசு கேட்டேன். உரை இல்லாமல் புரியாதே, உரை இருக்கிறதா என்றார்.
"இருக்குப்பா மு.வ. வரை"
"மு.வ.வா, அந்த ஆள் வளவளன்னு எழுதுவாரே*
புத்தகத்தை எப்படியாவது வாங்கிட வேண்டும் என்ற ஆசை எனக்கு
*இரண்டு வரியில் உரை எழுதியிருக்கிறார். அதிலென்ன வளவளன்று எழுதப் போறார்"?
உனக்குத் தெரியாதுடா. அந்த ஆள் இரண்டு வரியையே வளவளன்று எழுதுவார்".
சரத்சந்திரரில் வெளிப்படும் மெல்லிய ரொமான்ஸ், பாரதியின் ஆங்காங்கு வெளிப்படும் irrationality மற்றும் லட்சிய வாதம், முரண்கள்,
ஜெயகாந்தனின் தலைகாட்டும் சமூக விமர்சனம் இவற்றில் ஈடுபாடு கொண்டதாக என் இலக்கிய அனுவங்கள் தொடங்கின.
கணையாழி தொடங்கி சிற்றிதழ்களில் ஈடுபாடு. மொழிபெயர்ப்புகள் குறிப்பாக எமிலிசோலா மாதிரி பிரெஞ்சு கிளாசிக்ஸ் மற்றும்
ருஷ்ய நாவல்கள் மலையாள இலக்கியங்கள் என எனது இலக்கிய ஆர்வங்கள் அமைந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கே: முதன் முதலாக எப்போது எழுதத் தொடங்கினீர்கள் ?

டில்லியிலிந்து இயங்கிவந்த *கணையாழி* இதழுக்கு எனது முதல் கதையை அனுப்பி வைத்தேன். தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் வெளிவரும் எனவும் கஸ்தூரி ரங்கன் ஒரு கார்டு எழுதியிருந்தார். எனக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. இருந்தும் அந்தக் கதை கடைசிவரை வெளிவரவில்லை. சொன்ன காரணம் டெல்லியிலிருந்து சென்னைக்கு இடமாறும்போது தவறிவிட்டது. அடுத்த ஒரு கதை எழுதி அனுப்பினேன். அதை அவர்கள் ஏற்கவில்லை. இதற்கிடையில் கல்லூரி மலர் ஒன்றுக்குப் பாரதி பற்றி ஒரு கட்டுரை எழுதினேன். துச்சாதனன் பாஞ்சாலியை மயிரைப் பிடித்து வீதியல் இழுத்து வரும் காட்சியில் ஊரவர் தம் கீழ்மையை உரைப்பதில் பாரதி எவ்வாறு வியாசரிடமிருந்தும் வில்லியிடமிருந்தும் வேறுபடுகிறார் என்பது அக்கட்டுரை. பிரசுரமான முதல் கட்டுரை அதுதான் என நினைக்கிறேன். அதற்குப்பின் கதைகள் எழுதியதில்லை. கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதத் தொடங்கினேன்.

கே: நக்சல்பாரி இயக்கத்தில் உங்களின் அனுபவங்கள் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்.

1979 முதல் சி.பி.எம் கட்சியிலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும் இருந்து தீவிரமாகச் செயற்பட்டேன். அப்போதுதான் நிறைய எழுதத் தொடங்கினேன். நானும் மணியரசனும் சேர்ந்து எழுதிய பாரதி பற்றிய நூலும் சிற்றிலக்கியங்கள் குறித்த எனது நூலும் அப்போதுதான் வந்தன. "தீக்கதிரி"லும் நிறைய அரசியல் கட்டுரைகள் எழுதுவேன். தோழர்கள் அறிவுறுவோன், சைக்கிள் கடை ரமணி, பேராசிரியர் மதிவாணன், வைகறை வாணன், வீ.அரசு, மங்கை, பொதிவெற்பன் முதலியோருடன் இணைந்து செயல்பட்ட காலம் அது. குறிப்பாக பொதியவெற்பனுடன் நெருக்கமாக இணைந்து செயல்பட்டேன். வேல்சாமியின் அறிமுகம் அப்போதுதான் ஏற்பட்டிருந்தது. ஈழப்பிரச்சினை மற்றும் ஐ.மாயாண்டி பாரதியைப் பேட்டி எடுத்தது ஆகியவை தொடர்பாக மார்க்சிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின் மார்க்சீய நோக்கில் இலக்கிய ஆய்வுகள் செய்வது என்கிற நோக்குடன் "கைலாசபதி இலக்கிய வட்டம் " என்கிற அமைப்பைத் தொடங்கினோம். தமிழ்ப் பல்கலைக் கழகத்திலிருந்துப் பின்னர் பணி நீக்கம் செய்யப்பட்ட டாக்டர் து.மூர்த்தி, டாக்டர் ராம.சுந்தரம் ஆகியோரும் இணைந்து கைலாசபதி இலக்கிய வட்டத்தை இயக்கினோம். குடந்தையில் பெதியவெற்பன், பிருந்தாசாரதி, ப.திருநாவுக்கரசு, ஜமாலன் முதலியோரும் திருச்சியில் பேராசிரியர்கள் நல்.கணேசன், ஜெயச்சந்திரன் ஆகியோரும் இணைந்து செயல்பட்டனர். மார்க்சிய நோக்கிலிருந்து தேசீய இனப் பிரச்சனையைப் பார்ப்பது எப்படி என மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் எழுத்துக்களிலிருந்து கேள்வி–பதில் வடிவில் நாங்கள் வெளியிட்ட ஒரு பிரசுரம் அன்று பெரிய தாக்கத்தை விளைவித்தது. இலங்கையிலிருந்து புகழ்பெற்ற தலைவர் நா.சண்முகதாசன் அப் பிரசுரத்திற்காகப் பாராட்டுதலையும் விமர்சனத்தையும் எனக்கு அனுப்பிவைத்தார். இந்தக் கட்டத்தில் எங்களுக்குப் பேரா.சிவத்தம்பியுடனும் எழுத்தாளர் டானியலுடனும் பரிச்சயம் ஏற்பட்டது. கறாரான ஆய்வு என்கிற அடிப்படையில் எங்களுக்குச் சிவத்தம்பி, கேசவன், கைலாசபதி முதலியோர் ஆதர்சமாகத் தோன்றினாலும் டானியலே எங்களுடைய இயல்பான தோழராக இருந்தார். சாதிப் பிரச்சனை, தீண்டாமை ஆகியவற்றின் பால் எங்களின் கவனம் குவிவதற்கு அவரே பெரிதும் காரணமாக இருந்தார்.

கே: எங்கள் என்றால்..... ?

பதில்: குறிப்பாக என்னையும் வேல்சாமியையும் சொல்கின்றேன். இலக்கியத் தளத்தில் வேல்சாமி, பொதிவெற்பன் முதலானோருடன் வெவ்வேறு மட்டங்களில் செயல்பட்ட நான் அரசியல் மட்டத்தில் தோழர்கள் கல்யாணி, கோச்சடை ஆகியோருடன் நக்சல்பாரி இயக்கத்தின் மக்கள் யுத்தப் பிரிவுடன் இணைந்து செயல்பட்டேன். புரட்சிப் பண்பாட்டு இயக்கத்திலும், தோழர்கள் எல்.ஜி.எஸ், நீண்டபயணம் சுந்தரம், நீலகண்டன், கவிஞர் பழமலய், கோவை ஈசுவரன் ஆகியோருடன் "செந்தாரகை" ஆசிரியர் குழுவிலும் செயல்பட்ட காலம் என் வாழ்வின் பெருமைக்குரிய காலங்களில் ஒன்று. மிகத் தீவிரமாக அரசியலில் பணியாற்றிய நேரம் அது. தலைமறைவுத் தோழர்கள், கட்சி ஊழியர்கள், ஈழத் தோழர்கள் என யாராவது ஓரிருவர் வீட்டில் இருந்து கொண்டே இருப்பார்கள். குழந்தைகள், மனைவி எல்லோரும் ஏதோ ஒரு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பார்கள். பசை, வஜ்ஜிரம், சாயம் எல்லாவற்றையும் அம்மாலயம் சந்திலிருந்த எனது வீட்டில் காய்ச்சி எடுத்துக் கொண்டு இரவில் சுவர்எழுத்துப் பிரச்சாரம் செய்ய இறங்கி விடுவோம். யாராவது இரண்டு பேர் வீட்டில் எப்போதும் இருப்பதைப் பற்றித் தோழர் உ.ராஜேந்திரன் சொல்வார். "மார்க்ஸ் வீட்டு அடுப்பு அணையாத அடுப்பு". கட்சிவேலை, களப்பணி, அறிவுத்துறைப் பணி என எல்லாவற்றையு் ஒருங்கு சேரச் செய்பவன் என்கிற பாராட்டு என்னைப் பற்றி எப்போதும் உண்டு. தமிழகம் முழுவதும் பிரச்சாரக் கூட்டங்களுக்கு அழைப்பார்கள். இன்று வரை அது சின்னக் கூட்டமானாலும் சரி, பெரிய கூட்டமானாலும் சரி, வீட்டில் யாருக்கும் உடல் நலமில்லாவிட்டாலும் சரி நான் ஒத்துக் கொண்ட பணியைச் செய்யாமலிருந்ததில்லை. கடும் போலீஸ் கண்காணிப்புக்கு மத்தியில் இந்தப் பணிகளை இன்று வரை செய்து வருகிறேன். வேலை போனால் அடுத்த வேலை சாப்பாட்டுக்கு என்ன வழி என அன்றும் சரி இன்றும் சரி யோசித்ததில்லை.

அதே போலக்கூடிய வரை எனது கொள்கைக்கும் செயலுக்கும் பெரிய வேறுபாடுகள் இல்லாமல் செயல்பட்டு வருகிறேன். "மக்கள் கல்வி இயக்கம"தொடங்கித்தமிழ் வழிக் கல்வி பற்றிப் பேசத் தொடங்கிய போது என் பிள்ளைகளைத் தமிழ் வழியில் பயிற்று வந்தேன். மூத்த மகள் ஏற்கனவே ஆங்கிலத்தில் படித்துக்கொண்டிருந்தாள். அவளைப் பாதியில் தமிழ் வழிக்கு மாற்றும்போது தலைமை ஆசிரியை கூப்பிட்டு இரு முறை எச்சரித்தார். நான் ஏற்கவில்லை, ஆனால் என்னுடன் இயக்கத்தில் பணியாற்றிய பலர் பிள்ளைகள் விஷயத்தில் இந்த மாதிரி ரிஸ்க் எடுக்கத் தயாராக இல்லை என்பதையும் இங்கே குறிப்பிடத் தோன்றுகிறது.

என்னைப் பற்றி என் உறவினர்களுக்கும் தெரிந்ததன் விளைவாக என் மூத்த மகளுக்கு இனம், மதம், சாதி, மொழி எல்லாவற்றையும் தாண்டிய ஒருவரை ரிஜிஸ்தர் திருமணம் செய்தபோது என் உறவினர்கள் மத்தியில் அது ஒரு பிரச்சினையாகவே எழவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கே: நக்சல்பாரி இயக்கத்திலிருந்து விலக நேர்ந்தது, நிறப்பிரிகை தொடங்கியது ஆகியவை பற்றிச் சொல்லுங்கள்.
சி.பி.எம். கட்சியிலிருந்து விலகிய கையோடு "தோழமை" என்றும் பதிப்பக முயற்சியைத் தீவிரப் படுத்தினோம். டானியல் நூல்கள் தவிர வேறு சில நூற்களையும் வெளியிட்டோம். நக்சலைட் இயக்கத்தில இருந்த போதும் லைாசபதி இலக்கிய வட்டம், தோழமை முதலிய முயற்சிகள் தொடர்ந்தன. நக்சலைட் இயக்கத்திலும் பல்வேறு கோட்பாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாமற் ஒரு தேக்கம் வந்தபோது தோழர் கலியாணி முதலியோர் அதிலிருந்து விலகினர். விலகுவதற்கு முன்பு நாங்கள் செய்த முக்கிய பணி "சாதியும் வர்க்கமும்" என்கிற ஒரு அகில இந்தியக் கருத்தரங்கைச் சென்னையில் நடத்தியது, பின்னர் நானும் கல்யாணியும் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து இக்கருத்தரங்கக் கட்டுரைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பேசி நிதி திரட்டி அவற்றை ஒரு நூலாக்கினோம். அந் நூலுக்கு நான் எழுதிய தொகுப்புரை பலரது கவனத்தையும் ஈர்த்தது. அந்த நூல் வெளியீட்டுடன் கலியாணி விலகிக் கொண்டார். எனினும் நான் அமைப்பில் மேலும் சில காலம் தொடர்ந்து பணி செய்தேன். அப்போதுதான் –மன ஓசை, கேடயம்– தோழர்கள் மா–ஒ வின் மாபெரும் விவாதம் நூலை வெளியிட்டார்கள். ரசியாவை ஒரு ஏகாதிபத்தியம் எனச் சொல்வதற்கான நியாயம் இல்லை என்பதை விளக்கி நான் அன்று பேசிய பேச்சு பெரும் சர்ச்சைக்கு உள்ளாகியது. அதை ஒட்டிக் கட்சியிலிருந்து விலகுவது என நான் முடிவு செய்தேன். சோசலிசக் கட்டுமானம், சாதீய்ப பிரச்சினை ஆகியவை குறித்து ஆய்வுகள் செய்ய வேண்டுமெனில் இறுக்கமான கட்சி அமைப்பிற்குள் அது சாத்தியமில்லை என்று எனக்குத் தோன்றியது. அந்த வகையில் கட்சியை விட்டு வெளியேறி கல்யாணி, கேசவன், ரவிக்குமார், கோச்சடை, தங்கவேல்சாமி முதலியோருடன் அதிர்வுகள், மக்கள் கல்வி இயக்கம், முதலானவற்றில் பணியாற்றினோம். எங்களின் கட்சித் தொடர்புகள் கொஞ்சம் கொஞ்சமாக விலகியபோது தோழர் கேசவன் மட்டும் கட்சி நிலைபாடுகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு கட்சியிலேயே தொடர்ந்தார்.

மக்கள் கல்வி இயக்கத்தை முழு நேரப் பணியாகச் செய்யலாம் எனக் கல்யாணி சொன்னார். அதற்கா ஒரு அறிக்கை ஒன்றை எழுதினோம். வழக்கம்போல நான்தான் அதை எழுதிப் பின்னர் விவாதத்தில் அது செழுமைப்படுத்தப்பட்டது. கல்வி இயக்கத்துடன் மனித உரிமைப் பிரச்சினைகளையும் சேர்த்துக் கொள்ளலாம் என நான் சொன்னதை முதலில் மறுத்த தோழர் கல்யாணி பின்னர் இரண்டாண்டுகள் கழித்து அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டார். "மனித உரிமை இயக்கம்" நூலறிக்கை ஒன்றையும் வழக்கம் போல தயாரித்தோம். வழக்கறிஞர் ஆசைத்தம்பியின் பொறுப்பில் அது இயங்கியது. எனினும் எதிர்பார்த்த மாதிரி அது "டேக் ஆஃப்" ஆகவில்லை.

மக்கள் கல்வி இயக்கத்தைப் பொருத்த மட்டில் பாண்டிச்சேரியில் நடைபெற்ற கல்வி பற்றிய விவாதம் குறிப்பிடத் தக்கது. தோழர்கள் அருணன், அருண் சிவா, கோமதி, ராஜன் என்ற கிராமியன் ஆகியோர் மாற்றுக் கல்வி பற்றியும் "பாவ்லோஃப்ரேயர்" பற்றியும் முக்கிய பங்களிப்புகளைச் செய்தனர். இந்தக் கல்விமுறையே அடிமைத் தனத்தை உருவாக்குகிற ஒரு கல்வி முறையாக உள்ளபோது இதில் டியூஷனை ஒழித்தல், நன்கொடைகளை ஒழித்தல், ஆசிரியர்களை ஒழுங்காகப் பாடம் நடத்தச் சொல்லுதல் முதலான சீர்திருத்தங்கள் இன்னும் ஒழுங்கான அடிமைத் தனத்திற்கு வழிவகுக்காதா என்கிற கேள்வியை கிராமியன் எழுப்பினார். அந்தக் கேள்விக்குக் கடைசி வரை இயக்கத்தால் பதில் ஏதும் கண்டு பிடிக்க இயலவில்லை. தவிரவும் பல்வேறு பரந்துபட்ட சமுக இலக்குகளுடன் செயல்பட்டு வந்த தோழர்கள் எல்லேரைய் *கல்வி* என்று புலத்திற்குள் கட்டி நிறுத்தவும் இயலவில்லை. எனவே பின்னாளில் இதில் பங்கு பெற்றிருந்த பலரும் பல்வேறு இயக்கச் செயற்பாடுகளுடன் தங்களைப் பிணைத்துக் கொண்டனர். மக்கள் கல்வி இயக்கம் தானாகவே இற்றொழிந்தது. கல்யாணி தமிழ்த் தேசிய இயக்கத்தின் பக்கம் மாறினார். நாங்கள் நிறப்பிரிகை, போஸ்ட்மாடனிசம், தலித் இலக்கியம் என்றவாறு மாறினோம். கிராமியன் தனது பள்ளியின் திறமைமிகு "ஹெட்மாஸ்டர்" ஆனார். இப்படியாக.

இதற்கிடையில் தன்னார்வ நிறுவனங்களின் ஊடுவருவல் இல்லாத மேலும் சனநாயகத் தன்மையுடன் கூடிய ஒரு மனித உரிமை இயக்கத்தைத் தொடங்குவதற்கு வழக்கறிஞர் இரத்தினமும் கல்யாணியும் முன் கை எடுத்தனர். வழக்கம் போல அதற்கொரு அறிக்கை ஒன்றையும் எழுதித் கொடுத்தேன். நெருக்கமாக இருந்தபலரும் கலந்து கொண்ட அக் கூட்டத்தில் ரவிக்குமார் மட்டும் கலந்து கொள்ளவில்லை. முதற் கூட்டத்தில் கலந்து கொண்ட தோழர் சுகுமாரன் அடுத்த கூட்டத்திற்கு வரவில்லை. உற்சாகமாய் நடைபெற்ற இரு ஆலோசனைக் கூட்டங்களுக்குப் பிறகு அந்த இயக்கமும் படுத்துவிட்டது.

<u>கே: எல்லா விசயங்களிலும் நீங்கள், கல்யாணி, ரவிக்குமார், சுகுமாரன், இரத்தினம் எல்லோரும் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருந்த நேரம் அது. ரவிக்குமார் ஏன் வரவில்லை ? ஏதாவது காரணம் சொன்னாரா ?</u>
இப்படியான விசயங்களில் வெளிப்படையாகக் காரணங்கள் சொல்கிற வழக்கம் அவருக்குக் கிடையாது. எது பலமாக வளர்கிறது என்பதைப் பார்த்து அதன்படி தன் போக்கை அமைத்துக் கொள்வது அவர் வழக்கம். பொதுவாகவே "கமிட்மென்ட்" அவரிடம் குறைவு. நண்பர்களாகட்டும், கருத்தியலாகட்டும் அதற்கு முழுமையாகச் சார்ந்து நிற்பார் என்று சொல்ல முடியாது. இல்லாவிட்டால் எந்தக் காரணமும் சொல்லாமல் அன்று கல்யாணி–ரத்தினம் முயற்சியிலிருந்து விலகி நின்றிருக்க மாட்டார். இதற்குச்சில ஆண்டுகட்குப் பிறகு திண்டிவனத்தில் கல்யாணி தலித் ஆதரவாளர்கள் மாநாடு* ஒன்றைப் போட்டார். இதற்கிடையில் கல்யாணி முழுக்க முழுக்கத் தமிழ்த் தேசியத்தின் பக்கம் சாயத் தொடங்கியிருந்தார். தலித் தலைமை, தலித்துகளின் தனித்துவம் ஆகியவற்றை மறுத்துப் பிரசுரங்கள், கருத்தரங்குகள் நடத்தி வந்த தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியை அழைத்தால் நான் அந்த மாநாட்டில் கலந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
கொள்ள முடியாது என அன்று கல்யாணிக்குக்கடிதம் எழுதினேன். அதே போல போகவுமில்லை. ரவிக்குமார் மனித உரிமை இயக்கத்தைப் புறக்கணித்தற்கு அப்படிக் காரணம் ஏதும் சொல்லவில்லை. பி.யு.சி.எல். அமைப்பிலேயே தொடர்ந்து இருப்பது என்கிற அவரது விருப்பத்தில் தவறேதும் சொல்ல முடியாது. ஆனால் அதை வெளிப்படையாகச் சொல்லி இருக்கலாம்.

**II**

கே: நிறப்பிரிகையில் ரவிக்குமாரின் பங்களிப்பு என்ன ? நீங்கள் இருவரும் பிரிந்ததென்பது எங்களைப் போன்றவர்களுக்கு எத்தனை ஏமாற்றம் தெரியுமா ? பின்னணியாக உள்ள காரணங்களைச் சொல்ல முடியுமா ? காலச் சுவடு பேட்டியில் அவர் உங்கள் மீது கடும் விமர்சனங்களை முன் வைக்கிறார்.

**1983** அல்லது **84** ஆக இருக்க வேண்டும். தனது "தருமபுரி எதிரொலிகள்" நூலுக்கு முன்னுரை வேண்டி தஞ்சைக்கு வந்தார் ரவிக்குமார். அதிலிருந்து சுமார் பத்தாண்டு காலம் எனது அரசியல் வாழ்வின் மிக நெருக்கமான நண்பர் அவர். பேரா. சிவத்தம்பி அவர்களைச் சிறப்பாசிரியாரகக் கொண்டு ஆய்விதழ் ஒன்றைத் தொடங்குவது என்பதுதான் அன்று வேல்சாமியின் விருப்பமாக இருந்தது. சிவத்தம்பியும் அதை ஏற்றுக் கொண்டிருந்தார். இன்று எதற்காக "நிறப்பிரிகை" பாராட்டப்படுகிறதோ அத்தகைய உருவாக்கத்தில் ரவிக்குமாரின் பங்கு கணிசமானது. நிறப்பிரிகை இதழ்கள் உருவாக்கத்தில் ஆசிரியத்துவப் பணியில் அளவு ரீதியாக அவரின் பங்கு குறைவென்ற போதிலும் qualitative ஆக அவரது பணி முக்கியமானது. நிறப்பிரிகையின் குறிக்கோள் வாசகமாக உள்ள "செயல் அதுவே சிறந்த சொல்" என்பதைக்கூட அவர்தான் தேர்வுசெய்தது. நிறப்பிரிகையை இப்படித்தான் கொண்டுவர வேண்டும் என்ற விரிவான திட்டங்களுடன் நாங்கள் அதில் இறங்கவில்லை. ஒரு திறந்த விவாதத்திற்கான மேடையாக அதை அமைப்பது, வெறும் இலக்கியப் பிரச்சினைகளோடு நிறுத்தி விடாமல் சமூக–அரசியல் பிரச்சினைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிப்பது குறிப்பாக அன்று மேலெழுந்து வந்திருந்த இரண்டு பிரச்சினைகள் சோசலிசக் கட்டுமானங்களின் வீழ்ச்சி, தேசிய இனப் பிரச்சினை, அதிகார உருவாக்கங்கள், மாற்றுக்கல்வி, மாற்று மருத்துவம் முதலியன பற்றி திறந்து மனத்துடன் பேசுவது என்றுதான் தொடங்கினோம். முதல் இதழிலேயே இவை தொடர்பான கட்டுரைகள் வந்திருப்பதை நீங்கள் பார்க்கலாம். அப்போது நான் குடியாத்தம் கல்லூரிக்கு பழிவாங்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தேன். தோழர் மருதமுத்து அந்தக் கல்லூரியில் பணி செய்தபோது சில நல்ல புத்தகங்களை வாங்கிப் போட்டிருந்தார். அதில் ஒன்று வில்ஹெம் ரீச். ரீச் மொழியாக்கம் பெருத்த வரவேற்புக்கு உள்ளாகியது. "தேசியம் ஒரு கற்பிதம்" என்றும் கருத்தாக்கம் தமிழகம் முழுவதும் பல அதிர்வுகளை ஏற்படுத்தியது. ரவிக்குமார் மூலமாக எனக்குக் கிடைத்த புத்தகங்களும் இரவுகளில் நாங்கள் மேற்கொண்ட நீண்ட உரையாடல்களும் எனது பல முக்கிய கட்டுரைகளுக்கும் பின்புலமாக அமைந்தன. பெண்ணியம், சாதியம், பெரியாரியம் பற்றியெல்லாம் முதன் முதலில் சிற்றிதழ் புலத்தில் ஆழமான விவாதங்களுக்குக் காரணமாக நிறப்பிரிகை அமைந்தது. கூட்டு விவாதங்கள், மாட்டுக்கறி உணவு, பார்ப்பனியம் மேலோங்கி நின்ற இந்தியாடுடே இதழை மலம் துடைத்து இழிவு செய்தது என்று தமிழ்ச் சூழலில் ஒரு மாற்றுக் கலாச்சார தளமாக நிறப்பிரிகை விளங்கியது. ரவிக்குமார் தவிர நாகார்ஜுனன், பிரேம் ரமேஷ், அருண் சிவா, சாருநிவேதா எனப் பலரும் நிறப்பிரிகை உருவாக்கத்தில் பங்களிப்பு செய்தனர். ராஜ்கவுதமன், அருணன் முதலியோரின் பங்களிப்புகளும் இருந்தன. கட்டுரைகள் எழுதாத போதிலும் சுகுமாரன், அபிமன்னன், விடியல் சிவா முதலியோரின் ஊக்குவிப்புகளும் பங்களிப்புகளும் குறிப்பிடத் தக்கவை. நான் அரசு ஊழியராக இருந்ததால் சட்டச் சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டு பாண்டிச்சேரி முகவரியிலிருந்து இதழ் வெளிவந்தது. ஏற்கனவே பொதியவெற்பனுடன் இணைந்து தோழமை வெளியிடுகள் வெளியிட்டு வந்ததால், எங்களுக்குள் கணக்கு வழக்குப் பிரச்சினைகள் இருந்த போதும் அவரையும் ஆசிரியர் குழுவில் இணைத்துக் கொண்டோம். எனினும் அவர் தொடர்ந்து ஒத்துழைக்க விரும்பாததால் அவரது பெயரைப் பின்பு நீக்கிவிட்டோம்.

நிறப்பிரிகை மொத்தம் – இலக்கிய இதழ்களையும் சேர்த்து பதினான்கு இதழ்கள் வெளிவந்துள்ளன. கடைசி நான்கு அல்லது அய்ந்து இதழ்களில் ரவிக்குரின் பங்களிப்புகள் ஏதுமில்லாததை நீங்கள் பார்க்கலாம். தொடர்ந்து மூன்று இதழ்களில் அவரது பங்களிப்புகள் ஏதுமில்லை. ஆசிரியர் குழு கூட்டங்களுக்கும் வருவதில்லை. பின்னர் இது தொடர்பாக அவருக்குக் கடிதம் எழுதி அவரது ஒப்புதலுடன் இதழில் அவரது பெயரை நீக்கினோம்.

கே: ஏன் அவர் ஒத்துழைப்பு தருவதை நிறுத்தினார் என்பதைத்தான் கேட்கிறேன்.

குறிப்பான சம்பவங்கள் சில உண்டு. ஒன்று நீங்கள் எல்லோரும் அறிந்தது. இந்தியா டுடே–யில் அவர் கட்டுரை எழுதியது. இந்தியா டுடே இதழைக் கிழித்து மலம் துடைத்துப் பரபரப்பாயிருந்த சமயம் அது. எப்படியும் நிறப்பிரிகை ஆட்களை வளைத்து உள்வாங்குவது என்கிற நோக்குடன் வாசந்தி தஞ்சை வந்தபோது வேல்சாமியைச் சந்தித்து இலக்கிய இதழுக்கு எழுதச் சொன்னார். வேல்சாமி தானும் எழுத இயலாது மார்க்சும் எழுத மாட்டார் என்று சொல்லிவிட்டார். இந்த விவரத்தை நான் ரவிக்குமாருக்கும் தெரிவித்திருந்தேன். வாசந்தி பாண்டிச்சேரி சென்று ரவிக்குமாரையும் ராஜ்கவுதமனையும் கேட்டபோது அவர்கள் ஒத்துக் கொண்டனர். ராஜ் கவுதமனைப் பற்றிப் பிரச்சினையில்லை. இன்றுள்ள சூழலில் நீங்கள் எழுத வேண்டாம். மொத்தத்தில் நிறப்பிரிகையை அனைவரும் திட்டுவதற்கு ஏதுவாகும் என நேரில் சென்று ரவியிடம் வேண்டிக் கொண்டேன். அவர் மறுத்து விட்டார். இவ்வாறு தன்னிச்சையாக முடிவு செய்து அவர் எழுதியவுடன் நான் எதிர்பார்த்தது போலக் கடுமையான எதிர்ப்புகள் வந்தன. ஞானி, கவிதாசரண் முதலியோர் கடுமையாகச் சாடினர். நேரிலும் விடியல் சிவா உட்படப் பலரும் விமர்சனங்கள் வைத்தனர். இருந்த போதிலும் ரவிக்குமாரை ஆதரித்துத்தான் நான் எல்லாப் பத்திரிகைகளிலும் எழுதிக் கொண்டிருந்தேன். தன்னிச்சையாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர் எழுதப் போனார் என்று எங்கும் சொல்லவில்லை. இன்று வரை ரவிக்குமார் இது தொடர்பாக எந்த விளக்கமும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இன்னொரு சம்பவம். வெளிநாட்டு நண்பர்கள் சிலர் நிதி தருகிறோம். ஒரு பத்திரிகை நடத்துங்கள் என்ற கேட்டபோது எனக்கு அதில் உடன்பாடு இல்லை. நிறப்பிரிகையின் பெயரால் நடத்தக் கூடாது என உறுதியாகச் சொல்லி விட்டேன். ஆனால் ரவிக்குமார் அப்படி ஒரு இதழ் நடத்தப் போவதாக எல்லோரிடமும் சொல்ல ஆரம்பத்திருந்தார். அப்போது விஜய் டிவியில் வேலை செய்து கொண்டிருந்த நண்பர் ரவி சுப்பிரமணியம் கூட ரவிக்குமார் சொன்னதாக என்னிடம் கேட்டார். இல்லை இது ரவிக்குமாரின் முயற்சி. எனக்குத் தொடர்பில்லை என்று சொன்னேன். இது மாதிரியானப் பல விஷயங்கள் சுருக்கமாகச் சொல்வதானால் ரொம்பவும் Mega ஆகப் பெருந்திட்டங்கள் சிலவற்றைச் செயல்படுத்துவதற்கும் அதற்காக சில அடிப்படையான குறைந்தபட்ச நெறிமுறைகளையும் கருத்தியல்களையும் சமரசம் செய்து கொள்வதற்கும் நிறப்பிரிகை ஒரு தடையாக இருப்பதாக அவர் உணர்ந்தார். நான் அப்போதே நெருங்கிய நண்பர்களிடம் சொன்னேன் " பாருங்கள் சிலர் கடைசியாக காலச்சுவடு, சுந்தரராமசாமி போன்றவர்கள் வரை சமரசம் செய்து கொள்ளப் போகிறார் என்று" இந்தச் சமரசத்தில் பலியாகப் போவது இது நாள்வரை நாம் மிகவும் சிரமப்பட்டு மேலுக்குக் கொண்டு வந்த தலித்தியம் கருத்தியல்கள்தான்.

<u>கே: தலித்தியக் கருத்தியலில் என்ன விதமான சமரசங்கள் செய்யப்பட்டுள்ளன என்று கருதுகிறீர்கள் ?</u>

தலித் பண்பாடு, தலித் இலக்கியம், தலித் அரசியல் ஆகியவை குறித்துத் தமிழ்ச் சூழலில் கடந்த பத்துப் பதினோரு ஆண்டுகளாகத் தீவிரமாகப் பேசப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் தலித் இலக்கியம் என்பதைச் "சாதிக்கு ஒரு இலக்கியம் தேவையா" ? என்றெல்லாம் சொல்லி மறுத்தவர்கள் இப்போது தலித் இலக்கியத்தின் அவசியத்தை தவிர்க்க இயலாமல் ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழலை தலித் எழுச்சி இங்கே உறுதிப்படுத்தியது. நாமல்லோரும் அந்த எழுச்சியுடன் இணைந்து நின்று செயலாற்றினோம். இந்த விவாதங்களினுடாக மேலெழுந்த மையப்புள்ளிகள் எனச் சிலவற்றைச் சொல்லலாம். அரசியல் தலித் தலைமை, தலித் மக்கள் மற்றும் அவர்களின் பண்பாட்டுத் தனித்துவம், தீண்டாமை உள்ளிட்ட அனைத்துச் சமூக அநீகளுக்கும் பார்ப்பனீயம் பின்புலமாக இருப்பது, தலித் இலக்கியத்தை தலித்துகளே எழுத முடியும், மரபுகளை மீறுதல், தலித் மொழி ஒன்றைக்கட்டமைத்தல், தலித் இலக்கியத்தைப் பொது விமர்சன அளவுகோல்கள் மூலம் அமைக்கக் கூடாது என்கிற Text specific criticism என்கிற சிந்தனை, என எல்லவாற்றையும் தலை கீழாக்குதல் போன்றவை பண்பாட்டுக் களத்தில் பேசப்பட்டன. அம்பேத்கர் – பெரியார் சிந்தனைகளை முன் மாதிரியாகக் கொள்ளுதல், குறிப்பாகப் பெரியாரின் எதிர் கலாச்சாரச் சிந்தனைகளின் பொருத்தப்பாடு, கூடவே இவற்றுக்கு இணையான சில நவீன சிந்தனைகளான வாசிப்பின் அரசியல், இலக்கியத்தைப் பிரதியாகப் பார்த்தல், இலக்கியத்தின் புனிதக் கட்டுமானங்களைப் பிரித்து அவிழ்த்தல் முதலியவற்றையும் சொல்லாம். ராஜ் கவுதமனின் "தலித் பண்பாடு" அந்நூலுக்கு ரவிக்குமார் எழுதிய முன்னுரை எனது சில கட்டுரைகள் ஆகியவற்றில் இவை பேசப்பட்டன. கடந்த நான்கைந்து ஆண்டுகளில் – அதவாது நிறப்பிரிகையிலிருந்து பிரிந்த பின்னர், காலச்சுவட்டுடன் நெருக்கம் ஏற்படுத்திக் கொண்ட பின்னர் மேற்கண்ட எந்த விசயங்களையாவது ரவிக்குமார் பேசி இருக்கிறாரா ? இந்தியப்புரட்சியின் இருபெரும் எதிரிகள் முதலாளியமும்–பார்ப்பனியமுமே என்கிற அம்பேத்கரின் மேற்கோளை ரவிக்குமாரின் வாய் எங்கேனும் உச்சரித்துள்ளதா ? இப்போது தலித் இலக்கிய மாநாடு பற்றி ரவிக்குமார் சில – மெகா திட்டங்களை அறிவித்துள்ளாரே அதில் இது பற்றிப் பேசப்பட்டுள்ளதா ? அந்த அறிக்கையில் இவை ஏன் காணோம் ? இவற்றை எல்லாம் ஆரம்பத்தில் இருந்த அதே வேகத்துடன் இப்போது பேசினால் காலச்சுவடுடன் சேர்ந்து கொண்டு இவர் கும்மாளிக்க முடியுமா ? காலச்சுவடு பேட்டியில் பார்ப்பனீயம் பற்றி இவர் ஏதாவது பேசியுள்ளாரா ? ஆனால் கண்ணனின்பாக்கெட்டுக்குள் உட்கார்ந்து கொண்டுப் பெரியாரைத் தலித் விரோதியாக இவர் அந்தப் பேட்டியில் முக்கியத்துவம் கொடுத்துப் பேசியிருப்பதன் பொருளென்ன ? தலித்தியம் பற்றிய மேற்குறித்த விசயங்கள் எல்லாம் அய்பத்திற்கிடமின்றி நிறுவப்பட்டுவிட்டன. தொடர்ந்து அதைப் பற்றிப் பேச வேண்டி தேவையில்லை என்றெல்லாம் கதையளக்கக் கூடாது. இரண்டாயிரம் ஆண்டு காலமாக ஆதிக்கம் செலுத்திய பார்ப்பனீய – இந்துப் பண்பாட்டை அவ்வளவு எளிதில் சரியாகி விட்டதாக நாம் கருதிவிட முடியாது. அம்பேத்கர் முன் வைத்த இந்து மத எதிர்ப்பையும் வட இன்று ரவிக்குமார் தனது எழுத்துக்களில் முன் வைப்பதில்லை என்பது சிந்திக்கத் தக்கது. நிறப்பிரிகையோடு இருந்து கொண்டு இத்தகையக் கருத்தியல் சமரசங்களைச் செய்திருக்க இயலுமா ?

<u>கே: ஆனால் காலச்சுவடு பேட்டியில் ரவிக்குமார் வேறு விதமாகச் சொல்லுகிறாரே. தலித் களத்தில் செயல்படுகிற தலித் அல்லாதவர்கள் தலித்துகளின் பிரதிநிதியாக மாறும் தருணங்கள் வரும்போது அதைத் தவிர்த்துவிட்டுப் பின் வாங்கிக் கொள்ள வேண்டும். இந்தத் தெளிவு கல்யாணியிடம் இருந்தது மற்றவர்களிடம் இல்லை என உங்களைப் பற்றிப் பேசி வரும்போது சொல்கிறாரே ?</u>

இது போன்ற பொத்தாம் பொதுவான அவதூறுகளை ஏவிவிட்டு ஒதுங்குதல் அறிவு நேர்மை அல்ல. குறிப்பாள எடுத்துக்காட்டுகள் சொல்லவேண்டும். எந்தச் சந்தர்ப்பத்தில், எந்த நிகழ்வில் நான் என்னைத் தலித்துகளின் பிரதிநிதியாக நிறுத்திக் கொண்டிருக்கின்றேன் ? தலித் அமைப்புகள் எதிலும் நான் உறுப்பினராகவோ பொறுப்பாளராகவோ இருந்ததில்லை. மார்க்சியம், பின் நவீனத்துவம், அடித்தள மக்கள் ஆய்வு என்பதாக எனது பல்வேறு கரிசனங்களில் தலித்தியமும் தலித் அரசியலும் கூடப் பிரதான பாத்திரம் வகுத்தன என்பதைக் காட்டிலும் தலித் இலக்கிய அல்லது விமர்சனத்தின் –அத்தாரிட்டி–யாகவும் என்னை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் எங்கும் முன்னிலைப் படுத்தியதில்லை. தலித் அரசியல் மற்றும் இலக்கியத்திற்காகப் பல மாநாடுகள் நடத்தியுள்ளோம். தலித் எழுத்தாளர்களின் எழுத்துக்களை அச்சில் கொண்டு வர என்னால் ஆன முயற்சிகள் செய்திருக்கின்றேன். யாருமே தலித் இலக்கியம் பற்றிப் பேசாதபோது டானியலின் நாவல்களைத் தமிழகத்தில் கொண்டு வரும் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். தலித் மாணவர்களோடு நின்று போராடியதற்காக பழிவாங்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டு என் குடும்பத்தை விட்டு வாழ்ந்திருக்கின்றேன். எந்தச் சந்தர்ப்பத்தில் தலித்களின் பிரதிநிதியாக என்னை நான் முன்னிறுத்தியிருக்கின்றேன் ? ஒரு நிகழ்வைச் சொல்ல விரும்புகின்றேன். **1993** என நினைக்கிறேன். தலித் எழுச்சியைப் பின்புலமாக்கித் "தலித் பண்பாட்டுப் பேரவை" ஒன்றைத் தமிழக அளவில் உருவாக்கலாம் என ரவிக்குமார், நான், கல்யாணி, சுகுமார் இன்னும் பலரும் திட்டமிட்டுப் பாண்டிச்சேரியில் எல்லா தலித் எழுத்தாளர்களையும் இணைத்து ஒரு பூர்வாங்கக் கூட்டம் நடத்தினோம். அதனை இரு அமர்வுகளாகப் பிரித்தோம். காலை அமர்வில் தலித் அல்லாதவர்களும் பங்கு பெற்றோம். நான், ராஜன்துரை, பழமலய் எனப் பலரும் கலந்து கொண்டு தலித் இலக்கியம் குறித்துக் பேசினோம். எழுத்து எவ்வாறு குற்ற உணர்வை வாசிப்பவர்கள் மனத்தில் உருவாக்குகிறது, தலித் உயர்சாதி எழுத்து என்பது எவ்வாறு தலித்கள் மத்தியலான குற்ற உணர்வைப் போக்குவதாகவும், தலித்கள் அல்லாதவர்களிடம் குற்ற உணர்ச்சியை உருவாக்குவதாகவும் அமைய வேண்டும் எனச் சிறந்த ஒரு உரையை ராஜன் முன் வைத்தார். எல்லோரும் பேசினோம். மதியத்திற்குப் பிறகு தலித் அல்லாதவர்கள் விடைபெற்றோம். மதியத்தில் பின்பு தலில் எழுத்தாளர்கள் மட்டும் இருந்து அமைப்பு ஒன்றை உருவாக்குவது, இதில் தலித் அல்லாதவர்கள் பங்கு பெறுவதில்லை என்று நாங்கள் அன்று முடிவெடுத்துச் செயல்பட்டோம். தலித்களின் பிரதிநிதியாக நிற்க முயன்றோமெனில் அப்படி வந்திருப்போமா ?

<u>கே: தலித் பண்பாட்டுப் பேரவை முழு வீச்சுடன் செயல்பட்டதா ?</u>

செயல்படவில்லை. அதற்குச் காரணமும் ரவிக்குமார்தான். தலித் பண்பாட்டுப் பேரவையின் அமைப்பாளராக அன்று தோழர் உஞ்சை ராசன் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழக அளவில் பரவலாகத் தெரிந்திருந்தவரும் எழுத்துலகில் கால் பதித்திருந்தவருமான ரவிக்குமார் முழு ஒத்துழைப்புத் தந்திருந்தால் அந்த இயக்கம் இன்று ஒரு வலிமையான தலித் பண்பாட்டுக்கான இயக்கமாக உருப் பெற்றிருக்கும். அவ்வாறு ரவிக்குமார் ஒத்துழைக்காததன் விளைவாக உஞ்சை ராசன் அவர்களால் அவ்வமைப்பை விரிவாகக் கொண்டு செலுத்த முடியவில்லை. நான் அவ்வப்போது இது பற்றி ரவியிடம் பேசி "அதைச் கொஞ்சம் தீவிரப்படுத்துங்கள்" என்றால் "ஆமா அந்த ஆளாடே ஒண்ணும் பண்ண முடியாது". என்று அலட்சியமாகப் பதில் சொல்லுவார்.

<u>கே: காரணம் என்ன ?</u>

உஞ்சை ராசனை அமைப்பாளராகக் கொண்ட அந்த அமைப்பு பிரபலமாகிவிடக் கூடாது என்பது தவிர வேறு எந்த நோக்கமுமில்லை. பொதுவாகவே தலித் எழுத்தாளர்களை அலட்சியம் செய்யும் போக்கு ரவிக்குமாரிடம் தொடர்ந்து இருந்து வந்தது. இன்னொரு பக்கம் பார்ப்பன உயர்சாதி எழுத்தாளர்கள் மீதான பிரமிப்பாகவும் அது மாறிக்கொண்டே வந்தது. நன்றாக யோசித்துப் பாருங்கள். தமிழ்ச் சூழலில் நன்கு அறிமுகமானவரும் முதல் தலித் எழுத்தாளர் என்று சொல்லத் தக்கவரும், தான் படைத்த அனைத்தையுமே தலித் எழுத்துக்களாகத் தந்தவருமான டானியல் பற்றி ரவிக்குமார் இதுவரை ஏதும் பேசியதில்லை. ஆனால் காலச்சுவடு கும்பலுடன் சேர்ந்து கொண்டு புதுமைப்பித்தன் இப்போது மவுனி, மிச்சமூர்த்தி ஆகியோரைப் புனிதத் திருஉருவாக்கும் முயற்சியில் அவரின் உற்காகமான ஈடுபாட்டைக் கவனியுங்கள். தலித் படைப்புகளை வெளியிடுவதற்கான "விளிம்பு டிரஸ்ட்" தொடங்கிய போது பாப்லோ அறிவுக்குயிலின் "கிலுக்கி" நூலையும் விழி பா.இதயவேந்தனின் சிறுகதைத் தொகுப்பையும் வெளிடக் கூடாது எனப் பிடிவாதம் செய்தார். "கிறுக்கி" எனக் சொல்லக் கூடாது "கிலுக்கி" என்று தான் இருக்க வேண்டும் என்று கடைசியில் கூறினார். அறிவுக்குயிலிடம் பேசினேன். நான் அப்போது பழிவாங்கப்பட்டு அரியலூர் கல்லூரியில் பணி செய்து கொண்டிருந்தேன். அங்கே அறிமுகமானவர்தான் அறிவுக்குயில். முழுக்க முழுக்க ஒரு தலித்தாக வாழ்கிற தலித். பல ஆண்டுகளாகக் கதைகள் எழுதியும். அவற்றை நூலாக்க வாய்ப்பற்ற கொடுமை. அவரைப் பார்த்துத்தான் தலித் படைப்பாளிகளுக்கான ஒரு வெளியீட்டகம் கொண்டு வர வேண்டும் என்கிற கருத்தே எனக்குத் தோன்றியது. அவரது

நூலையும் இதய வேந்தனின் நூலையும் வெளியிடுவதற்கு அவ்வளவு தடைகளைச் செய்தார் ரவி. எங்களுக்குள் பிளவு ஏற்பட்டதற்கான முலாதாரமான நிகழ்வுகளில் இதுவும் ஒன்று. அறிவுக்குயிலைப் பொருத்த மட்டில் "கிலுக்கி" எனச் சொல்வதுதான் இங்கு வழக்கு. அப்படித்தான் போட வேண்டும் என்றார். இந்த விசயத்தில் எனக்கு ஏற்கனவே வேறோர் அனுபவம் இருந்தது. டானியலின் நூல்களைப் பதிப்பிக்கும்போது அவர் சில சந்தர்ப்பங்களில் "ழ" வுக்குப் பதிலாக "ள" வைப் பயன்படுத்துவார். அவற்றையெல்லாம் நான் திருத்திவிட்டேன். அதற்காக மிகச் கடுமையாகக் கோபித்துக் கொண்டார் டானியல். இந்த மாதிரி அம்சங்களில் இறுதி முடிவு எடுக்கும் உரிமை எழுத்தாளருக்குத்தானே ஒழிய நமக்குக் கிடையாது என்பது என் எண்ணம். எனவே தான் *கிறுக்கி* என்றே வரட்டும் என்று சொன்னேன். இதய வேந்தன் புத்தகத்தையும் அப்படித்தான் சரியாக இல்லை எனச் சொல்லிப் போட வேண்டாம் என்றார். அதிலும் அவரோடு நான் கருத்து மாறுபட வேண்டியதாயிற்று. புதிதாக எழுத வரும் தலித் எழுத்தாளர்களிடம் நாம் ரொம்பவும் கெடுபிடி செய்து அவர்களது எழுதும் ஆர்வத்தையே குலைத்து விடக்கூடாது. அப்பட்டமான திருத்தங்கள் இருந்தால் சொல்லாம். மாற்றி எழுதச்சொல்லலாம் அல்லது நூலாக வந்த பின்பு விமர்சனங்களைச் செய்து மாற்றும் கருத்துக்களை முன் வைக்கலாம். நமக்குள் இருக்கும் சில ஒழுங்குகலை மேன்மை பற்றிய பார்வைகளின் அடிப்படையில் அவரை நமது கட்டமைக்குள் கொண்டு வந்தால் தலித் எழுத்தின் கச்சாத் தன்மையும் பன்மைத் தன்மையும் அழிந்து விடும், ஒழுங்காக

www.tamilarangam.net
அலட்சியப் படுத்தினால் சரியா இருக்க முடியும் பொதுவாக தலித்
இல்லை போடவே கூடாது என ஆரம்ப முயற்சிகளை அலட்சியப் படுத்தினால் சரியா இருக்க முடியும் பொதுவாக தலித்
எழுத்தாளர்கள் குறித்த ஒரு கீழான பார்வையே ரவிக்குமாரிடம் நான் பார்த்திருக்கின்றேன். அவர்கள் திறமைக் குறைவானவர்கள்,
ஒழுங்கற்றவர்கள், ஒழுங்குபடுத்தப்பட வேண்டியவர்கள் மவுனி போன்ற பார்ப்பன திரு உருக்களை இலட்சிய மாதிரியாகக் கொண்டு
தலித் எழுத்தாளர்களை ஒழுங்கமைக்க வேண்டும் என்கிற கருத்து காலஞ் செல்லச் செல்ல ரவியிடம் அதிமாக வளர்ந்தது.
கே: இப்போது தலித் படைப்பாளிகள் மாநாடு ஒ்றை அவர்தானே திட்டமிட்டு வருகிறார் ?
ரவிக்குமாரின் மெகா திட்டங்களில் இது ஒன்று, *தமிழ் இனி* கும்பமேளா மாடலில் செய்யப்படும் இந்த முயற்சி, நான் முன்பே
சொன்னது போல, நாம் இதுகானும் தலித் பண்பாடாக முன் வைத்த கருத்தியல் கூறுகளை உயர்த்திப் பிடிப்பதற்குப் பதிலாக
அவற்றைக் குழி தோண்டிப் புதைக்கவே முயல்வதாகத் தோன்றுகிறது. ரவிக்குமாரின் திட்டப்படி சென்றால் ஒரு பத்து தலித்
எழுத்தாளர்களுக்கு விருதுகள், ஒரு பத்து எழுத்தாளர்களின் நூற்களை வெளியிடுதல் என்று சொல்லி சிவகாமி, ஊஞ்சைராசன்,
டொமினிக் ஜீவா முதல் எல்லா தலித் எழுத்தாளர்களையும் ஒருங்கிணைத்து நிறுத்தி அதன் மூலம் ஒரு பெரிய அதிகாரத்தைத்
தனக்குக் கட்டமைத்துக் கொள்வதற்காகவும், காலச்சுவடு போன்ற தனது நண்பர்களைத் தலித் ஆதரவாளர்களாக டைபேச்சில்
காட்டுவதற்கான முயற்சியாகவும் மட்டுமே அது அமையும். ஒரு விசயத்தை யோசித்துப் பாருங்கள், புலம் பெயர்ந்த எழுத்தாளர்களில்
இவர் தலித் ஆதரவாளர்கள் என யாரை முன்னிறுத்தப் போகிறார் ? ஓரிரு தலித் எழுத்தாளர்களை முன் நிறுத்திய போதும் பிறப்பில்
இசைவேளாளராக இருந்த போதும் யாழ்ப்பான சைவ வேளாளப் பின்புலத்தில் உடையவரும் அந்தத் தளத்தில் இயங்குபவரான
சேரனின் தேர்வாகத்தான் அது அமையும். உள்நாட்டில் சுந்தரராமசாமி அவர் பிள்ளை கண்ணன் என்பது போல புலம் பெயர்ந்த
எழுத்தாளர்களில் ரவியின் தொடர்பு சேரன் முதலியவர்களுடதான். லும்பன்கள், பொறுக்கிகள் என இவரால் வாய்ப் பேச்சுகளில்
வருணிக்கப்படும் "இருள்வெளி" நண்பர்களை இவர் அங்கீகரிப்பாரா ? சுகன் முதலான இவர்கள் தான் "இருள்வெளி"
"சனதருமபோதினி" என்ற இரு தலித் தொகுப்புகளை வெளியிட்டவர்கள். தலித் இலக்கியம் என்கிற கருத்தாக்கத்தை வைத்து
சை வேளாளப் பின்புலத்தை எதிர்த்துப் போராடி வருகிறவர்கள். சமீபத்தில் மேட்டூர் தோழர் ஒருவர் குறிப்பிட்டார். *என்னங்க ரவி
அவுங்களை "லும்பன்" என்று திட்டுகிறாரே". அப்படிப் பேசிவருகிறவர் நடத்தக்கூடிய தலித் படைப்பாளிகள் மாநாட்டில்
*இருள்வெளி* தோழர்கள் எப்படி அங்கீகரிக்கப் படப் போகிறார்கள் என்று பார்ப்போம்.

<u>கே: தலித் இலக்கியத்தின் பெயரால் நடத்தப்பட இருக்கும் விழாவும் தமிழ் இனி கும்பமேளா போல ஒரு ஆடம்பரத் திருவிழாவாக</u>
<u>மட்டும்தான் இருக்கும் என்கிறீர்களா ?</u>
அப்படி ஆகிவிடக் கூடாது என்பது என் விருப்பம். தலித்தியத்தில் பெயரால் நடத்தப்படும் எல்லாவற்றையும் ஆதரிப்பதும்
பங்குபெறுவதும் நம் கடமை. ஆனால் இதை முன்னெடுக்கும் ரவிக்குமாரின் நோக்கத்தை அய்யப்படாமல் இருக்க முடியாது. தலித்
படைப்பாளிகளைத் தனக்குக் கீழாகத் திரட்டிக் காட்டி அதன் மூலம் அதிகாரங்களைக் குவித்துக் கொள்வதும், பின் அதை வைத்து
Main Stream media வுடன் பேரம் பேசுவதும் மட்டுமே ரவிக்குமாரின் குறிக்கோளாக இருக்கும். ரவிக்குமாரின் திட்டப்படி எல்லாம்
நடைபெற்றால் இதில் பலியாகப் போவது தலித்தியக் கருத்தியலாகத்தான் இருக்கும். பார்ப்பனியத்தால் இயக்கப்படும் Main Stream
வைத் திருப்திப் படுத்துவதெனில் தலித்தியக் கருத்தியலைப் பலி கொடுக்காமல் என்ன செய்ய முடியும் ? ஆனால் அப்படி
நடக்காமலிருப்பதும் தடுப்பதும் அணிதிரளும் தலித் எழுத்தாளர்களின் பணியாக இருந்தால் நல்லது. இது நாள்வரை தலித்
இலக்கியத்தின் பெயரால் பேசப்பட்டவை தொகுக்கப்படக் கூடிய ஒரு நிகழ்ச்சியாக அது அமைய வேண்டும். ஒரு நல்ல அறிக்கை
ஒன்று இதனடிப்படையில் முன் வைக்கப்படுவதும், உரிய தீர்மானங்கள் இயற்றப்படுவதலும் அவசியம். அறிக்கை ஒன்று
சொன்னவுடன் ஒன்று நினைவுக்கு வருகிறது. "தலித் பண்பாட்டுப் பேரவை"தொடங்கப்பட்டவுடன் "தலித் அரசியல் அறிக்கை"
ஒன்றைத் தயார் செய்தது போல பண்பாட்டு நகல் அறிக்கை ஒன்றையும் தயார் செய்யுங்களேன் எனப் பல முறை ரவிக்குமாரிடம்
வேண்டினேன். இல்லைஅப்படிப்பட்ட ஒரு இறுக்கமான வரையறைகளை நாம் முன் வைக்காமல் அதன் இயல்பான வளர்ச்சிப்
போக்கில் விடுவோம் என்றார். சோஷலிச எதார்த்தவாதம் குறித்த அனுபவங்கள் நமக்கு இருந்தால் அதுவும் சரிதான் என்று
எனக்கும் தோன்றியது. ஆனால் ஒரு தற்காலிகமான வரையறை கூட உருவாக்கப்படாதது என்பது ரவிக்குமார் போன்றவர்கள்
இன்று தலித்தியத்தை எப்படி வேண்டுமானாலும் வளைப்பதற்கு ஏதுவானதை நினைக்கும்போது அத்தகைய ஒரு அறிக்கையை
இப்போதாவது முன் வைக்க வேண்டியதன் அவசியம் புலப்படுகிறது. இறுக்கமான ஒரு வரையறையாக இல்லாமல் குறைந்தபட்ச
கவனக் குவிப்புகளாகவாவது அது அமைதல் நல்லது.
கே: தலித் இலக்கியத்தின் மீதான விமர்சனத்தையெல்லாம் தன் மீதான விமர்சனமாக நீங்கள் எடுத்துக் கொண்டீர்களென
ரவிக்குமார் குற்றம் சாட்டுகிறாரே ?
இதையும் அவர் விளக்க வேண்டும். எனக்கு ஒன்றும் புரியவில்லை அப்படி எடுத்துக் கொண்டால் அது நல்ல விஷயம்தானே. என
மீதான விமர்சனங்களை தலித் இலக்கியத்தின் மீதான விமர்சனமாக நான் மாத்தினால் அது அநியாயம். கண்டிக்கப்ப
வேண்டியது. மாறாக தலித் இலக்கியத்தின் மீதான விமர்சனத்தை என் மீதான விமர்சனமாகவே எடுத்துக் கொண்டு பதிலளிக்
முனைந்தால் அது தலித் இலக்கியத்தின் மீதான எனது ஈடுபாட்டைத்தானே காட்டுகிறது.

<u>கே: தலித் படைப்பாளிகள் மாநாடு பற்றிய அறிக்கையில் அப்படி ஒரு வாசகம் காணப்படுகிறது. அதவாது தலித் இலக்கியத் களத்தி</u>



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பணியாற்றிய தலித் அல்லாதவர்கள் தமது பிரச்சினைகளையே தலித் பிரச்சினைகளாக முன் வைத்தனர் என்று.

மறுபடியும் சொல்கிறேன். இது குறித்து ரவிக்குமார் விளக்கமான ஒரு கட்டுரை எழுதினால் நல்லது. அதிலும் கூடப் பாருங்கள். மாநாடு பற்றிய ஒரு பக்க அறிக்கையில் தலித் இலக்கியத்தின் இலக்குகள் அதன் எதிர்நிலைகள் இவை பற்றியெல்லாம் எதுவும் பேசவில்லை. தலித் இலக்கியக் களத்தில் பணியாற்றிய தலித் அல்லாதவர்கள் மட்டுமே தலித் இலக்கியத்திற்குப்பிரச்சினை என்பது போல அந்த அறிக்கை அமைக்கப்பட்டிருப்பதில் ரவிக்குமாரின் பங்கு முக்கியமானது. கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் யார் தனது பிரச்சினையை தலித்துகளின் மொத்தப் பிரச்சினையாக முன் வைப்பது என்று. தனது சொந்த விருப்பை தலித் இலக்கியத்தின் பிரச்சனையாக வைப்பது யார் ?. தலித் அல்லாதவர்களை தலித் அமைப்பிற்கும் உள்ளே அனுமதிக்க வேண்டியதில்லை. அது சரி, ஆனால் அவர்கள் கருத்துச் சொல்லவும் விமர்சிக்கவுமே கூடாது எனச் சொல்வது ஆபத்தானது. உள் நோக்கமுடையது. பொதுக் கவனத்திற்கு வந்தபின் எதுவும் விமர்சனத்திற்குட்பட்டதுதான். அத்தகைய விமர்சன உரிமையை அளிப்பதே சனநாயகம்.

கே: உங்களையே மய்யமாக வைத்துச் செயல்கள் நடந்து வர வேண்டும் என நீங்கள் முயன்றதாகவும் காலச் சுவட்டில் ரவிக்குமார் குற்றம் சாட்டுகிறாரே.

அப்படி ஒரு குறை ரவிக்குமாருக்கு ஏற்பட்டதன் பின்னணியை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நிறப்பிரிகை வந்த காலத்தில் நிறப்பிரிகை மார்க்ஸ் என்று என்னையாரும் சொல்ல மாட்டார்கள். ஆனால் நிறப்பிரிகை ரவிக்குமார் என்பார்கள். பாண்டிச்சேரி குழு என்பார்கள். நிறப்பிரிகையின் முகவரியாகக் கூட ரவிக்குமாரின் முகவரிதான் கொடுக்கப்பட்டது. இருப்பினும் இயல்பாக நான் முதன்மைப்பட்டதன் காரணம் அதில் என் கூடுதலான பங்களிப்பு. சுமார் என்பது சதப் பணிகள் என்னுடையது. இரண்டு மூன்று கட்டுரைகள், மொழி பெயர்ப்பு, கூட்டுவிவாதத் தொகுப்பு, தலையங்கம் எனப் பெயருடனும் பெயரில்லாமலும் எனது பங்களிப்புகள் மிகுதி. இது தவிர எனது கடும் உழைப்பு பற்றி இங்கே சொல்ல வேண்டியது தவிர்க்க இயலாதது ஆகிறது. கல்லூரிக்குச் சென்று வருவது தவிர ஒரு நாளைக்கு சுமார் பன்னிரண்டு மணி நேரம் நான் எழுத்துப் பணியிலும் அரசியல் பணிகளிலும் செலவிடுகின்றேன். எனது குழந்தைகளுக்கு ஒரு மணிநேரம் பாடம் சொல்லிக்கொடுத்ததாகவோ, அவர்களை மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றதாகவோ வரலாறு இல்லை. ஆனால் அதே சமயத்தில் தமிழகத்தின் மூலை முடுக்குகளெல்லாம் எங்கு யார் அழைத்தாலும் கூட்டத்திற்குச் செல்லுகின்றேன். அது மெகா கூட்டமா, சாதாரண கூட்டமா பஸ் டிக்கட்டுக்கு காசு கொடுப்பார்களா, மாட்டார்களா என்றெல்லாம் நான் சிந்திப்பதில்லை. எந்தச் சிற்றிதழ் கட்டுரை கேட்டாலும் எழுதிக் கொடுக்கிறேன். யாராவது புத்தகம் பற்றிப் பேசச் சொன்னால் முழுமையாகப் படித்துவிட்டுப் போய் பேசுகிறேன். சராசரியாக எனது இரண்டு அல்லது மூன்று நூற்கள் ஆண்டு தோறும் வெளி வருகின்றன. இந்நிலையில் எனது பெர் முதன்மைப் படுதலை நான் எப்படித் தவிர்ப்பது. ஒப்பீட்டளவில் ரவிக்குமார் ஒரு சோம்பேறி. குடும்பத்துடன் ரொம்பவும் பிணைப்பு உள்ளவர். பாண்டிச்சேரியை விட்ட நகர மாட்டார். தனக்குப் பலன் இல்லாத கூட்டங்களுக்குச் செல்ல மாட்டார். அவருடைய எழுத்து –அவுட்புட்– ரொம்பவும் குறைவு. கடும் உழைப்பின்றி வெறும் manipulation மூலமாகவே தன்னை முதன்மைப் படுத்திக் கொள்ள முனையும் போது அவருக்கு ஏற்பட்ட பிரச்சினை அது.

கே: Manipulation என்றால் ?

Main Stream பத்திரிகை ஆசிரியர்களைச் சென்று சந்திப்பது. அவர்களிடம் வழிவது, புகழ்வது, போனில் தொடர்பு கொண்டு மற்றவர்களைப் பற்றிக்குறை சொல்வது. அவர் கட்டுரையை ஏன் போடுகிறீர்கள் என்ற பேசுவது.... இப்படி. இதை வைத்துக் கொண்டு எவ்வளவு காலம் ஒட்ட முடியும். உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். சமீப காலத்தில் அவரது முக்கிய பணிகளில் ஒன்று என்னுடைய கட்டுரைகளைப் போடும் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்து "இதையெல்லாம் ஏன் போடுறிங்க. அவர் ஆசிரியரா, நீங்கள் ஆசிரியரா" ? என்றெல்லாம் பேசுவது. எனது –பெரியார் ?– நூலைப் பற்றி ஒரு இதழ் எழுதியபோது அதன் ஆசிரியருக்குப் போன் செய்து "பெரியார் ஒரு தலித் விரோதி. இந்தக் கட்டுரையை எல்லாம் ஏன் போடுகிறிர்கள்" ? என்று கேட்டுள்ளார். ரவிக்குமார் திறமை உள்ளவர் கூர்த்த மதியும் உடையவர். கொஞ்சம் உழைத்தால் நேர்மையாகவே அவர் முதன்மை பெற முடியும். வாசந்தி, சுந்தரராமசாமி புத்திரன் ஆகியோர் அப்பட்டமான பார்ப்பனர்களுக்குப் பின்னால் சுற்றிக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

கே: இலக்கியக்காரர்கள் நான்கு பேர் சந்தித்தால் பேசப்படுகிற முக்கிய கேள்வி: ரவிக்குமார் ஏன் இப்படி ஆனார் ? இந்த வீழ்ச்சி எப்படி ஏற்பட்டது என்பதுதான். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

முதலாவது நான் சற்று முன்பு சொன்னதுபோல கடும் உழைப்பு இல்லாமலேயே முன்னணி இலட்சியக்காரராக நிறுவிக்கொள்ள பலமானவர்களிடம் சரணடைவது அவருக்கு அவசியமாக இருக்கிறது. அப்புறம் மார்க்சியத்தில் சொல்வது போல ஒருவரது வாழ்நிலைதான் அவர்களது கருத்தியல் பிரக்ஞையைத் தீர்மானிக்கிறது. ரவிக்குமாரின் வாழ்வில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், சொகுசுகள் என்பன குறிப்பிடத்தக்கவை. பல நண்பர்கள் அவரிடமிருந்து அன்னியப்படக் கூடிய அளவிற்கு trans-parency இல்லாமல் பல மாற்றங்கள் அவரது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ளன. இந்த மேல் நோக்கிய வளர்ச்சி பல அய்யங்களையும் ஏற்படுத்தியுள்ளது. பொது வாழ்வில் உள்ளவர் என்கிற வகையில் இந்த அய்யங்களை அவர் தெளிவு படுத்தவது நல்லது. அவர் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கும் அவரது கருத்தியலில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்கும் ஒரு உறவு இருப்பதை நான் காண்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கே: கல்யாணி போன்றவர்கள் ரவிக்குமாருடன் நெருக்கமாக இருக்கிறார்களே ?

அப்படி ஒரு பிம்பத்தைத் தோற்றுவிப்பது கல்யாணிக்கு நல்லதல்ல. நாம் ஊழலற்றவர்களாக இருப்பது மட்டுமல்ல, ஊழல் மிக்கவர்களை நியாயப்படுத்தும் கருவியாக நாம் ஆகி விடக் கூடாது என்பது அதைவிட முக்கியம். நெருக்கமாக இருந்தாலும் கூட கல்யாணிக்குத் தெரியாமலேயே பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஒரு எடுத்துக்காட்டு. சென்ற மாதம் ரவிக்குமார் காலச்சுவடு கண்ணனுடன் இலங்கை சென்றிருந்தாரல்லவா ? அன்று கல்யாணியும் கவிஞர் இன்குலாப்பும் என் வீட்டிற்கு வந்திருந்தார்கள். ஒரு பிரச்சினை தொடர்பாக ரவிக்குமாரைச் சந்திப்பது என முடிவு செய்யப்பட்டபோது நான் சொன்னேன் அவர் இலங்கை சென்றுள்ளார் என்று. கல்யாணி சொன்னார் : "இல்லை நேற்றிரவு அவரது வீட்டிற்குப் பேசினேன். அவர் நாகர் கோவில் போயிட்டுகிறார் என்று தான் சொன்னார்கள். ஒரு வாரம் ஆகுமாம்"இல்லை அவர் இலங்கைதான் சென்றுள்ளர் எனச் சொன்னபோது கல்யாணி ஒத்துக் கொள்ளவில்லை. பின்னர் தெரிந்திருப்பார். இன்னொரு சம்பவம் : தனது புதிய நண்பர்களைத் திருப்தி செய்ய ரவி எந்த அளவிற்கு இறங்குவார் என்பதற்கு ஒரு உதாரணம். சில மாதங்களுக்கு முன்பு திண்டிவனம் நீதிமன்ற வளாகத்திற்குள் பிள்ளையார் கோவில் கட்டப்படுவதை எதிர்த்துக் கல்யாணி போராடிக் கொண்டிருந்த சூழல். ரவிக்குமார் அவரைச் சந்தித்து, "நான் வாசந்தியிடம் பேசியிருக்கிறேன் நீங்கள் போய் அவரைப் பாருங்கள். இந்தப் பிரச்சினை பற்றி இந்தியா டுடேயில் ஒரு கட்டுரை எழுத ஒத்துக் கொண்டுள்ளார்கள்" என்று சொன்னார். கல்யாணி ஆர்வமாகச் சென்னை சென்றபோது அந்தக் காரியம் நடக்கவில்லை. அதற்கு பதிலாக இந்தியா டுடேயில் ஒரு புத்தகத்தைக் கொடுத்த *நீங்கள் விமர்சனம் எழுதுவீர்கள் என்று ரவிக்குமார் சொன்னார்" என்று கூறியுள்ளனர். அது சுந்தரராமசாமியும் வசந்தி தேவியும் நடத்திய கல்வி குறித்த உரையாடல் நூல். வேறு வழியின்றி கல்யாணி அதை வாங்கி வந்துள்ளார். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் கடிக்கும் ரவியின் தந்திரத்தைக் கவனியுங்கள். கலியாணியையும் இந்தியா டுடேயில் எழுத வைப்பது. இன்னொரு பக்கம் சுந்தரராமசாமியைப் பற்றி கல்யாணி கையால் எழுத வைப்பது. ஆனால் கல்யாணிக்கே உரித்தான நேர்மை இந்த விசயத்தில் அவரைக் காப்பாற்றி விட்டது. சில நாட்களுக்குப் பின் கல்யாணியைச் சந்தித்த இந்தியா டுடே நிருபர் ஒருவரிடம் புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்த கல்யாணி, "மன்னியுங்கள் இந்த நூலுக்கு நான் மதிப்புரை எழுத இயலாது, சுந்தர ராமசாமி பெரிய எழுத்தாளராக இருக்கலாம். ஆனால் கல்வி பற்றிப் பேச அவருக்குத் தகுதி கிடையாது என்பது இந்த நூலில் நிரூபணமாகியுள்ளது" என்று கூறியுள்ளார். இந்த விசயத்தில் தப்பித்துக் கொண்ட கல்யாணி இன்னொரு விசயத்தில் ரவிக்குமாரின் தந்திரத்தில் மாட்டிக்கொண்டார். தென் மாவட்டங்களில் சில ஊர்களில் பஞ்சாயத்துத் தேர்தல் நடக்காதது பற்றிப் பி.யு.சி.எல் சார்பாகச் சென்ற உண்மை அறியும் குழுவில் கல்யாணியுடன் சுந்தர ராமசாமி புத்திரன் கண்ணனையும் ஒன்றாக உட்கார வைத்தார் ரவி. கல்யாணிக்குச் சமமாகச் கண்ணனை உட்கார வைத்திருப்பதன் நியாயம் என்ன ? கண்ணனுக்கும் தலித் விடுதலைக்கும் அல்லது மனித உரிமைகளுக்கும் என்ன சம்மந்தம் ? பாபர் மசூதி இடிக்கப்பட இருந்த சூழலில் தமிழ்நாட்டிலேயே மசூதி இடிப்பை ஆதரித்துக் கட்டுரை வெளியிட்ட ஒரே இதழ் காலச்சுவடு. அந்த இதழாசிரியரை குழுவில் ஏன் இணைக்க வேண்டும் ? யாராவது ஒரு பதிப்பாளரை உண்மை அறியும் குழுவில் சேர்ப்பதென்றால் விடியல் சிவா போன்ற ஒருவரைச் சேர்க்க கூடாதா ? தலித் பிரச்சனை பற்றி கண்ணனோ, காலச்சுவடோ ஏதும் செய்துள்ளார்களா ? ஏன் இப்படி எல்லாம் செய்கிறீர்கள் ன யாராவது கேட்டால் அவர்களுக்கு ரவிக்குமார் சொல்லும் பதில் : நான் அவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறேன். யார் யாரைப் பயன்படுத்தப் சொல்லுகிறார்கள் ? ரவிக்குமார் இந்தியா டுடேயில் எழுதியது யாருக்குப் பயன் ? கடைசிவரை, வாசந்தி ஆசிரியராக இருந்தவரை இந்தியா டுடே ஒரு இந்துத்துவ இதழாகத்தானே வந்தது. மிக மோசமான கட்டுரைகள் வந்தபோது ரவிக்குமார் அவற்றைக் கண்டித்தார் என்பதற்குச் சான்றுகள் உண்டா ? காலச்சுவடும் சரி இந்தியாடுடேயும் சரி ரவிக்குமார் போன்ற தலித்களம் எங்கள் பக்கம் பார் எனக் காட்டிக்கொள்ளத் அவர்களுக்குத்தான் பயன்பட்டார்களே ஒழிய இவரால் அவர்களது பார்வையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிட இயலவில்லை. ஒன்றை நாம் மறந்து விடக்கூடாது. தலித் இலக்கியத்திற்கான அங்கீகாரங்களும் மரியாதைகளும் இத்தகைய சரணாகதி மூலம் பெறப்பட்டதல்ல. தலித் எழுச்சியின் பின்னணியில் போராடிப் பெற்ற ஏற்பு அது.

<u>கே : ரவிக்குமாரின் கருத்த நிலை காலச்சுவடைப் பாதித்ததைக் காட்டிலும் காலச்சுவடு, இந்தியாடுடேயின் பார்வைகளை ரவிக்குமார்தான் உட்கொண்டுள்ளார் என்கிறீர்களா ?</u>

சந்தேகமென்ன ? ரவியும் கா.சு கண்ணனும் இலங்கை போய் விட்டு வந்தது பற்றிய கிளுகிளுப்புக் கட்டுரை ஒன்றை ரவிக்குமார் காலச்சுவட்டில் எழுதியுள்ளதைப் படித்திருப்பீர்கள். இன்று வரை அவர்களின் பயணத்தின் நோக்கம் முழுமையாக விளக்கப்படவில்லை. அது கிடக்கட்டும். போய் வந்து இவர்கள் ஒரு பேட்டியை "ஆனந்தவிகடன்" இதழுக்கு அளித்தனர். அதில் இலங்கையில் சட்ட ஒழுங்கு, அமைதி எழுத்தாளர்களுக்கும் தமிழர்களுக்குமான சுதந்திரம் எல்லாம் பிரமாதம் என்பது போல ஒரு தொனி. ஈழ அமைப்புகள் மீது, விடுதலைப் புலிகள் மீது நமக்கு விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் அதற்காக உலகின் மிக மோசமான பாசிச அரசுகளில் ஒன்றான சந்திரிகா அரசுக்கு நாம் சான்றிதழ் வழங்கிவிட இயலாது. அன்றாடச் சராசரி வாழ்வு ஒன்றை வாழ முடியாமல்தான் இன்று ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்து அகதிகளாய் அலைகின்றனர். இந்நிலையில் மக்கள் சிலர் உரிமைக் கழகத் தலைவர் என்று சொல்லிக்கொண்டு ஒரு பாசிச அரசுக்குச் சர்டிபிகேட் வழங்குவதன் உள் நோக்கமென்ன ? இங்குள்ள ஈழத் தமிழர்கள் கடும் கோபம் கொண்டு ரவிக்குமாரிடம் கேட்டபோது அவர் சொன்ன பதில் "பத்திரிகைகாரங்க தப்பா போட்டுட்டாங்க". அரசியல்வாதிகள் கெட்டார்கள் போங்கள் பத்திரிகைச் காரர்கள் தப்பாப் போட்டால் மறுப்பு எழுத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டியதுதானே. ஏன் இன்று வரை அதற்கு உங்களுக்கு கைவரவில்லை. ரவிக்குமாரின் அண்டைப்புளுகு அடுத்த சில தினங்களில் அப்பட்டமாகியது. தமிழன் எக்ஸ்பிரசிலும் அதே செய்தி. எப்படி இரண்டு பத்திரிகைகளும் தப்பாய்ப் போட்டார்கள் ? பொய், நடிப்பு ஆகியவற்றின் மூலம் எவ்வளவு காலம் தமிழ் மக்களை ஏமாற்ற முடியும் ?

கே: பின் நவீனத்துய சிந்தனையாளர்களைப் படிப்பதில் காட்டுகின்ற ஆர்வத்தை அவர்கள் குறிப்பிடும் படைப்பாளிகளின் படைப்புகளைப் படிப்பதில் நீங்கள் காட்ட வேண்டும் என உங்களுக்கு ஒரு அறிவுரை வழங்கியுள்ளாரே ?

ரவிக்குமார் எனக்கு அறிவுரை வழங்கத் தகுதியானவர். பல சந்தர்ப்பங்களில் அவர் னக்கு வழங்கிய அறிவுரைகள் நிரம்பப் பயனளித்திருக்கின்றன. குறிப்பாக நவீனத்துவம் குறித்தெல்லாம் அவர்தான் எனக்கு ஆர்வமூட்டியவர். நல்ல புத்தகங்கள் பலவற்றை எனக்கு அறிமுகப்படுத்தியவரும் கூட. நான் இதுவரை அவருக்கு ஏதும் அறிவுரை வழங்கியதில்லை. இதன் முதலாக இப்பபோது உங்கள் மூலமாக ஒரு அறிவுரை சொல்லவிரும்புகின்றேன். அவர் மறுபடியும் படிக்கத் தொடங்க வேண்டும். கொஞ்சம் நேரம் ஒதுக்கி எழுத வேண்டும். படிக்காமல் நன்கு படிக்கக் கூடிய நண்பர்களுடன் விவாதிக்காமல் இலக்கிய வானில் ஒரு Authority ஆக விளங்க வேண்டும் என்பதற்காக அவர் புகுகிற சரணாலயங்கள், செய்கிற சேஷ்டைகள் பெருமைக்குரியதாயில்லை. படிப்பற்றுப் போனதால் அல்லது சமீபத்திய எழுத்துக்களெல்லாம் வெறும் reporting அளவிற்குச் சுருங்கிப் போயுள்ளதைத் தோழர்கள் கவனிக்க வேண்டும். தனது அகட விகட தந்திரங்கள் மூலம் பாண்டிச்சேரி நண்பர்களான கண்ணன் எம் போன்ற படிப்பாளிகளிடமிருந்தும் ரொம்ப விலகியுள்ளது அவருக்குப் பெரிய இழப்பு என்பதை உணர வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக காசு கண்ணனின் பாக்கெட்டில் உட்கார்ந்து கொண்டும் பெரியாரை தலித் விரோதியாகச் சித்தரிக்கும் வேலைகளைத் தவிர்க்க வேண்டும். உங்கள் கருத்து உண்மையிலேயே அதுவானால் விரிவான ஆய்வுக் கட்டுரையாக அதை முன் வைத்து ஒரு விவாதத்திற்குத் தயாராக வேண்டும்.

கே : கடைசியாக ஒரு கேள்வி : ரவிக்குமார் உங்களின் மிகவும் நெருக்கமான நண்பராக இருந்தவர் அவரு காலச்சுவடு பேட்டி உங்களை மிகவும் பாதித்ததா ?

உண்மைதான். கடுமையாகப் பாதிக்கப்பட்டேன். உடல் நலம் கெடுகிற அளவிற்கு ஒன்றும் சொல்ல வேண்டாம் எனச் சுமார் இரண்டு வருடம் அமைதி காத்தேன். தொடர்ந்து அவர் என்னைப் பற்றி அவதூறு சொல்வதும் – சமீபத்தில் இலங்கையிலிருந்து வெளிவரும் –தினக்குரல் பத்திரிக்கையில் இணைபிரியாத சகா காசு கண்ணனுடன் அளித்தள்ள பேட்டி எனது கட்டுரைகளைப் போடுகிற பத்திரிகையாசிரியர்களை மிரட்டுவதும், தொடர்வதால் இப்போது நான் பேச வேண்டிய அவசிய மேற்பட்டது. காலச்சுவடு பேட்டியில் ஏற்பட்ட வேதனையைத் தீர்த்தவர்கள் நண்பர்கள்தான். தமிழகமெங்கிலும் பல்வேறுபட்ட தோழர்கள் உடனடியாகப் போனில் தொடர்பு கொண்டு தங்களின் **** ஐ உறுதிப் படுத்தினர். பேட்டி தொடர்பாகக் காலச்சுவடுக்கு வந்த வாசகர் கடிதங்களில் 90 சதம் ரவிக்குமாரைக் கண்டிப்பதாகவே இருந்தது. கோவை சிவா, குறிஞ்சி, சுகுமாரன், கே.ஏ.குணசேகரன், மேட்டூர் தோழர்கள், எல்லாவற்றுக்கும் மேலாக வேல்சாமி, சாரு நிவேதா, விஜயன், வளர்மதி,... இப்படிப் பல தரப்பினர் ஆதரவு நிலை எடுத்தனர். புலம் பெயர் நண்பர்கள் எனப் பலரும் ரவியின் பேட்டியை, குறிப்பாகக் காசு கண்ணன் அடிவருடி மனுஷ்யபுத்திரன் கும்பலுடன் இணைந்து கொண்டு ரவிக்குமார் என்னைத் தாக்கியதை அனைவரும் கண்டித்தனர். பிரிட்டோ கோவிந்தசாமி, பழனிச்சாமி, ஒடைதுரை அரசன் போன்ற தோழர்கள் காட்டிய அன்பும் பழமலய் இங்குலாப் போன்றவர்கள் தெரிவித்த ஆதரவும் என்னை உயிரூட்டின. அந்தச் சந்தர்ப்பத்தில் எனது மகளின் திருமணம் நடந்தது. ரொம்பவும் வரையறுத்து அழைப்பிதழ்கள் அனுப்பினேன். மார்க்ஸ் பாதிக்கப்பட்டுள்ள ஒரு நிலையில் அவருடன் ஒரு solidarity ஐயக் காட்ட வேண்டும் என்ற உணர்வுடன் சகல தரப்புத் தோழர்கள் வந்து குவிந்தது எனக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

## III

கே: தமிழ் இனி 2000 தொடர்பான உங்கள் அறிக்கைக்கு எதிர்வினை எப்படி இருந்தது ? எதிர்பார்த்த அளவிற்கு இருந்ததா ?

அறிக்கையைக் கொடுக்கும் போது நாங்கள் மட்டும்தான் கொடுத்தோம். ஆனால் படிப்படியாகப் பலரும் எங்கள் நிலையை ஆதரித்தனர். ஒட்டுமொத்தமாய்ப் பார்க்கும்போது காலச்சுவட்டின் மீதான கண்டனங்கள்தான் அதிகம். நிறப்பிரிகை தவிர புதிய கலாச்சாரம், தாமரை, நந்தன், தலித் முரசு, குங்குமம், ஆறாந்திணை, எச்சில் (பாரிஸ்), தினக்குரல் (கொழும்பு) இதயம் பேசுகிறது ஹெர்குலிஸ் எனப் பல இதழ்களும் அறிவுமதி, வில்வரத்தினம், இன்குலாப், இளவேனில் போன்ற கவிஞர்களும் –தமிழ் இனி–க் கும்பமேளாவைக் கண்டித்தனர். இந்தக் கண்டனங்கள் எல்லாவற்றிக்குமே நிறப்பிரிகை அறிக்கையே முன்னோடியாக இருந்தது. கிட்டத்தட்ட ஆறு பக்கம் கண்டனக் கட்டுரை வெளியிட்டிருந்த தாமரை கடைசிப் பத்தியில் நிறப்பிரிகை விமர்சனத்திலுள்ள நியாயத்தின் பால் கவனத்தைத் திருப்பியது. எல்லோருமே இந்தப் கும்பமேளாவின் பின்புலமாக இருந்த லாபநோக்கு, பணம் பண்ணும் அசுர வேகம் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டியது குறிப்பிடத்தக்கது. அதைவிடவும் இலக்கிய அதிகாரியாகத் தம்மை நிறுவிக் கொள்ளும் காலச்சுவட்டின் முயற்சியை நிறப்பிரிகை வலியுறுத்தியது முக்கியமானது. மிக விரைவில் காலச் சுவடு அம்பலப்பட்டப் போன விஷயங்கள் ரசமானவை. காசு கண்ணன், அடிவருடி மனுஷ்யபுத்திரன் போன்றவர்கள் பத்திரிகை அலுவலகங்களை மிரட்டுவது, முதலாளிகளுடன் தொடர்பு கொண்டு பணியாளர்களை நீக்குவது, போட்டி வெளிவீட்டாளர்கள் மீது வழக்குத் தொடர்வது, கூட்டங்களில் கொஞ்சம் தண்ணி அருந்தி விட்டு வந்த நிற்பவர்களைக் கண்டிக்கும் ஒழுக்க போலிசாகத் தம்மைக் காட்டிக் கொண்டது, எல்லாவற்றிற்கும் மேலாக காலச்சுவட்டில் எழுதும் காசு கண்ணனின் தடித்தனமான எழுத்துக்கள் ஆகியவற்றின் மூலம் காச்சுவடு அம்பலப்பட்டது. எல்லாவற்றிக்கும் நிறப்பிரிகை தானே காரணம் என்ற வெறியோடு காலச்சுவடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்த நான்கைந்து இதழ்களில் சுமார் அய்ந்து பக்கங்கள் என்னைத் திட்டுவதற்காக ஒதுக்கியது பலருக்கும் எரிச்சலூட்டியதை நீங்கள் அறிவீர்கள். ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் இனிப் பிரச்சனையில் சென்னையிலுள்ள பார்ப்பன" இன்டலச்சுவல்ஸ்" எல்லாம் காலச்சுவடு பின்னால் அணிதிரண்டு நின்றனர். கும்பமேளாவைக் கடுமையாக எதிர்த்தவர்களில் பெரும்பாலோர் பார்ப்பனரல்லாதவர்களாகவும் தலித்கள் மற்றும் இடதுசாரிகளாகவும் இருந்தனர்.

<u>கே: காலச்சுவடு அதை ஒட்டி உங்கள் மீது சில குற்றச்சாட்டுகளை வீசியிருந்தது. காசு கண்ணனுக்கு முன்னதாகச் சென்று சரிநிகர் குழுவை நீங்கள் சரிசெய்ய முயன்றீர்கள் என்றும் மகளின் மூலமாக உங்கள் அறிவிக்கையைக் குமுதத்தில் வெளியிட முயற்சித்தீர்கள் என்றும் இயலாதபோது நீங்களாக அதை வெளியிட்டீர்கள் என்றும் எழுதினார்கள் உண்மை என்ன ?</u>

அவர்கள் எழுதியவை அப்பட்டமான பொய்கள் காலச்சுவட்டிற்கும் சரி நிகருக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டுக்கிட்டத்தட்ட இறுதிச் சுற்றில்தான் அந்தச் சந்திப்பு நடந்தது. காலச்சுவடு முன் கை எடுக்கும் இந்த முயற்சியில் நாங்கள் பங்கு பெற இயலாது என்று முன்பே சொல்லியிருந்தேன். நிகழ்ச்சியை இறுதி செய்வதற்காக வந்திருந்த சரிநிகர் கோஷ்டியினர் – அதாவது சேரனின் ரத்து உறவுகள் – என்னைச் சந்திக்க ஆளனுப்பினர். இரு முறை அவர்கள் சார்பாக ஆராந்திணை மதுசூதனன் என்னை வந்து அழைத்தார். அதன் விளைவாக மதுசூதனனுடன் அவர்கள் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று காலச்சுவட்டுடன் இணைந்து செயல்பட முடியாத நிலையை விளக்கி விட்டுத் திரும்பினேன். சேரன் கோஷ்டியினருக்கு இம்மியேனும் நேர்மை இருந்திருந்தால் காசு கண்ணனின் இந்தத் தடித்தனமான பொய்யை மறுத்திருக்க வேண்டும். அவர்களிடம் இந்தப் பண்புகளை எல்லாம் எதிர்பார்க்க முடியுமா என்ன ?

இரண்டாவது. குமுதம் எங்களிடம் கருத்தைக் கேட்பதற்கு முன்னதாகவே எங்கள் அறிக்கை அச்சாகிவிட்டது. விநியோகமும் சிறிய அளவில் தொடங்கிவிட்டது. இதை அறிந்துதான் குமுதம் editorial கூட்டத்தில் இது குறித்து ஒரு controversy செய்ய வேண்டும் என முடிவு செய்து அதற்காக என் மகள் பாரதியும் காலச்சுவட்டிற்கு வேண்டிய சங்கர ராம சுப்பிரமணியனும் அனுப்பப்பட்டனர். குமுதத்திற்கு உரிய வகையில் அதில் ஒரு பக்கம் வருமாறு எங்களின் கருத்தை எழுதிக் கொடுத்தேன். அதற்கு உரிய பதில் தருவதற்குத் தயாரற்ற காசு – சரிநிகர் கும்பல் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி அக்கட்டுரை குமுதத்தில் வெளிவருவதை தடுத்தனர். இதுதான் உண்மை. குமுதம் ஆசிரியர் குழுவில் இந்த பாபு, முத்து, சங்கர் முதலியோரிடம் இது குறித்து நீங்கள் கேட்கலாம்.

என் மகளையும் தொடர்பு செய்து தேவையில்லாமல் மோசமாகக் கா.சு. கண்ணன் எழுதியதை மஞ்சள் எழுத்து – காலச் சுவடு ஒரு மஞ்சள் பத்திரிகை எனப் பகிரங்கமாகச் சென்னையில் ஒரு கூட்டத்தில் கண்டித்தார் கவிஞர் இன்குலாப் எதிரே அன்று சாட்சியாக அமர்ந்திருந்தது அடிவருடி மனுஷ்யபுத்திரன்.

அடுத்த ஒரு வாரத்தில் மனுஷ்ய புத்திரன் ஒரு தந்திரம் செய்தார். இன்குலாப் இப்படிப் பேசுவதை விட்டுவிடுவதாவது. மறுபடியும் காலச்சுவடு வட்டத்துக்குள் இன்குலாப்பையும் இழுத்து அடக்கி காட்ட வேண்டும் என்ற முனைப்போடு இன்குலாப்பிற்கு ஒரு கடிதம் எழுதினார். கலைஞர் கைதை ஒட்டி ஒரு விவாத அரங்கு வெளியிடுதாகவும் அதற்கு இன்குலாப் கட்டுரை எழுத வேண்டும் என்று காலச்சுவட்டில் எழுதுவதற்கு வேறு ஆளைப் பாருங்கள் எனக் கவிஞர் இன்குலாப் மறுத்த கதையை இவர்கள் வெளியே சொல்வார்களா ? மனுஷ்யபுத்திரன் பேசும் தார்மீக நெறியின் லட்சணம் இதுதான். இன்குலாப் வாழ்ந்த காலத்தில்தான் மனுஷ்ய புத்திரர்களும் வாழ்கின்றனர்.

<u>கே : கலைஞர் கைதை நெருக்கடி நிலையுடன் ஒப்பிட்டு காலச்சுவடு எழுதியதே.</u>

அபத்தம். நெருக்கடி நிலை பற்றியோ, மனித உரிமைகள் பற்றியோ காலச்சுவடு கும்பலுக்கு என்ன தெரியும். நெருக்கடி காலத்தில் யார் யார் அதை எதிர்த்தனர். எவ்வளவு பேர் கொல்லப்பட்டனர். சிட்டிபாபு முதலியார் எத்தகைய சித்திரவதைகளுக்கு ஆளாயின என்பதெல்லாம் இவர்களுக்குத் தெரியுமா ? கலைஞர் கைது விஷயத்தைப் பொறுத்த மட்டில் அது ஒரு மூர்க்கமான அரசு செய் முட்டாள்தனமான நடவடிக்கை. இதில் ஒரு பெரிய அரசியல் முரண் என்னவெனில் இந்த நடவடிக்கையின victimகள் இன்னொர பக்கம் இதை விட வலுவான இன்னும் மூர்க்கமான மத்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் இரண்டாவது கட்டத்தில் மோதல் என்பது மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமாக மாறியது, மத்திய அரசு வெந்தது, ஒரு வாரத்திற்குள் கலைஞர் விடுதலை செய்யப்பட்டார். இதன் மூன்றாவது அம்சம் என்னவெனில் இரு தரப்பினருக்கும் political mobilisation-ல் இறங்கவில்லை. ஒரு ராமதாஸ் அல்லது திருமாவளன் கைதாகி இருந்தால் ஒரு அரசியல் அணிதிரட்டல் நடந்திருக்கும் சாலை மறியல் போல ஏதே ஒன்று நடக்கும். ஆனால் இங்கே என்ன நடந்தது. அரசியலின் இடத்தை media எடுத்துக் கொண்டது. அணிகள் தொலைக்காட்சி பெட்டி முன் அமர்த்தப்பட்டனர். பெட்டிப் பாம்பாகச் சுருட்டி வைக்கப்பட்டனர். வலிமையான கார்ப்பரேட் செக்டாரின் பிரதிநிதியா மாறன் மற்றும் அவரின் சன் டிவிக்கு எதிராக ஜெயா டி.வி. தோற்றது. இப்படி எல்லாம் இந்தப் பிரச்சினை அலசப்பட வேண்டு இந்த மாதிரி விஷயங்களில் பிற பெரும் பத்திரிக்கைகளுடன், mainstream குரலுடன் இணைந்து மனித உரிமைக்காக சிலுப்புவது எளிது. அதைத்தான் காலச் சுவடு செய்தது. உடனே பலனும் கிடைத்தது. கலைஞரிடம் பாராட்டுக் கடிதமாக.

<u>கே: மௌனி போன்ற எழுத்துக்கள் வேண்டாம், சாரு நிவேதிதாவின் எழுத்துக்கள் தான் பின் நவீன எழுத்து, அதுதான் தேவை</u>

www.tamilarangam.net

என்று நீங்கள் சொல்வதாக ரவிக்குமார் சொல்லியுள்ளாரே ?

எங்கே அப்படிச் சொன்னேன் என்று ரவிக்குமார் சொன்னால் அது நேர்மையான விவாதத்திற்கு அடிகோலும். எதார்த்தவாத எழுத்துக்கள் உட்பட அந்த விதமான எழுத்துக்களும் தேவையில்லை என நான் சொன்னதேயில்லை. பலவிதமான எழுத்துக்கள் தேவை என்கிறேன், அதனால்தான் சாருவின் எழுத்துக்களைப் புறக்கணிக்க கூடாது என்கிறேன். அவை நமது ஒழுக்க மதிப்பீகளைக் கேலி செய்கிற கலகப் பிரதிகள் என்கிறேன். மற்றபடி அவரது எழுத்துக்களை பின் நவீனத்துவ எழுத்துக்களின் மாதிரி வடிவமாக நான் சொன்னதில்லை. செக்ஸை அவர் அளவுக்கு மீறிப் பயன்படுத்துவதில் எனக்குப் சில மாறுபாடுகள் கூட உண்டு. தமிழ்ப் சூழலில magical realism பற்றி ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். பார்ப்பனர்கள் ரொம்பவும் ratonal ஆனவர்கள் அவர்களுக்கு magical ஆக folk மனநிலையுடன் சிந்திக்க இயலாது. கவிஞர் அக்னிபுத்திரன் கோவையில் நடந்த ஒரு கூட்டத்தில் இந்த அம்சத்தை நன்றாக விளக்கினார். யோசித்துப் பாருங்கள். இங்கே magical ஆக எழுதகூடிய எழுத முயற்சிக்கிற பலர் கோணங்கி, கவுதம சித்தார்த்தன், பிரம்மராஜன் எஸ். ராம கிருஷ்ணன் எல்லோரும் ரொம்பவும் சாதாரணப் பின்புலத்தில் தோன்றியவர்கள். தலித்களைப் பொருத்த மட்டில் எழுத்து என்பது ஒரு தன் வெளிப்பாடாக அமைகின்றது. magicalஆக எழுத முடியாத பார்ப்பனர்கள் இதைச் கடுமையாக எதிர்க்கின்றனர். அவ்வளவுதான். இலக்கியப் புனிதங்களைக் கட்டுடைப்பது பற்றிப் பல முறை பேசியாயிற்று. இரண்டாயிரம் ஆண்டுகாலத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கிய பங்காற்றியுள்ளவர்கள் பார்ப்பனர்களும் வேளாளர்களும் மட்டுமே. சாதியில், தீண்டாமையில், பார்ப்பனிய ஒதுக்கலில் இவர்கள் எந்த நாளும் குற்ற உணர்வு கொண்டதில்லை. பெருமிதமே கொண்டுள்ளனர். எனவே இவர்கள் உருவாக்கிய பிரதிகளைப் படிக்கும் பிற்படுத்தப்பட்ட, தலித் வாசர்களிடம் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தக் கூடியவையாக இவை உள்ளன. ஒரு தலித் அல்லது முஸ்லிம் சுந்தர ராமசாமியையோ, புதுமைப்பித்தனையோ, பெரும்பாலான இலக்கியப் புனிதர்களையோ படித்தால் எஞ்சுவது குற்ற உணர்ச்சியே. வரும் தலைமுறை எழுத்தாளர்களிடமாவது இந்தக் குற்ற உணர்ச்சி பற்றிய பிரச்சனையை உருவாக்க வேண்டும் என்பதுதான் எங்கள் முயற்சியாக உள்ளது. சுருங்கச் சொல்வதானால் ஒரு உயர்சாதி எழுத்தாளரைப் பொருட்டில் எழுத்து என்பது அவனிடமிருந்த அவன் தப்பிப்பது ஒரு great escape ஒன்றை அவர் மேற்கொள்ள வேண்டும். தமிழ்ப் சூழலைப் பொருத்த மட்டில் எத்தனை எழுத்தாளர்கள் இந்த escacp வென்றிருக்கின்றனர் ?

கே : தமிழில்இன்றை விமர்சனம் ஆரோக்கியமாக இல்லை. மார்க்ட்சிஸ்ட் மற்றும் பின் நவீனத்துவ விமர்சகர்கள் செய்யும் விமர்சனங்கள் இலக்கியத்தின் மேலேயே வெறுப்பு ஏற்படுத்துவதாக உள்ளது என்கிற ரவிக்குமாரின் குற்றசாட்டு பற்றி என்ன சொல்கிறீர்கள் ? சுந்தரராமசாமி ஜீவாவைப்பற்றி எழுதுவது அதைப் படிக்கத் தூண்டுவதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிடுகிறாரே.

மரத்தை மறைத்தது மாமத யானை என்பது போல இன்று ரவிக்குமாருக்கு முன்னால் எல்லாவற்றையும் மறைத்து நிற்பது சுந்தர ராமசாமியின் திரு உருதான். தனக்குப் பிடிக்காதவர்களை குறிப்பாக இடது சாரிகளைச் சு.ரா எவ்வளவு இழிவாகப் பேசி இருக்கிறார் என்பதற்கு தி.க.சி. பற்றி அவர் பல ஆண்டுகளுக்கு முன் எழுதியிருப்பவை. சான்றுகள்., எல்லா இலக்கியங்களில் மீதும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் எழுதுவது அடித்தள நோக்கிலான விமர்சனத்தின் வேலை அல்ல. சுஜாதாவின் மஞ்சள் ரத்தம் பற்றி ரவிக்குமார் எழுதியது அப்படி ஆர்வத்தைத் தூண்டும்படியாக இருக்கிறதா ? நானும் மணியரசனும், நானும் சிவத்தம்பியும் இணைந்து பாரதி பற்றி எழுதியுள்ள நூாற்களை பாருங்கள் கி.ரா பற்றி நான் எழுதவுள்ளவற்றைப் பாருங்கள் வெறுப்பைத் தூண்டும் படியாகவா உள்ளன. புதுமைப் பித்தனைப் பற்றி நான் எழுதியதில் கூட வெறுப்பைத் தூண்டுமாறு என்ன உள்ளது, தவிரவும் ஒரு தலித்தாக ஒரு இசுலாமியனாக, ஒரு பெண்ணாக இருந்து இந்த இலக்கியங்களை வாசிக்கும்போது ஏற்படும் இந்த நிலையைத் நாம் விமர்சனத்தில் வைக்க வேண்டும். ரவிக்குமார் இந்த நிலையைத் தாண்டி –மேலே சென்றுள்ளது பெருமைக்குரிய ஒன்றாக எனக்குத் தோன்றவில்லை. தமிழில் இடது சாரி விமர்சனங்களைப் பற்றி பல மாற்றுப் பார்வைகாள நாளுங்கூட முன் வைத்திருக்கிறேன். ஆனால் இப்படி ஒரே அடியாக மட்டை அடி அடித்து இடது சாரி விமர்சனத்தைக் காலி செய்வது அபத்தம். இலக்கியத்தின் சமூக வேர்களைச் கண்டறிவதிலும், நாட்டுப்புற இலக்கியத்தில் வெகுஜன முக்கியத்துவத்தைக் சுட்டிக் காட்டியதிலும் அவர்களின் பங்கு மிக முக்கியமானது. சொல்லப்போனால் கடந்த கால் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகச் சிந்தனைப் போக்கில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியவர்களில் 90 சதத்தினர் இடது சாரிகள் மற்றும் சாதி ரீதியாய் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள்தான். வலதுசாரிகளும் பார்ப்பனர்களும் இத்தகைய அறிவும் பங்களிப்பைச் செய்யவில்லை என்பதை நன்கு யோசித்தால் விளங்கலாம்.

கே : இறுதியாக ஒரு கேள்வி : எத்தனையோ எதிர்ப்புகள் சாதகமற்ற பின்புலன்களின் மத்தியில் பணி செய்கிறீர்கள். பெறற்கரிய பேறு என எதைக் கருதுகிறீர்கள் ?

இளைஞர்களின் நட்பு. எப்போதும் நான் இளைஞர்கள் மத்திலேயே வாழ்கிறேன். அவர்களோடு சிந்திக்கிறேன், விவாதிக்கிறேன், குடிக்கிறேன், கும்மாளமிடுகிறேன், துன்பங்களை வெல்கிறேன். 52 வயதாகியும் இளமையாக இருக்கிறேன். இளமையாகச் சிந்திக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்திரன் கவிதைகளில் நகரம்

–வஸந்த் செந்தில்

அந்நியன் (டிச.82), முப்படை நகரம் (ஜன.91), சாம்பல் வார்த்தைகள் (ஜன.94) என்ற இந்திரனின் இந்த மூன்று தொகுப்புகளையும் வாசிக்கும்போது, முதல் வாசிப்பிலேயே இந்திரனின் கவிதை முழுக்க நகரம் எத்தனை பிரதான இடத்தைப் பெறுகிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

இந்திரன் நகரத்திலேயே பிறந்து (பாண்டிச்சேரி), நகரத்திலேயே வளர்ந்து (சென்னை, மும்பை, அவுரங்காபாத்), நகரத்திலேயே (சென்னை) வாழ்கிறவர். அதனாலேயே தன் அடையாளங்களை நகர வாழ்விலிருந்து பெறுவதும், நகரத்தின் அடையாளங்களை தன்னோடும், தான் சார்ந்த சமூகத்தோடும் பொருத்திப் பார்ப்பதும் அவருக்கு இயல்பாக நடந்திருக்கிறது. சங்கக் கவிதைகள் தங்களுடைய பின்புலமாக இயற்கைக் காட்சிகளை வைத்திருப்பதுபோல, இந்திரனின் யாப்பிலக்கணம் துறந்த கவிதைகள் நகரத்தின் அசைவையும், அசையாமையையும் தங்களுடைய பின்புலமாக வைத்திருக்கின்றன. இந்திரனின் கவிதைகள் எங்கும் நகரமயமாக்களைப் பேசுவதில்லை. நகரத்தைப் பேசுகின்றன. இந்திரனைப் பொறுத்தவரை நகர வாழ்வு நரகமாகவும் இருக்கிறது. சொர்க்கமாகவும் இருக்கிறது. இந்திரன் இரண்டையுமே பேசுகிறார். சில நகரங்களில் இரண்டையும் பேசுகிறார். சில நகரங்களில் இரண்டையும் பேசாமல் தன்னை தன் நகரத்தோடு ஒப்படைத்துக்கொள்கிறார்.

"கையில் இருஜாதி நாயொன்றை இறுகப்பற்றி கான்வாஸ் ஷு சகிதம் கால நடை பயில்வதில" தொடங்குகிறது இந்திரனின் நகர வாழ்வு. "இன்ஷீரன்ஸ் உயிலென்று கவலைகள் ஏதுமின்றி" அணில் துள்ளிக் கொண்டிருப்பதை கவனித்துக் கொண்டுபோகிறார். "சோடியம் விளக்குகள் காலை எட்டு மணிக்கு சூரிய நமஸ்காரம் செய்கின்றன" அவர் பாதையில் (விளக்கை அணைக்க மறந்த கார்ப்பரேஷன் ஊழியர்கள் ஞாபகத்திற்கு வந்து நகரம் இன்னும் அர்த்தமடைகிறது). "நர்ஸரிப் பள்ளிகளில் குழந்தைகள் பாடுகிறார்கள் ஆங்கிலத்தில் கடவுள் வாழ்த்து", கடந்து போகும் போது "நகரத்தின் சாக்கடை கடலில் கலக்கும் இடத்தில் சிறுவர்கள் மீன் பிடித்து விளையாடுகிறார்கள்". "இருட்டைத் துடைக்க முயற்சித்து கலங்கரை விளக்கம் ஏமாறுகிறது". பகலல் "பிராட்வேயின் பிளாட்பாரத்துக் கடைகளில் புதுப்புது முகங்கள் தேடி அலுத்துப் போகிறார்."

இந்திரன் கவிதையில் காத்திருக்கும் இடங்கள் "ரயில்கள் நிற்காத ஒரு ரயில் நிலையத்தின் தனிமையில்", "பிளாட்பாரத்து பெஞ்சில்", "கடலோரசிலைக்கு போட்ட டியூப்லைட் வெளிச்சத்தில் நடப்பது " பாண்டிச்சேரி கடற்கரை மற்றும் காந்தி வீதி. பணி முடிந்து "மின்சார ரயிலின் கூட்ட நெரிசலில் வீடு திரும்பிக் கொண்டிருந்த இந்திரனை கூப்பிட்டது வானத்து நிலா".. நேரமில்லை அவருக்கு. "சாக்கடை நீரிலிருந்து நிலா மறைகிறது". இந்திரனுடன் "அடுக்கு மாடிகளில் வாழ்கிறவர்கள் சூரியனைக் கான்க்ரீட்டில் புதைக்கிறார்கள் டி.வி. ஆன்டனாவில் குருவிகளின் இசை" "சோடியம் விளக்குளின் மஞ்சளில் நனைந்த மனிதர்கள் பொய் கூறும் பெட்டி முன்னால் மறுத்துப் போகிறார்கள்" வீட்டில் தன் அறைக்குள் ஒதுங்கிவிடுகிற இந்திரனின் "மேசைடிராயர் முழுவதும் கனவுகள்" இருக்கின்றன. கனவை மீறி "சுவர்கடிகாரத்தின் உலோக முட்கள் இரக்கமின்றி நகர்ந்து நகர்ந்து வாழ்வின் நிமிஷங்களை என் கையிலிருந்து பிடுங்கும்" என்று நிகழ்வை அலுத்துக் கொள்கிறார். எதுதான் உங்களை இயக்குகிறது என்றால், "என் ஒரே நம்பிக்கை இந்த அச்சு இயந்திரம்" என்கிறார். ஏதாவது அடித்துக் கொடுங்கள் என்ற போது இந்திரன் அடித்துக் கொடுப்பது "நகரம் எனது சம்மதம்" சம்மதமின்மையுடன் தன் ரேகைகளை என்மீது பதித்திருக்கிறது" என்ற உரைநடை வரிகளைத்தான்.

நகரம் முழுக்க சுற்றித் திரிந்தாலும் இந்திரனைப் பெரிதும் கவர்வது கடலும், சூரியனும்தான். சூரியன் திரும்பத்திரும்ப அவர் கவனத்திற்கு வந்தாலும், கடல்தான் இந்திரனைப் பெரிதும் வசீகரிக்கிறது. அவர் முன்னால் "கருத்த உடம்பை முறுக்கிக் கொள்ளும் ஒரு மாபெரும் விலங்கைப் போல் உயிரோடு புரள்கிறது". ஒரே நேரத்தில் "உருகிய உலோகமாய் கனத்துப்போய் காட்சியளிக்கிறது". அவரே சொல்வது போல "நேற்றைக்குப் பார்த்தது போல் இல்லை இன்றைய கடல்". தன் இதயத்தை கடல் சாப்பிட்டுவிட்டதாகவே கருதுகிறார் ("உடைந்த பாலத்தின் இரும்பைத் தின்றது போல் தின்றுவிட்டது என் இதயத்தின் வால்வுகளை இந்தக் கடல்"). இந்திரனின் காதில் "சதா கடல் புரளும் ஓசை". திரும்பத் திரும்ப கடலுக்குப் போகிறாரே கடற்பருந்து போல என்று நினைத்தால், அவரே மறுத்து, "நான் கடற்பருந்து இல்லைதான் நகரத் தோட்டியாய்" என்ற, தான் அலைகளில் திரும்பத் திரும்ப நனைவதற்குக் காரணம் சொல்கிறார். கடலின் அழைப்பு இந்திரனுக்கு சாதாரனமாக இல்லை. "நான் வேண்டாமலேயே நீ ஓதும் மந்திரங்கள் என்னை அன்றாடம் கடற்கரைக்கு அழைக்கும்" என்று தெளிவாகச் சொல்லிவிடுகிறார்.

கவிதை செய்யப்படுவத என்பதை எண்பது சதவிகிதம் ஏற்றுக் கொள்கிறார் இந்திரன். (கணையாழியில் அப்படி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்). அதனாலேயே அவர் தொகுப்பு முழுக்க spontanity குறைவு கண்மண் தெரியாமல் கவிதை வந்து விழுவதில்லை பல fragment களை இணைத்துக் கோர்த்தது போல பல கவிதைகள் காணப்படுகின்றன. தான் என்ன எழுதுகிறோம் என்பதல் மிகக் கவனமாக இருப்பதால் கருத்துக்களில் பிசகு ஏற்படுவதில்லை. அவை ஆழ்ந்த இறுக்கங்களில் பதப்படுத்தப்படுவதால் சில இடங்களில் கவிதைத் தன்மை கை நழுவிப் போவதைப் பற்றியும் அவர் கவலைப்படுவதில்லை. கவிதை வரிகளை முன்னும், பின்னுப் வைத்து அவற்றில் நகரத்தைப் பொறுத்தவதை அவர் மணா மிக விழிப்பாகச் செய்திருக்கிறது. placement of urban details in between the poety lines in a conscious state.

தமிழில் நகரத்தின் அடையாளங்களையும், நகர வாழ்வையும் தன்னுள் கொண்டிருக்கிற வேறு சிலரின் கவிதை வரிகளைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவனிக்கும்போது (என் கண்ணில் பட்ட) "கையைத் தூக்கினால் பதம் பார்க்கும் மின்விசிறி" என்று தன் சிறிய வீட்டை வர்ணிக்கிற அழகிய சிங்கர் "யாருடனும் இல்லை" என்று அறிவிக்கும்போதே, நகரம் தன் இயல்பொன்றை வெளிப்படுத்திவிடுகிறது. "டிக்கெட்டுக்காக நெருக்கும் கூட்டத்தின் இடைப்படுதல் இடிபடுதல்" பற்றி மெல்லச் சொல்லிச் செல்கிறார் அகல்யா. "ஒவ்வொரு நாளும் டி.வி. பெட்டியின் முன் பதட்டத்துடன் அமர்ந்திருக்கிறேன்" என்கிற மனுஷ்யபுத்திரன் பெரும்பாலும் எதிர்பார்ப்பது நகரம் தருகிற திகிலை. விமானத்தை "அலுமினியப் பறவைகளாக" பார்க்கிற கோ. ராஜாராமிடம் "வெட்டி முறிச்சதால் உடலுங் களைத்துப் போய் விட்டது போல் என்ன விடிந்தும் நெடுந்தூக்கம் ? எட்டுமணியாச்சு திரைகாணம் வச்சுட்டான் விட்டெறிங்க போர்வை வேண்டாமா காப்பி" ?என்று என்னிடம் தினமும் கேட்கப்படுகிற கேள்வி கேட்கப்படுகிறது. பாரதிதாசனின் இருண்ட வீட்டில் தலைவர் உடனே ஹோட்டலில் போய் சாப்பிட்டு வருகிறார். –"அண்ணன் உடனே அருகிலிருந்த உணவு விடுதியில் உண்டு வந்தார்".

இதுபோலப் பலருமே நகரம் பற்றி அங்கங்கே பதிவு செய்தாலும், யாரும் திட்டமிட்டு செய்தது போன்ற ஒரு உணர்வு தெரிவதில்லை. ஆனால் இந்திரனிடம் அந்த "விழிப்பு" இருக்கிறது. திட்டமிட்டு அல்லது விருப்பப்பட்டு நகரத்தைத் தன் கவிதைகள் முழுக்கக் கட்டி எழுப்புகிறார்.

இந்தக் கோணத்தில் இந்திரனை தமிழில் ஒரு "எக்ஸ்பிரஷனிஸ்டாக" (expressionist) எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

முன்னதாக expressionism பற்றி குட்டியாக விவரித்து விடுகிறேன். 1880 லிருந்து 1920 வரை எல்லா இடங்களும் ஜெர்மனி, பிரான்ஸ் பக்கம் தோன்றி, ஒரு எபிடமிக் போல கலைஞர்களைத் தாக்கிக் கொண்டிருக்க, அதில் ஒன்றாக எக்ஸ்பிரஷனிஸம் அலை ஆரம்பித்தது. ஸ்வீடிஷ் நாடகக் கலைஞரான Strenberg (1849–1912) இதனை விடாமல் பயன்படுத்தி, அந்நேரத்துக் கலை இலக்கியவாதிகளைப் பெரிதும் பாதித்தார். எக்ஸ்பிரஷனிசத்தின் ஒட்டு மொத்த நோக்கம் நடப்பதற்கு எதிரான ஒட்டு மொத்த கலகம் அமெரிக்காவிற்கு இந்த இனம் குடிபெயர்ந்தபோது அதை வைத்துக் கொண்டு வீடு கட்டி விளையாடிவர் Eugene O'Neill என்கிற நாடகாசிரியர். எக்ஸ்பிரஷனிஸம் பற்றி அவர் குறிப்பிடும்போது "Instead of representing the world as it objectively is, the author undertakes to express inner experience by representing the world as it appears to his state of mind, or to not of one of his charcters- an emotional, trouble or abnormal state of mind." இதில் O'Neill குறிப்பிடுகிற மனநிலை தொழிற்புரட்சி, இயந்திரப் புரட்சி காரணமாக ஒரு உச்சநிலைக் குழப்பத்தில் நகர மனிதன் அடைகிற பதட்டம் (இதனைப் பற்றிய மேல் விபரத்திற்கு O'Neill - Collection of critical essays என்கிற John Gassner தொகுத்த புத்தகத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும்)

மேலும் சில:

1. From moon to midnight - George Ksiser
2. Mass man - Ernest Toller
3. O'Neill - The mprorer Jones
4. Elmo Rice - The adding machine

இதில் இந்த இயந்திரத்தனமான, வறண்ட, கடுமையான உலகத்தை Mr. Zero அனுபவத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார்)

இந்த முறையைப் பயன்படுத்திப் பிரபலமடைந்த நாடகங்களில் குறிப்பிட வேண்டியது.

1. Thornton Wilder - The Skin of our teeth
2. Author miller - Death of a salesman

இதன் பாதிப்பில் விளைந்த ஆரம்ப சினிமா "The cabinent of Dr. Calisan"

இந்த எக்ஸ்பிரஷனிஸத்தில் குறிப்பிடப்பட வேண்டியது என்று நான் நினைக்கிற ஐந்து வரையறைகளையும் , அதனைப் பிரதிபலிக்கிற இந்திரனின் உதாரண வரிகளையும் கொடுக்கிறேன்.

1. Expressionism is a movement towards abstraction, towards autonomous colour and metaphor, away from plassibility and imitation.

"இருளின் தோல் மெல்ல மெல்ல
உரிகையில்
கடலின் குமுறலுக்கு எதிராக
காபிக்கடை ஸ்டவ்களின் எரியோசை"

2.A concern for the typical and essential rather than the purely personal and individual.

"மணி என்ன சார்
என்று கேட்கும் அவனுக்கு
நேரம் கூடச் சொந்தமில்லை"

3. A mystical, even religious element with frequent apocalyptic overtones.

"முக்கண்ணன்
சிவனைப்போல்
பச்சை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிவப்பு
ஆரஞ்சு கண்களுடன்
ஓய்வின்றி ஓடுகிறது தார்ச்சாலை"

4. An ugrent sense of the here and now, the city and the machine seen not from any naturalistic piont of view.

"கொழுத்த இரும்புத் தசைகளை
தளர்த்தி ஓய்வெடுக்கிறது.
தார் உருக்கும் இயந்திரம்.

5. A desire for revolt against tradition and a loving for the new and the strange.

"நேற்று வரையிலும் தெரியாது
வெள்ளைப் புறாக்கள் எல்லாமே
அமைதியின் அடையாளம் அல்ல என்று
(மணலுக்கு கீழும் நதிகள்)

"குளிர்ந்த காற்று
உறங்குவதற்கா ?
(முதுமக்கள் தாழிகளில் எதிர்காலம்)

இந்த Expressionism த்தை ஏற்றுக்கொண்ட இலக்கியத்தை ஒற்றை வரியில் சொல்வதானால் "Literature of modern metropolis" என்று சொல்லிவிடுவேன். மேற்சொன்ன மையப்புள்ளிகள் எக்ஸ்பிரஷனிஸத்திற்கு இருந்தாலும், பிரான்சிலிருந்து ஜெர்மனிக்குள் நுழைந்தபோது விரும்பி ஏற்றுக்கொண்ட meidner ம் (1884 – 1996), Lotzம் (1890–1914) அதில் நகரம் பற்றிய குறிப்புகள் இருக்க வேண்டும் என்பதை தங்களுடைய Trend ஆக வைத்துக் கொண்டார்கள். meidner 1914ல் வெளியிட்ட ஒரு manifesto- விற்கு தலைப்பாக "Guide to paintings of Big city pictures" என்று வைத்தார்.

"'The walls are jammed together in the streets
pulled by the light that strains to reach pavement"

போன்ற வரிகளை Lotz எழுதினார்.

முதல் உலகப்போருக்குப் பிறகு பெரிதாகப் பயன்படுத்தப்பட்டது என்பதாலோ என்னவோ இந்த Expressionism கலைஞர்கள் அனைவரும் 'அபாயம், நகரத்தில் மலிந்து கிடக்கிற தகிடுதத்தம், ஊழல், இறுக்கம் போன்றவற்றையே தொடர்ந்து வெளிப்படுத்தினார்கள். இவை அத்தனையும் இந்திரன் கவிதைகளிலும் காணமுடிகிறது. கூடவே விதிவிலக்காக நகரத்தில் வாழ்வதன் மூலம் பெறுகிற சௌகரியங்களையும், சந்தோஷங்களையும் இந்திரன் அங்கங்கே வெளிப்படுத்தி மகிழ்கிறார்.

பெரும் நகரங்களைப் பாடும் புதிய போக்கைத் தமிழில் பெருமளவு செய்த இந்திரன், தன்னை ஒரு அந்நியனாகவே கண்டெடுத்து வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். 'சாம்பல் வார்த்தைகள்' என்ற இரண்டாவது தொகுப்பிலும் அந்த கேள்வி அவரிடம் அவராலேயே கேட்கப்படுகிறது.

"நான் அந்நியனா ?
கணிப்பொறி
பச்சை வெளிச்ச மொழியில் சொல்கிறது
இரண்டு விடைகளை
பொத்தான் ஏ–ஆம்
பொத்தான் பி–இல்லை
எதையும் தேர்ந்தெடுக்க
இயலவில்லை என்னால்"

காரணம் அவரே சொல்வது போல "கையில் தொட்டு எடுக்க முடியாத பாதரச திவலையாய் உருள்கிறது அனுபவம். "

**வஸந்த் செந்தில்**
*கவிதைகளும், விமர்சனங்களும் எழுதி வருபவர்.*
*இவரது கவிதைத் தொகுப்புகள்:*
*'நனைந்த நிலா', 'துணையிழந்த பார வண்டி',*
*'ஒற்றை இறகு*.*
*எளிமையான இவரது இலக்கண நூல் : *தமிழ் இலக்கணம்*.*
*மொழிபெயர்ப்புக்காக குறள் பீடம் விருது பெற்றவர்*
*இவர் மருத்துவத்தில் எம்.பி.பி.எஸ்., பயின்றவர்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வினை வைப்பது பற்றி

**-பிரேம் கார்க்கி**

பிரேம் கார்க்கி பஞ்சாமிய தலித் எழுத்தாளர்களில் முதன்மையானவர். அவரது சுயசரிதையிலிருந்து ஒரு பகுதி இது.
ஆங்கிலம் வழி தமிழில்: **இரா. நடராசன்.**

அப்பாவின் உடம்பு முழுவதும் மிகமோசமாக காயம்பட்டிருந்தது. அவர் பண்ணையில் வேலை செய்த போது நடந்தது அது. முழு வீடே காயம் பட்டுவிட்டதைப்போல. சூழ்நிலை அப்பாவையும் தாத்தாவையும் அவர்கள் தாழ்ந்த இழிந்த தொழிலாக நினைத்த எல்லாதொழிலையும் செய்யவைத்தது. சாய்யின் வீட்டிலிருந்து ஒப்பந்த முறையில் இலைகளை காய்ந்த அரசஇலை கட்டுகள் செய்ய நாங்கள் எடுத்து வரத்தொடங்கினோம். நாங்கள் இரண்டு தம்பிகளும் தங்கையும் எங்கள் தாய் அஷியுடன் இலைகளை மண் விளக்கு வெளிச்சத்தில் கீழ் இரவில் உடைத்து கூடைகளில் அடுக்குவோம். அப்பா, தாத்தா மற்றும் என் அத்தை மூவரும்மாக தையல் இலை தட்டும் தொண்ணைகிண்ணமும் அவற்றில் செய்வார்கள். தாத்தா தர்பூசனி, மாம்பழம் என்று எங்கிருந்தாவது வாங்கிவந்து சாலை முனையில் மரத்தடியில் கண் விழித்து பகலில் விற்றார். செடிப்பட்டைகள் நாறுகளிலிருந்து ஸ்டராக்கள் செய்யும் அப்பா ரொம்ப கோபம் வந்தால் எங்களை சில நேரம் அடிப்பார்.

கோடையில் மார்ச்-ஏப்ரல் மாதங்களில் மட்டுமே இலைகள் துளிர்க்கும். எனவே இலைகளுக்கு ஏக கிராக்கி ஏற்பட்டு அவை கிடைக்காமல் போய் விடுகிற மாதங்கள் அதிகம். அந்த நாட்களில் என் தம்பி பிர்த்தியும் நானும் கார்ஹா, சுச்சி போன்ற கிராமங்களுக்கும் சிலசமயம் ஜலந்தருக்கும் கூட நடந்துபோய் அரசஇலைகள் பொறுக்கி வருவோம் ஊருக்குள் வந்ததும் அவைகளை தண்ணீர் தொட்டியில் நனைத்து பறவை எச்சிகளையும் புழுதியையும் துடைத்து கூடையில் வைத்து ஈரத்துணியால் மூடுவோம். தையல்இலை தட்டுகளை மறுநாள் விற்று வர நகரத்திற்கு நான் செல்வேன். ஒரு கட்டு நாலனாவிற்கு அந்த நாட்களில் போனது. கட்டு அவிழ்ந்து விட்டால் அவ்வளவுதான் மிகப்பெரிய கஷ்டத்தில் நான் மாட்டிக் கொள்வேன். எனக்கு அதை மறுபடி கட்டத் தெரியாதிருந்தது. அவிழ்ந்த கட்டை வந்த விலைக்கு உதிரியாய் விற்கபயந்து நான் நகரத்துக்கு போவதை தவிர்த்து விடுவேன். ஆனால் ஒருநாள் அப்பா என்னோடு நகருக்கு வந்து தன் மகன் என்றும் அவிழ்ந்த தையல் இலை கட்டுகளை திருப்பக்கூடாது என்றும் கடைகாரர்களை கேட்டுக்கொண்டார். பிறகு நான் நேராக அட்டார் பஜாருக்கு சென்று அங்குள்ள அரிசி, கறிகடையில் மூட்டையை அவிழ்ப்பேன். அவரிடம் எல்லா வற்றையும் விற்றுப் பணத்தை பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியோடு திரும்புவேன். ஹரிபாலிஸில் சினிமா சாலைகளுக்கு செல்வேன். அங்கே சினிமா போஸ்டர்கள் பார்த்து வருவேன்.

அந்த கடினமான நாட்களில் அதிகம் அவதிப்பட்டது அம்மாதான். எங்குமே போய் அறியாத அவள் சக்கரை சாலைக்கு போய் மாடுகளுக்கு கரும்பு சக்கையும் பால்பண்ணையிலிருந்து உதிர்ந்து கெட்ட வைக்கோலையும் பொறுக்கி வருவாள். அந்த கடினமான நாட்களில் நாங்கள் எங்களிடமிருந்து விலங்குகள் அனைத்தையும் விற்றோம். ஒரு எருமையும் ஒரு பசுவும் மட்டுமே மிஞ்சின அவைதின்ற மீதி சக்கைகளை ஒரு பொட்டுவிடாமல் விற்று விடுவாள் அம்மா.

அப்பா இன்றைக்கு ஒன்றும் நாளைக்கு ஒன்றும் செய்யக் கூடியவராக இருந்தார். ஒரு நாள் அவர் தினக்கூலிவேலைக்கு போவார். மறுநாள் மாச சம்பளம் என்று ஏதாவது ஒரு தொழிற்சாலைக்கு. அப்புறம் நாட்கணக்கில் வீட்டில் இலைகளோடும் எங்களோடும். வேலைசெய்வார். அப்போதெல்லாம் தொடக்கத்தில் நான் பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருந்தேன். கோடைவிடுமுறை என்றால் அப்பாவோடு வேலை. திடீரென்று பங்களா வீடுகளுக்கு வெள்ளையடிக்க பேசிமுடிப்பார் அப்பா. நானும் தம்பியும் அவருக்கு உதவிட செல்வோம். சுண்ணாம்புத் தனலில் கண்கள் எரியும். ஏணியிலிருந்து தவறி நான் மின் கம்பிகளில் பட்டு ஷாக் பெற்றிருக்கிறேன். இரண்டு மூன்று முறை ஏணி தவறி நான் விழுந்து கடுமையாக அடிப்பட்டேன். பட்ட அடி போதாதென்ற அதற்கு அப்பா அடியும் சேர்ந்துகொள்ளும். அப்பா அடித்து விடுவாரோ எனும் அச்சம் வேலையில் தவறு செய்யாமல் பார்த்துக் கொண்டது.

அப்பா வினோதமான மனநிலையும் கொண்டவராக இருந்தார். வீட்டில் ஏதாவது தகராறு என்றால் அவர் எப்போதும் தன்னையே வருத்திகொள்வார். "அம்மாவை கெடுத்தவன், நான் தங்கையை கெடுத்தவன். என் தலையில் நானே மண்ணை அள்ளிப்போட்டுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்பவன்" கோபமாக கத்தும்போது அவரது மீசை மேலெழ பளபளக்கும் பற்கள் தெரியும். கண்கள் நெருப்பாய் சிவக்கும். கோபமாக அவர் இருக்கும் போது வீட்டு ஆட்கள் அவர் அருகில் போய் விடமாட்டார்கள்.

இரவு நேரத்தில் எங்களுக்கு அப்பா கதைகள் சொல்வார். பெரும்பாலான கதைகளில் ஒருவன் துன்பத்தின் போது அதைக்கண்டு சலித்துவிடாமல் அஞ்சாமல் போராடி ரத்த ரணம் மற்றும் வாழ்வின் சாட்டையை தாங்கிக் கொண்டு இறுதியில் வெற்றிவாகை சூடுவான். ரூப்–பசந்தின் நாட்டுபுறக் கதையை வீர ஹபீத் ராய் சரித்திரத்தை, கிளி, மைனா, கபிலப்பன், அனாதை சிறுவன், மொர்த்துவாஜ மகராஜா, தானாபகத், புரான் பகத் என்று அப்பாவால் எல்லா கதைகளையும் உண்மைத்தண்மையோடு சொல்ல முடிந்தது. நாள் முழுவதும் உழைத்த களைப்பைபற்றி எண்ணாமல் கதையை மணிக்கணக்கில் விவரிப்பார் அப்பா, இந்த உணர்வால் நாங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தனது ஓய்வை உறக்கத்தை அவர் தியாகம் செய்வார்.

இரவும் பகலும் நான் எண்ணி ஆச்சரியப்படுவேன். எப்படி இந்த வீடுதாக்கு பிடிக்கிறது. நான் வளரும்போது கதைகள் என்னை அவ்விதம் நினைக்க வைத்தன ஒவ்வொரு உணவுக்கு பிறகும் நிலையான கவலை இரக்கமின்றி வீட்டை சூழும். அடுத்த உணவிற்கு என்ன செய்வது என்கிற கவலை. இருக்கும் பாலில் கொஞ்சம் எடுத்து வைப்பாள் சித்தி மீதியைத்தான் எங்களுக்கு தருவாள் வேறு எதுவும் சாப்பிட இருக்காது. காய்கறி, தானியம் எதுவும் வீட்டில் இல்லை. எங்கள் வீட்டிற்கு யாரோ மந்திரவாதி உதவியோடு *வினை* வைத்திருப்பதாக அம்மாவும் சித்தியும் சொன்னார்கள். அம்மா பல மந்திரிப்பவர்களை சூனியக்காரர்களை வசியம் வைப்பவர்களை போய்பார்த்து வந்தாள். சிலர் அவளை தானம் செய்ய சொன்னார்கள். சிலர் பலிகொடுக்க சொன்னார்கள். எங்கள் வீட்டின் உள் அறையை ஒரு சாமி ஆக்கிரமித்துள்ளதாக ஒருவன் சொன்னான். அதற்கு நெய் விளக்கு தினமும் அம்மா ஏற்றிவைக்க வேண்டும்.

வினை வைப்பது என்பது பற்றிய பேச்சுவந்ததும் நான் எனது சித்தப்பாவான பெய்லியிடம் சென்றேன். பெய்லி சித்தப்பாவின் வீடு எங்களது வீட்டருகில் தான் இருந்தது. நாலும் தெரிந்தவர். ராமாயணம், மகாபாரதம் மற்றும் சீக்கிய குருவாசகத்திலிருந்து மஹாராஜா ரஞ்சித் சிங் வரை எல்லாம் அறிந்தவர் பெய்லி சித்தப்பா. படிப்பறிவே எல்லாம் தனது கைநாட்டின் மூலமே ஆயிரக் கணக்கான ரூபாய் அவர் சம்பாதித்து வந்தார். படிக்காதவர். ஆனால் அவர் ஒருவரின் பெயரையோ சம்பவத்தையோ இடத்தையோ ஒருபோதும் எந்த பேச்சில் இடையிலும் மறந்தது இல்லை. ஒழுக்கமும் கடுமையான பத்தியங்களும் கொண்டவரென்று மக்கள் நம்பினார்கள் பேய் ஓட்டி அவர். அசையா பொருட்களை கைகளுக்கு அகப்படாத வைகளைப் பற்றியெரிந்து பூமியில் மேல் விழவைத்து அதிலிருந்து பறவைகளை பறக்கவைப்பதான நம்ப முடியாத காரியங்களை அவர் செய்தது உண்டு என்கிறார்கள். ஆனால் தற்போது அந்த கலையை அவர் விட்டு விட்டார். அவரது கண்கள் நோய் வாய்ப்பட்டு நீர்விட தொடங்கின. முகத்தில் ஒரு தெய்வக்களை வந்து விட்டது. பேசும் போது திக்குவார். சாய்யின் தங்கையை அவர் மணந்தார். அந்த பெண்மணி புத்திசாலி தனது சாதுர்யத்தால் பெய்லி சித்தப்பாவை அவரது சகோதரர்களிடமிருந்து பிரித்து வந்து தனது தாய் கிராமத்தில் குடியமர்த்தினார். எங்கள் பக்கத்து பிளாட்டில் அவர்களது வீடு மிகப்பெரியது. பெய்லி என் அப்பாவுக்கு அவர் வயதை ஒத்த சித்தப்பா ஆனால் அவரது குழந்தைகளும் அவரை சித்தப்பா என்று அழைக்கும் காலம் வந்தது.

பெய்லி பணக்காரர். அவரிடம் நிறைய தங்க நகைகள் இருப்பதாக சொல்கிறார்கள். நிறைய பணம் இருக்கிறது. வீட்டில் செலவு செய்யத்தான் ஆள் இல்லை. அவருக்கு, பெய்லி சித்தாப்பாவுக்கு குழந்தைகள் இல்லை. பணம் மட்டுமே இருந்தது மற்ற மாநிலங்களிலிருந்து மர இலைகள் வாங்கி வந்து அவற்றை லாபத்திற்கு உள்ளூரில் விற்றார். இலை தட்டுகளுக்கும் தொண்னை களுக்கும் காண்ட்ராக்ட் பேசி விடுவதும் உண்டு. கோயில் குருத்வாரா வாசிகளும் திருமணமண்டபக்காரர்களும் காரில் வந்து அவரிடம் அவற்றை ஏராளமாக வாங்கவும் ஆர்டர் தரவும் வந்தார்கள். இந்த வியாபாரத்தோடு அவர் பேய் ஓட்டும் வேலையையும் செய்தார். ஜனங்கள் அவரிடம் இளம்பெண்களை அழைத்து வந்தார்கள். அவர்களுக்கு பேய் ஓட்டி ஆலோசனைகள் தந்து மது உட்பட ஏராளமான காணிக்கை பெற்றார் பெய்லி சித்தப்பா.

நான் மட்டுமல்ல எங்கள் ஊரில் எல்லாருமே பேய் ஓட்டுவதன் மூலமே அவர் பணக்காரர் ஆனதாக நம்பினோம். அவரிடம் எப்படி யாவது பேய் ஓட்டும் கலையை கற்க வேண்டும் என்று கடைசியாக நான் முடிவ செய்தேன். ஒரு பைசா மூலதனம் இல்லாமல் ஆயிரம் ஆயிரமாக சம்பாதிக்க முடிந்த தொழில் அவரது. சுக்கா சுருட்டை நெருப்பேற்றியபடி ஒரு நாள் அவரிடம் எனது இதயத்தின் ஆவலை தெரிவித்தேவிட்டேன். ஆனால் அவர் ஏற்றுக் கொள்வதாக இல்லை *மகனே இது குழந்தை விளையாட்டல்ல, இது வீட்டை அழித்தே விடும். இந்த கலையை நிகழ்த்துபவனை மக்கள் வெறுக்கிறார்கள். யாருமே உன்னை நம்ப மாட்டார்கள்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் நான் பின்வாங்கத்தயாராக இல்லை அவர் என்னை தவிர்ப்பது எனக்குத் தெரியும் அவரது புகைப்பானை பற்ற வைப்பேன் ஹுக்காவை குளிர்விப்பேன். ஒவ்வொரு காலையிலும் மாலையிலும் அவருடனேயே இருக்கத் தொடங்கினேன். என் நச்சரிப்புகள் அவரை எப்படியாவது இணங்க வைக்க வேண்டும் . ஒன்றிரண்டு விஷயங்களையாவது கட்டுப்படுத்த நான் கற்றுவிட வேண்டும். பள்ளிக்கூடத்திற்கு முழுக்கு போட்டுவிட்டு அப்பாவையும் வேலைக்கு போகாமல் வீட்டிலேயே இருக்கச் சொல்லி விடலாம். இந்த ப்ரேம் கார்க்கியை தேடி பல ஊர்களிலிருந்து மக்கள் ஓடோடி வரவேண்டும்.

கடைசியில் ஒரு நாள் சித்தப்பா பெய்லி நான் பிடிவாதக்காரன் என்பதை ஒப்புக் கொண்டார். எரியும் பிணத்தை நமது ஆளுகைக்கு கொண்டு வரும் மந்திரத்தை அன்று எனக்கு அவர் உபதேசித்து அதை செய்யும் முறையையும் விளக்கினார். *இந்த மந்திரத்தை யாருமே இல்லாத வெட்ட வெளியில் அதிகாலை இருட்டில் ஒத வேண்டும் நாற்பத்தி ஓராம் நாளில் இந்த மந்திரத்தை சொல்லி எரியும் பிணத்தின் கரியை ஆறவைத்து சாம்பலை முழுங்கி நூற்றியொரு முறை மந்திரத்தை சொல்லும் போது பிசாசைபார்க்கலாம்......அப்படியே அப்போதும் நீ எதிர் கொண்டு நின்றால் பிழைப்பாய்.....அல்லது.*

அடுத்த நாள் முதல் நான் ஓடக்கரைக்கு போகத் தொடங்கினேன், அதிகாலை இருட்டில் வீட்டில் யாருக்கும் தெரியாமல். கோமணம் கட்டி ஆசனங்கள் செய்து உடம்பில் எண்ணெய் தேய்த்துக் கொண்டு அமைதியாக உட்கார்ந்து அந்த மந்திரகங்களை சிரதையோடு சொல்லத் தொடங்கினேன்.

பள்ளிக்கு போவதோடு இதையும் நான் செய்யத் தொடங்கினேன். எனக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று இன்னும், கொஞ்சம் நாட்களில் வீட்டின் கஷ்டகாலம் எல்லாம் சரியாகிவிடும். இப்படியே நாற்பது நாட்கள் ஓடிவிட்டன இப்போது அடுத்த நிலை .சுடுகாட்டில் எரியும் பிணம்தான். அதை நினைத்தாலே எனக்கு நடுங்கியது என்றாலும் பயத்திலிருந்து நான் விடுபட்டே ஆக வேண்டும். அந்த சமயம் பார்த்து சுடுகாட்டிற்கு பிணம் ஏதும் வரவில்லை. எனவே நான் சுகிட்டி, லாடுவாலி முதல் கார்ஹா வரை பக்கத்து ஊர் சுடுகாடுகளுக்கு கூட போய் பார்த்தேன். எல்லா இடங்களும் சில்லிட்டு இருந்தன. மூன்றாம் நாள் ஒரு பிணம் சுடுகாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

எங்கள் கிராம ஆசாரி ஒருத்தனின் மகள் இறந்து போனாள். திருமணம் ஆகாதவள்., வீட்டில் ஏதோ பிரச்சனை என்று எதையோ தின்று வாழ்க்கையை முடித்துக்கொண்டாள்.

சித்தப்பா பெய்லி சொன்னார், *மகனே இந்த வாய்ப்பை தவற விட்டு விடாதே முதலில் அது கன்னிப்பெண். இரண்டாவது அது தற்கொலை பிணம் மூன்றாவது இளம் வயது பிணம்*. முதல் நாள் இரவு தான் அந்தப் பெண் இறந்திருக்கிறாள். போலீசுக்கு பயந்து மதியமே ஆசாரி குடும்பம் பிணத்தை சுடுகாட்டிற்கு கொண்டு வந்து எரித்து விட்டது. முதலில் அங்கிருந்த குளத்தில் மீன் பிடிப்பதுபோல அங்கு மதியம் நான் காத்திருந்தேன். எல்லாரும் போன பிறகு நான் எரிமேடைக்கு அருகில் சென்றேன். பிணம் மிகப்பெரிய தீ ஜீவாலைகளோடு எரிந்து கொண்டிருந்தது. அந்த ஜீவாலைகளில் பல முகங்கள் எனக்குத் தெரிந்தன ஒரு இளம்பெண் என்னை பார்க்கிறாள். என் இதயம் வேகமாக அடித்துக் கொள்ள ஒரு நொடி ஓடிப்போய் விட எண்ணினே். ஆனால் மறுநொடி யோசித்தேன். பணம். வசதியான வாழ்க்கை என்ற பலவும் என்னை பின்னாலிருந்து தள்ளிக் கொண்டிருந்தன.

ஒரு பெரு மூச்சு விட்ட பிறது நீண்ட கழி ஒன்றுடன் அருகில் சென்று தணலை எடுத்து தயாராகவைத்திருந்த இரும்புத் தட்டில் போட்டுக் கொண்டேன். பிறகு பக்கத்திலிருந்த வேப்பமரத்தடியில் போய் அமர்ந்தேன். விரைவில் அந்த தணல் ஆறிவிட்டிருந்தது. மந்திரத்தை உச்சரித்தபடியே சாம்பலை முழுங்கினேன். மந்திரமும் முடிவடைந்தன கண்களை இறுக மூடியபடி நான் உட்கார்ந்திருந்தேன். திடீரென்று மிகப்பெரிய ஏதோ ஒன்று மிருகம்போல அருகில் வருவது தெரிந்ததும் நான் மந்திரத்தை சப்தமாக உச்சரிக்கத் தொடங்கினேன். காலடி சப்தம் அருகே வந்தது. புகை நாற்றமும் நெருங்கியது. உண்மையான பிசாசு. நான் சப்தமாக மந்திரத்தை உச்சரித்தேன். அப்போது என் முதுகில் ஓங்கி ஒரு அடி விழுந்தது மந்திரத்தை மேலும் சப்தத்தோடு கூறினேன் இன்னொரு அடி என்னை கீழே தள்ளியது நான் கண்களை திறந்தேன். அங்கே கையில் செறுப்போடு என் அப்பா நின்றிருந்தார் மேலும் எனக்கு இரண்டு அறை கொடுத்தார் நான் என்னை சுதாரித்துக் கொண்டு ஓடத்தொடங்கினேன்.

"நாயே .... கையால் உழைக்க வேண்டும் அதிலிருந்து யாருமேதப்ப முடியாது இதெல்லாம் உழைக்க வக்கற்ற ஏமாற்று பேர்வழிகளின் வழி. அவர்கள் உடம்பில் ரத்தமில்லை பூச்சி மாதிரி ஊர்கிற ஜந்துக்கள் அவர்கள்"வீட்டிற்கு வந்ததும் அப்பா என்னை பக்கத்தில் அழைத்து சாக்குப்படுக்கையில் உட்காரவைத்தார், "சாலா ..... முட்டாள் ..... கழுதை ......" பிறகு என் நெற்றியில் முத்தமிட்டு அவர் எதற்காகவோ அழ ஆரம்பித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரோஸ் முன் வைக்கும் குழந்தைகள் உலகம்.

*கரிகாலன்.*

ரோஸ் ( நாவல்)
**இரா. நடராசன்**
காவ்யா
16,17 வது-ஈ குறுக்கு தெரு,
இந்திரா நகர் II ஸ்டேஜ்,
பெங்களூர்-560 038
போன் : 080-5251095

முன்பு ஆயிஷா இப்போது ரோஸ். ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. ஆசிரியராக இருந்து கொண்டே நடராசன் ஆசிரியரின் சாயல் இல்லாமல் இருப்பது. நான் பழகியது வரை நடராசன் வலியறிய, வலிஉணரத் தெரிந்தவர். இக் குறுநாவலில் குழந்தைகளின் வலியை மீண்டும் வெளிப்படுத்துகிறார்.

குழந்தைகளின் படைப்பாற்றலையும், விவரிக்க முடியாத கற்பனைத் திறனையும் தொடர்ந்து பெரியவர்கள் அலட்சியப்படுத்தி வருகிறார்கள். அவர்களுடைய உலகம் அபரிமிதமான உற்சாகத்தாலானது. ஈரமண்ணால் இட்டலிசுடுவது, மரஅட்டைகளை புகைவண்டிகளாய் பார்த்து வியப்பது, மயில் இறகுகள் குட்டிபோடும் என பாதுகாப்பது, வனாந்திரங்கள், சமுத்திரங்கள் என நீளும் அவர்களது கதை வெளிகள்—இப்படி சுவாரஸ்யத்திற்கு குறைவில்லாதது அவர்கள் உலகம். வாயில் பால் மணம் உலரும் முன்பாகவே பாவம் அவர்கள் உலகம் பெற்றோராலும், பள்ளிகளாலும் திருடப்பட்டுவிடுகிறது. ஒரு குழந்தை புழங்கும் வெளி வீடு– ஆட்டோ (அ)வேன்– பள்ளி இப்படி சுருங்கி விடுகிறது. ஆசிரியர் என்பவர் குழந்தைக்கு சக மனிதர் அல்ல அவதாரம். இதனால் குழந்தைகள் நாளடைவில் தங்களிடமுள்ள படைப்பாற்றலை (Creativity) இழந்து மாதிரியைப் பின்பற்றுதல் (imitate) எனும் மோசமான நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். பள்ளி என்கிற நுண் சமூகம் தனக்குகந்த மனிதனை இப்படி வெற்றிகரமாக தயாரிக்கிறது.

ஷூ,டை, யூனிபார்ம், அடையாள அட்டை, முதுகில் புத்தக மூட்டை என பலி ஆடுகளாய் அல்லலுறும் குழந்தைகளை ரோஸ் படைப்பபாற்றலோடும் புனைகதைக்கான அழகியலோடும் வெளிப்படுத்துகிறது. அதிகாரத்துவ அமைப்பின் பேராயுதம் அச்சம் பள்ளியில் இது மிகச் சிறப்பாகவே செயல்படுகிறது. தமிழ் பேசாதே,
அமைதியைப் பேணு, ஒதுக்கப்பட்டிருக்கும் நேரத்தில் மட்டுமே சிறுநீர் கழி, ஐந்து நிமிடத்திற்குள் சாப்பாடு, ஆத்திரத்தை, மூத்திரத்தை எல்லாவற்றையும் அடக்கு. கட்டளைகள். நல்ல மாணவர்கள்—கீழ்ப்படிவார்கள். ரோஸ் காட்டும் பள்ளிக்கும் நாஜிக்களின் விதை முகாம்களுக்கும் அதிக வித்தியாசம் இல்லை.

நவீன கதை எனும் பெயரில் தாழ்வு மணப்பான்மையின் வெளிப்பாடாய் புனைகதை உள்பத்திகளுக்கு மத்தியில் ரோஸ் ஒரு கவித்துவ வெளிப்பாடு.

எப்போதும் புதிய உள்ளடக்கத்தையும் புதிய வடிவத்தையும் தேடுவதில் சலிப்பற்ற முயற்சி உடையவர் நடராசன். முற்றிலும் உரையாடலின் வழி இக்கதை நகர்கிறது. (ஏற்கனவே சுசி முதல் சுசி வரை எனும் சிறுகதை ஒன்றிலும் இந்த சோதனை முயற்சியை செய்து பார்த்துள்ளார்.

வடிவம்—உரையாடல். உரையாடல் சனநாயகத்தின் அம்சம். உள்ளடக்கம்—குழந்தைகளின் மீது திணிக்கப்படும் அதிகாரம் என முரண் எதிர்வில் கதை கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

ஆயிஷா குறும்படமாக்கப்பட்டுள்ளது. ரோஸ் இதுவும் படமாக்க ஏற்ற வண்ணம் எழுதப்பட்டிருக்கிறது. சரியாக எழுதப்பட்டுள்ள Screen play என்று கூட சொல்லலாம். ஆர்வமுள்ளவர்கள் குறும்படமாக எடுத்து ஒவ்வொரு பள்ளியிலும் சென்று காட்ட வேண்டும். அப்படிசெய்தால் ஆசிரியர்கள், பெற்றோர்களின் தடித்த மனசாட்சியின் கதவுகளை இப்படைப்பு சதா தட்டிக் கொண்டேயிருக்கும்.

---

கொரில்லா ( நாவல்)

ஷோபாசக்தி
வெளியீடு-–அடையாளம்,
1208, இரண்டாவது மாடி,
கருப்பூர் சாலை,
புத்தாநத்தம் – 621310.

நான் உலகத்தால் ஏமாற்றப்பட்டு வருகிறேன்
நான் கடவுள்களால் ஏமாற்றப்பட்டு வருகிறேன்
நான் வரலாற்றில் ஏமாற்றப்பட்டு வருகிறேன்.

எனும் பவாஸ்துர்க்கியின் வார்த்தைகளில் துவங்கும் ஷோபாசக்தியின் நாவல் தாய் மண்ணைப் பிரிந்தவர்களின் அவலம், பேரினவாத அடக்குமுறை கொடூரம், இயக்க செயல்பாடுகள் அவற்றினால் உண்டாகும் மன உளைச்சல்கள் என விரிவாக அழுத்தமாக பேசுகிறது .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



***என்ன செய்வார் ?***

குறளைக் கையாளக் கூடாது
என்று சட்டம் வந்தால்
ஐயோ பாவம்– இந்தப்
பட்டிமன்றப் புலவர்கள்
என்ன செய்வார்கள் ?
பெட்டிக்கடை வைப்பார்களா ?

*---அவை முதல்வன்.*

***ஊர்தல்***

தான் உண்டு
தன் குடும்பம் உண்டு
தன் வேலை உண்டு
தன்னைச் சுற்றிய
கவச ஓட்டுடன்
காலம் ஓட்டுதல்

எவரிடமும்
அதிகம் ஒட்டுவதில்லை
எவரையும் நம்பி
கை, கால்களை நீட்டுவதில்லை.
எவருக்கும்
தொந்தரவு இல்லை.
எல்லோருக்கும்
நல்லவனாக வேண்டும்.

ஒதுங்கி ஓட வசதியாய்
எப்போதும்
உடன் வரும் கவசக்கூடு
சிறிய அதிர்வுக்கும்
சட்டென மூடிக்கொள்ள
ஆமை ஓட்டுடன்
அமைதியான ஊர்தல்.

*--பல்லவி குமார்.*

***தை க்கு வரவேற்பு***

அடர்ந்த பனியின்
ஓர் இளங்காலைப் பொழுதில்
நீ வலது காலெடுத்து வாசல் நுழைகிறாய்.
உனக்குத் தெரியும்

தமிழர்களுக்கு ஒரு மோசமான அறிகுறியாய்
கண்ணகி சிலை காணாமல் போனது.

அறுவடைக் காலத்தில் நீ
பிறப்பதால் உன்னிடம்
விளைச்சலை அதிகம் எதிர் பார்க்கிறோம்.

ஆனால்
நீயோ இதுவரை
எங்களுக்கு பதர்களையே
பரிசாய் தந்திருக்கிறாய்.

காலத்தின் குளிர்ந்த
முத்தத்தை தருபவளே
எமது சகோதரிகளின்
நம்பிக்கை எதிர்பார்ப்பே.

உனது வருகை
அன்பெனும் ஜீவ ஊற்றுக் கண்ணை
திறக்குமா.
சாதி மோதல்களினால்
வீதிகளில் ரத்தம் வழியாமல்
இருக்குமா.

மதங்கள் மனசுக்குள்
மட்டுமே வாழுமா.

தமிழர்களின் தலைமகளே
புன்னகைகளையும்
பூரிப்பையும் மட்டுமே
உன்னிடம் எதிர்பார்க்கிறோம்.

*--கவி. ஞானகுரு.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தணல் (குறிகள் குறித்த குறிப்புகள்)

இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்.

பேருந்து இருக்கையில்
அலுவலகத்தில்
வேலைத்தளங்களில்
இன்னபிற பொது இடங்களில்
சக மனிதனின்
முகம் பார்த்துத் தான் பேசுகிறேன்
குறி பார்த்தல்ல...........

கை குலுக்கிக் கொள்ளும்போதோ
உடல் ஒட்டி அமரும்போதோ
தவிர்க்கவியலாத அவசரங்களில்
மோதிக்கொள்ளும் போதோ :
என் குறி
என் வாழ்விலாற்றிவரும்
அரும் பங்களிப்புகள்
மற்றுமதன் விசேடத்தன்மைகள்
குறித்தெல்லாம்
என் சக மனிதர்களிடம்
நான் கூறுவதுமில்லை
அவனும் கேட்பதுமில்லை.......

பாலபிசேகமோ சந்தனாபிசேகமோ
செய்வதில்லையதற்கு
வெறும் சோப்பில்தான்
நான் குளிக்கும்போது
அதுவும் குளிக்கிறது......
புனிதப் பயணங்களோ
புனித நீராடுதல்களோ

மேற்கொள்வதில்லை
குறிபொருட்டு மேலும்........

குறிக்கெனச் சிறப்பான நிறங்களில்
ஆடைகள் நெய்தணிவித்து
அதனைத் தெருவெல்லாம்
–சிலவேளை உலகமெல்லாம்–
தூக்கிக்காட்டி
ஒரே நிறத்து அரைக்கச்சுக்களை
ஒன்றுகூட்டி
வேறு நிறத்துக் கச்சுக்களை
விரட்டுவதில்லை....
மிரட்டுவதில்லை...
கொல்வதில்லை....

எனது குறியின்
பிரதியொன்றை
நெற்றியிலோ கழுத்திலோ
தலையிலோ மார்பிலோ
சூடிக்கொண்டு திரிவதுமில்லை........

என் குறியே
ஆதிக்குறியின் அவதாரமென்றும்
மற்றக் குறிகளெல்லாம்
வெறும் மனிதக் குறிகளென்றும்
வன்முறை ஆனந்தம்
வளர்ப்பதுமில்லை.........

எல்லோர்க்கும் போலவும்
இருபது நாள் பட்டினிக்குப்பிறகு
குறியின் இருப்பே
மறந்து போகிறது எனக்கும்.........
எல்லாக்குறிகளைப் போலவும்
எரிந்தழியும்
என் குறியும் இறப்பில்..........
இயல்பாதலால்
இவைபற்றியெல்லாம்
என் சக மனிதனிடம்
சொல்லிக் கொண்டு திரிவதில்லை
எப்போதும்...........

ஏனெனில்...
எனது குறி
மிகவும் பிரத்தியேகமானது
என் மனசைப் போல.....,
நுட்பமானது
என் கவிதையைப் போல....,
உயர்வானது

என் சக மனிதர்களைப் போல...,
முக்கியமானது
என் மனிதநேயம் போல....,
மிகவும் அவசியமானது
என் சுதந்திரத்தைப் போல....,
மிக
மிக
மிக
அந்தரங்கமானது
என்
கடவுளைப் போல.....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அங்கலாய்ப்பு

கி. கீரனூர். ஆ. இளங்கோவன்.

அப்பா
கண்டிக்கையில்
பாட்டி தடுத்தாங்க

"சும்மா இருடா
ஒப்பாரும் நானும்தான்
காதலிச்சோம்,
இன்னிக்கும்
அனுசரனையா இல்லியா
வந்தால்
எழுந்து மாராப்பு மூடும்."

துறையில் துணிதுவைத்து
சீக்கிரம் கரையேறும்
வருவாரென.

கிணற்றடியில்,
கீரை பறிக்கையில்
அவளின்
மனப்பாடப் பாட்டு
"அவர்" பெருமை.

அவருக்கு
அது பிடிக்கும்
இது பிடிக்கும்
தன்னை பிடிக்கும்
அவரை
தனக்கு பிடிக்கும்
அது பிடிக்காது
இது பிடிக்காது
அவளின்
அவருக்கு
பிடித்தது
பிடிக்காதது
எல்லாமே அவள்.

உடனே திரும்பும்
ஊருக்கு போனால்.

அவர் அவளின்
நேயர் விருப்பம்.

அலுவலகத்தில்
பெண்கள்
அங்காலித்தார்கள்.
அவரவர் வீட்டுல
அன்றாட நடப்பை,
எரிந்து விழுவதாய்
எரிச்சல்,
மதிக்காததாய்
மனக்குறை,
எட்டிப்பார்த்தேன்
என் மனைவியும்

மேகம் மிதப்பது போல்
வானம் நகர்வது போல்
நதிபெருக்கு நடைகொள்கிறது
வெளிர் முகத்தில் விண்மீனின்
சிரிப்பொலிகள்.
வெண்ணிலவு தண்ணீரைப் பார்த்தப்படி
நதியோடு நடக்கிறது.
ஊர்வலத்தின் உற்சாகத்தில்
துள்ளிக் குதிக்கும் சிறுமீன்கள்
மின்னுகின்றன.
கரையோரம் கிடக்கும்
தூண்டிகள் இரைகொடுத்து மகிழலாம்
தடுப்பு தடுப்பாய்
திருப்பிவிடும் வகையில் இருக்கும்
குச்சி கூடுகள் நிற்கலாம்
குதிக்கும் மீன்களை தூக்கிக் கொள்ள
பிளந்து பிளந்து சிதைந்து
பிரிந்து பிரிந்து
கிடந்தோடு வாய்க்காலாய்
நதியே
உன் திரண்ட முகத்தின் கனவில்
பட்டுகிடக்கும்
என் வயலின் நாற்றுகள்.

**–வை. வைத்திலிங்கம்.**

---

தூக்கத்தில் மிதக்கும்
பயணிகளின் கனவு.
சில பத்து பேரெனும்
விழித்துக் கொண்டிருந்தார்கள்
சிறுநீர் கழிக்க நிறுத்துமிடங்களில்
மனதை கவ்வும்.
காதல்பாட்டில் பிடிபட்டபடி
தேநீரோ.... பியரோ அருந்திவிட்டு

இதுபோன்றதொரு நிறுத்தத்தில்
நின்று கொண்டிருக்கலாம் நீ.
இந்த நள்ளிரவில்...
நான் மட்டும் எதற்காக
தூங்கிக் கொண்டிருக்க வேண்டும் ?
நடுவானில்....
பறந்து கொண்டிருக்கிறது
என் விமானம்.

**–இளம்பிறை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கீரையோ கீரை

பள்ளிக்கூட வராந்தா
ராமுச்சூடும் பின் நவீனத்துவம் நடத்துவார்
வடக்குத் தெரு வெள்ளையன், எழுபதுகளில்
காலையில் ஓடைப்பக்கம்
பாலத்தின் கீழே கோடையிலும் வற்றாது.
ஆவாரங்கொத்து, வேப்பங்கொழுந்து
சூடுதணிக்க, சோத்துக் கத்தாழை
ஆட்டுக்கறியாட்டம், மென்றுவிழுங்குவார்.
அரணாகிய வெள்ளைக்கல் பாறை
கிட்டங்கிமேடு, ரயில்வேபாலம்
அழகில் குளித்தபடி, ஆகாசம் பார்த்தபடி
குமட்டக் குமட்ட தின்று முடிப்போம்.
மழைக் காலத்தில் தனித்து நான் ருசிக்க
காய்ச்சல் குடியேறும்,
சுந்தரத்தின் ஊசிப்பாடத்தில், ஓடி மலையேறும்.
கோட்டிமுளை,பெருந்துறை, தொட்டிகுப்பம்
உ. நெமிலி, திருவதிகை என
வாசலில் பள்ளியெழுச்சி பாடும் கீரைகள்
முடக்கத்தான் தோசை தின்னா
மூட்டுவாதம் போகுமின்னு, தின்று
வெள்ளாத்து மணல் சூட்டில்
விழுந்தாங்க நம்ப டீச்சர் என
பதறும் பள்ளிக் குழந்தைகள்.
எதிலும் இதம், பதம் வேணுமின்னு
.இளங்கோவன் சொல்வாரு,
வேளக்கீர, மின்னக்கீர, தூதுவிள, புளிச்சகீர,
கொமுட்டி, பசலை, பண்ணைமுருங்கை,
அரக்கீர, சிறுகீர,பொன்னாங்கண்ணி
எல்லாம் காசாக்கி, ஏழவீட்டு சோறாக்கி
இப்ப பஸ்சுக்கு கொடுத்தழுது
பரிதவிக்கும் எம்மக்கள்.

**-பட்டி. சு. செங்குட்டுவன்,**
முதுகுன்றம்.

## மற்றொரு கனவு

முன்னால் ஒரு மிதி வண்டி
மிதிப்பதாகத் தெரியவில்லை.
நத்தை தான் மிதிவண்டியாக
உருமாறி ஊர்கிறது.

முன்னாலுக்கு முன்னால்
என்னதான் தடையோ ?
வேகத்தடையா, வேறு தடையா ?
இந்த ஆராய்ச்சி எல்லாம்
எனக்குத்தான்—
பின்னால் வந்து கொண்டிருந்தவன் முன்னேறிப்
பக்கத்தில் வந்து நின்றான்.
முறைத்தான்: முணு முணுத்தான்.

யாருக்கும் போலத்தான்
எனக்கும் சைக்கிள் கிடைத்திருக்கிறது.
யாரையும் போலத்தான்
நானும், சாலைக்கு வந்திருக்கிறேன்.
வேகம், மெதுவு பற்றியும்
தெரியாமல் இல்லை.
வண்டி விடுவது என்றால்
வண்டி மேல் விடுவதா——

இவனுக்காவது பக்கத்தில வர இடம் இருந்தது.
இணையாக ஒருவனைப் பார்ப்பதில்
இனந் தெரியாத மகிழ்ச்சிதான்.
இப்போதாவது நான் பிற்படுத்தப்பட்டிருப்பது
ஏன் என்று புரியலாம்.
முன்னேறிக் கொண்டிருந்தவனும்
முன்னேற முடியாமல் திக்குவது
தெரியாமல் இருவருக்கும்.

தெரிந்ததாகத் தெரிந்தது :
வந்து நின்றவனைப் போலவே
அவனையும் வைது கொண்டு
வந்து நின்றான் ஒருவன்.

**-பழமலய்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அரவாணியர்கள் அடக்குமுறைக்குள் அடங்காதவர்கள்**
**–தமிழ்நாடு அரவாணியர் இயக்கத்தின் தலைவர் பிரியாவுடன் ஒரு உரையாடல்.**
**(களம் புதிதுக்காக இரா. நடராசன்)**

*களம் புதிது : உங்கள் இயக்கத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.*

பிரியா : முன்பே இருந்ததுதான். சுமாராக 400 உறுப்பினர்களுடன் செயல் பட்டுக் கொண்டிருந்தோம். நடுவில் மறக்கப்பட்டது. இப்போது மீண்டும் துளிர்க்கிறோம். எத்தனை முறை வெட்டினாலும் துளிர்ப்போம்.
சென்ற மாதம் சு. சமுத்திரம் உள்ளிட்டோர் வந்து கலந்து கொண்ட இயக்கத்தின் தொடக்க விழா சென்னையில் நிகழ்த்தப்பட்டது. இப்போது உறுப்பினர் சேர்க்கை நடந்து வருகிறது. சுமார் நூற்றிஅய்ம்பது உறுப்பினர்கள் (அனைவரும் அரவாணிகள்) உள்ளனர்.

*க.பு: எப்படி இயங்குவதாக உத்தேசம் ?*

பிரியா : பொதுவாக எங்கள் இனத்தவர்கள் உரிமைகளை பற்றி அதை மையமாக வைத்து செயல்படுவோம்.... மத ரீதியில் எங்களுக்கு இழைக்கப்படும் துரோகங்கள் கொடியவை. காவல் நிலையத்தில் எங்கள் புகார்கள் கூட ஏற்கப்படுவதில்லை.எனவே நிறைய இயங்கவேண்டி இருக்கிறது.

*க.பு : அரசியல் ரீதியில் இயங்குவீர்களா ? உங்கள் அரசியல் நிலைப்பாடு என்ன ?*

பிரியா : வடக்கே கொஞ்சம் முயற்சி கைகூடியிருப்பதாகக் கூறுகிறார்கள். தமிழக அரசியல் பற்றி சொல்ல வேண்டாம். மீனவர் ஓட்டு கிடைக்க மீனவராகவும், குறத்தி ஓட்டுக் கிடைக்க நரிக்குறவராகவும் நடித்த எம்.ஜி.ஆர். எங்கள் ஓட்டுகளின் எண்ணிக்கை ரொம்ப குறைவு என்பதால் அரவாணியாக நடிக்கவில்லை போலிருக்கிறது. அரசியல் இங்கே அப்படி இருக்கிறது. இதில் அரசியல் நிலைப்பாடு என்பதெல்லாம் வெறும் கேலிக்கூத்து.... எங்களை வைத்து நடக்கும் கொள்ளையை தட்டிக் கேட்க வேண்டும்.

*க.பு : அயல் நாட்டு அரவாணிகள் அமைப்புகளோடு சேர்ந்து செயல்படுவீர்களா ?*

பிரியா : அமெரிக்காவில் அரவாணிகளுக்காகவே டொர்ணாடோவில் ஒரு பெரிய திரைப்பட விழா ஆண்டு தோறும் நடக்கிறதென்று இயக்குனர் –எடிட்டர் லெனின் மூலம் அறிந்தோம். தெற்கு அய்ரோப்பாவில் அரவாணிகள் கூட்டுறவு சங்கங்கள் கூட நடத்துகிறார்கள். தொடர்பு கொள்ள முயற்சிகள் தொடர்ந்து வருகின்றன. இலக்கியத்திலிருந்து திரைப்படம் சமூகப் போராட்டங்கள் என அனைத்து வகையாகவும் செயல்பட வேண்டியுள்ளது. எந்த அதிகார அடக்கு முறையும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது.

*க.பு : அரவாணிகளை மட்டுமே இயக்கத்தின் உறுப்பினர்களாக சேர்க்கிறீர்களா அல்லது பொதுவாக அரவாணிகளின் மேல் அக்கறை கொண்டவர்களுடன் இணைந்து செயல்படுவீர்களா ?*

பிரியா : கதை, இலக்கியம், சினிமா என்று அனைத்து வகையிலும் அரவாணிகளின் சித்தரிப்பு கேவலமாகவே உள்ளது. குறைந்த பட்சம் மனிதராகக்கூட நாங்கள் மதிக்கப்படுவது இல்லை. பாலியல் ரீதியிலான வக்கிர மனோபாவமின்றி. பயன்படுத்தி தூக்கியெறியும் வலியை ஏற்படுத்தாதவர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

*க.பு : சென்னையில் உங்கள் தலைமையகம் எங்கே உள்ளது ?*

பிரியா : பீர்க்கங்கரணையில் இருந்து செயல்படுகிறோம். பல ஊர்களை சென்றடைவோம். இப்போதைக்கு இவ்வளவு போதும். விரைவில் செயல்பாடுகளோடு.............



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜோதிடம் : ஒரு அறிவியல் அவமானம்

ம. மனோகரன்

ஜோதிடக்கலையை பல்கலைக்கழகங்களில் ஒரு பட்டப்படிப்பாக தொடங்க மத்திய அரசு முடிவு செய்தவுடன் புதிய சர்ச்சை கிளம்பியுள்ளது. இதனை எதிர்த்து இந்திய விஞ்ஞானிகள் சிலர் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். பல்கலைக்கழக மானியக்குழுவானது ஜோதிடத்தை நமது நாட்டின் புராதனக்கலையாக பாவித்து, இது மனித வாழ்க்கையை துல்லியமாக கட்டுப்படுத்தும் அறிவியலாகவும் கருதி நமது பாடத்திட்டத்தில் சேர்க்க முன்வந்துள்ளது. இது அயோக்கியத்தனமான இந்துத்துவ அதிகார ஊடுருவல் ஆகும்.

ஜோதிடம் என்பது உலகம் முழுவதும் மதசார்பற்று பெரும்பான்மையான மக்களால் பின்பற்றப்பட்டு முழுக்க முழுக்க நம்பிக்கை அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்ட அம்சமாக திகழ்கிறது. கடவுள் நம்பிக்கையற்றவர்கள் கூட ஜோதிடத்தை நம்பும் அளவுக்கு அதற்குள் ஒரு விஞ்ஞானத்தன்மை போலியாக புகுத்தப்பட்டுள்ளது.

ஆனால் உண்மையில் ஜோதிடம் என்பது ஒரு அறிவியலா ? என்று ஆராய்ந்து பார்த்தால், இயற்பியல் பாடபுத்தகத்தில் இதனைப்பற்றி எங்குமே காணமுடியாது. பிறகு இதற்கு எப்படி அறிவியல் சாயம் பூசப்பட்டது ? வான்கோள்கள் நட்சத்திரங்கள்இவைகளின் இயக்கங்களை பற்றி இவர்களின் விருப்பத்துக்கு சில கணக்கீடுகளை போட்டு அறிவியல் பூர்வமானது என்ற வார்த்தையை சேர்த்து, மக்களின் அறியாமை, பயம், பேராசை, தன்னம்பிக்கையற்ற தன்மை இவைகளையே மூலதனமாக்கி ஜோதிடத்தை பலரும் நம்பும்படி வளர்த்து வருகின்றனர். உண்மையில், ஜோதிடம் என்பது பெரும்பாலோரால் நம்பப்பட்டுவருகிறது என்ற புள்ளியல் ஆதாரத்தை தவிர வேறு எந்த ஒரு அறிவியல் பலமும் ஜோதிடத்துக்கு கிடையாது. அதுவும் இந்த நம்பிக்கைக்கு காரணம் படித்த நபர்களின் குறைவான அறிவியல் ஞானம்தான். இன்றைக்கு நியூட்டனின் விதிகள் மெய்ப்பிக்கப்பட்டு 40 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டன. இன்றய நிலவரப்படி பட்டமேற்படிப்பையும் தாண்டி படித்தவர்களில் பலருக்கு நியூட்டனின் இயக்கவியல் விதிகளைப்பற்றியும் அவரின் இயற்கை தத்துவத்தை பற்றிய கால்குலஸ் கணிதவியல் விதிகளைப்பற்றி அறைகுறையாக கூட தெரியாது. இப்படிப்பட்ட கேலிக்கூத்தான நபர்களால் மட்டுமே ஜோதிடத்துக்கு அறிவியல் சாயம் பூச முடியும். ஆயினும் சில விஞ்ஞான விளக்கங்களை நாம் தெளிவாக முன்வைக்கும் போது ஜோதிடத்தின் அறிவியல் தன்மையை எளிதாக உடைக்க முடியும்.

2000–ம் ஆண்டுகளுக்கு முன்னால் பூமி தட்டை என்றுதான் மக்கள் நம்பி வந்தார்கள். பார்ப்பதற்கும் பூமி தட்டையாகத்தான்இருந்தது. அதேபோல சூரியன்தான் பூமியை சுற்றிவருகிறது என்றும்; அதற்கு ஆதாரமாக சூரியன் காலையில் கிழக்கில் தோன்றி மெல்ல நகர்ந்து மேற்கில் மறைகிறது என கண்முன்னே உதாரணம் காட்டப்பட்டது. இப்படிப்பட்ட காலத்தில்தான் சோதிடம் பாபிலோனில் தோன்றி கிரேக்கம் – ரோம் போன்ற நாகரிகதொட்டில்களில் தவழ்ந்து இன்னும் குழந்தையாகவே இருக்கிறது. அங்கிருந்துதான் அது இந்தியாவுக்குள் நுழைந்தது. ஆகவே ஜோதிடத்தை நமது நாட்டின் புராதன கலையாகவே ஏற்க முடியாது.

இன்றய இயற்பியல் விஞ்ஞானத்தில் கிரகங்கள், நட்சத்திரங்கள் அவைகளின் செயல்பாடுகள் அவற்றில் உள்ள பொருள்கள் ஒளியின் தன்மை, காலம் மற்றும் விசும்பு (Space) இவைகளுடனான உறவு போன்றவைகளை முறையே வானியல் (Astronomy) பிரபஞ்சவியல் (Cosmology) வான்பொருளியல் (Cosmogony) வான்இயற்பியல் (Astro Physics) மற்றும் ஐன்ஸ்டினின் பொது மற்றும் சிறப்பு சார்பியல் கோட்பாடு (Common & Special Theory of Relativity) மாக்ஸ் பிளாங்க் மற்றும் ஐன்ஸ்டின் அவர்களால் உருவாக்கப்பட்ட அலை இயற்பியல் (Quantum Physics) இன்றைக்கு ஸ்டீபன் ஹாக்கின்ஸ் என்ற பிரிட்டீஷ் வானியல் விஞ்ஞானியால் வளர்த்தெடுக்கப்பட்ட இழை தத்துவம் ( String Theory)–(இழைதத்துவம் என்பது நமது பிரபஞ்சத்தின் நான்கு சக்திகளான 1. ஈர்ப்பு 2. மின்காந்த சக்தி. 3. மெல்லிய அணுசக்தி (Weak nuclear force ) 4. வல்லணு சக்தி (Strong nuclear force ) இவைகளுக்கிடையேயான ஒருமை தத்துவத்தை நிலைநாட்டும் ஒரு சித்தாந்தம். இதனைப்பற்றிய மாநாடு சமீபத்தில் மும்பையில் நடைபெற்றது. இதில் ஸ்டீபன் ஹாக்கின்ஸ் கலந்து கொண்டார்) மேற்கண்ட எந்த ஒரு விஞ்ஞானத்திலும் ஜோதிடம் பற்றிய எந்த ஒரு சிந்தனையும் உருவாக்கப்படவில்லை–நிரூபிக்கப்படவில்லை. மூலச்சிறப்பு மிக்க வின்கோள்சுழற்சி விதிகளை உருவாக்கிய கெப்ளர் கூட ஆரம்பத்தில் ஜோதிடத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவராக இருந்தார். ஆனால் வானியல் பற்றிய அவரது சிந்தனை தெளிவடைந்தவுடன் அவர் ஜோதிடத்தின் தீவிர எதிர்ப்பாளராகிவிட்டார். ஜோதிடம் வளர ஆரம்பித்த காலத்திலிருந்தே அதற்கான எதிர்ப்பு விஞ்ஞானிகள், உளவியலாளர்கள், சமூகவியலாளர்கள் மத்தியில் உருவாகி இன்றுவரை நீடித்து வருகிறது.

ஜோதிடத்தின் விஞ்ஞான பூர்வமற்ற தன்மையை அதன் சாராம்சத்தை அடிப்படையாக கொண்டே நாம் விளங்கிக்கொள்ள முடியும். முதலில் ஜோதிடத்தில் சூரியனும் சந்திரனும் கிரகங்களாக கொள்ளப்படுகின்றன மேலும் கடைசி மூன்று கிரகத்தைப்பற்றி எந்த செய்தியும் இல்லை. ஏனென்றால் யுரானஸ் 1781, நெப்ட்யூன் 1846, பூளுட்டோ 1930 ஆண்டுகளில்– ஜோதிடம் உருவாகி பலகாலம் கழித்து கண்டுபிடிக்கப்பட்டது. அதேபோல சனிகிரகத்துக்கு 21 சந்திரன்களும் வியாழன் கிரகத்துக்கு 16 சந்திரன்களு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

... இந்த ஆண்டு சனி கிரகத்துக்கு மேலும் பல சந்திரன்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நமது சூரியக்குடும்பத்தில் வெள்ளி, புதன் தவிர மற்ற அனைத்து கிரகத்துக்கும் சந்திரன்கள் உண்டு. செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையே உள்ள சிறுங்கோள்கள் மற்றும் புளுட்டோ கிரகத்துக்கு அப்பால் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட 70,000–க்கும் மேற்பட்ட கறுப்பு பனிப்படலத்துடன்கூடிய கோள்கள், கற்கள் போன்றவைகளை உள்ளடக்கிய குய்ப்பர் வளையத்தில் (Kuiper belt) வருனா (Varuna) கோரான் (Koran) என்ற இரண்டு புதிய கோள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இன்னும் சூரிய குடும்பத்துக்கு அப்பால் வால்நட்சத்திரங்கள் உருவாக காரணமாக உள்ள ஊரட் மேகங்கள் சனி வியாழன், யுரானஸ் கிரகங்களை சுற்றியுள்ள வளையங்கள், பிரபஞ்சத்தில் உள்ள லட்சக்கணக்கான விண்மீன் கூட்டங்கள் (Galexies) அவற்றில் சிதறிக்கிடக்கின்ற கோடானுகோடி நட்சத்திரங்கள் போன்ற எத்தனையோ விஷயங்களைப்பற்றி ஜோதிடத்தில் எந்த செய்தியும் இல்லை. இதில் உள்ளதெல்லாம் 9 கிரகங்கள், 27 நட்சத்திரங்கள், 12 ராசிகள்.

ஜோதிட சாஸ்த்திரப்படி நமது கிரகங்கள் குறிப்பிட்ட சுற்றுப்பாதையில் சுற்றி வரும்போது ராசி சக்கரத்தில் (Zodiac) உள்ள ராசியை சந்திக்கின்றன. அந்தந்த ராசிகளுக்கும் கிரகங்களுக்கும் சில குணங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் குறிப்பிட்ட ராசியில் பிறந்த நபர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஒரு நபரின் வாழ்நாள், பொருளாதார நிலைமை, வாழ்க்கை துணை, வாரிசுகள், இதய நோய்க்கு ஆளாகும் வாய்ப்பு உள்ளதா ?. போன்ற அனைத்து விஷயங்களும் டிகிரி சுத்தமாக கனிக்கப்பட்டு விடும்.இவையத்தனையும் கிரகங்கள், ராசிகள், நட்சத்திரங்கள் இவைகளின் இயக்கத்தின் அடிப்படையில் அமைவதாக கூறப்படுகிறது. மேலும் இவற்றிற்கு ஓர் நிரந்தர தன்மை தரப்படுகிறது. அதாவது செக்கு மாடு ஒரே வட்டத்தில் சுற்றுவது போல. இந்த கருத்து பெரு வெடி கொள்கை (Big bang Theory) மூலம் பிரபஞ்சம் விரிவடைகிறது (Expanding Universe) என்ற அறிவியல் உண்மைக்கு எதிரானது. பிரபஞ்சம் விரிவடைகிறது எனும் போது மேற்கண்ட ராசிகள் முன்பு இருந்த இடத்தில் இல்லாமல் தன்னியல்பாக பயனிக்கின்றன. இதற்கு செம்பெயர்ச்சி (Red shift) ஊதா பெயர்ச்சி (Violet Shift) போன்ற டாப்ளர் விளைவு (Toppler Effect) சார்ந்த அறிவியல் ஆதாரங்கள் உள்ளன. இதற்கும் ஒருபடி மேலே போய் ஜோதிடர்கள் கிரக தோஷங்களுக்கு பரிகாரம் வேறு சொல்லுகிறார்கள். இது அவர்கள் சார்ந்த போலிவிஞ்ஞான தன்மைக்கு மேலும் ஒரு அடியாகும். எப்படி ஒரு பௌதீக விஷயமானது இவர்களின் பரிகாரத்துக்கு கட்டுப்படுகிறது என்பதற்கு விஞ்ஞானபூர்வமான பதில் ஜோதிடர்களிடம் கிடையாது.

இந்தியாவின் வான் இயற்பியல் விஞ்ஞானியான சுப்ரமணியம் சந்திரசேகர் கருந்துளை (Block Hole) மற்றும் வெள்ளைகுள்ள நட்சத்திரங்களை (White Dwarf)பற்றி ஆய்வு செய்து சந்திரசேகர் நிலை (Chindrasekar Limit)என்ற தமது கண்டுபிடிப்பிற்காக 1983–ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு வாங்கினார். இந்த கண்டுபிடிப்பின் அடிப்படையே ஒரு நட்சத்திரத்தின் ஆயுள் மற்றும் அதன் நிறையை தீர்மானிப்பதுதான். அப்படி அல்ப ஆயுசாக இருக்கும் நட்சத்திரங்கள் எப்படி மனிதனின் வாழ்க்கையையும் ஆயுளையும் தீர்மானிக்க முடியும்.

இப்போது ஜோதிடம் தனது எல்லையை மேலும் அதிகரித்துள்ளது. கைரேகை, எண் கணித சாஸ்திரம் – இதன்படி தங்கள் பெயர்களில் உள்ள எழுத்துக்களை அசிங்கமாக மாற்றிக்கொள்வது, வாஸ்து என்ற பெயரில் நன்றாக கட்டிய வீட்டை மீண்டும் இடித்து கட்டுவது. இதற்கு கட்டிட பொறியியல் சார்ந்த விஞ்ஞான கண்ணோட்டத்தை சொல்லி வாஸ்து சாஸ்திரத்துக்கு அறிவியல் சாயம் பூசுவது. வண்ணக்கற்கள் சாஸ்திரம் என்று சொல்லிக்கொண்டு கலர் கலரான கண்ணாடிகற்களை விரல்களிலும், கழுத்திலும் மாட்டிக்கொண்டு, அதன் மூலமாக பலன் கிடைக்கும் என நினைத்து ஏராளமாக செலவு செய்கின்றனர்.

மேற் சொன்ன அனைத்தும் ஜோதிடத்தின் பல அங்கமாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவை சம்மந்தப்பட்ட புத்தகங்களில் –விஞ்ஞான பூர்வமான என்ற வார்த்தை தவறாமல் இடம் பெற்றுவிடும். இந்த வார்த்தை ஜாலத்தைத்தவிர வேறு எந்த விஞ்ஞானமும் ஜோதிடத்தில் கிடையாது. நாம் ஜோதிடம் பார்க்கும் போது சில விஷயங்கள் உண்மையாக இருப்பது போல ஒரு தோற்றமளிக்கும். அதற்கு நிகழ்தகவு (Probability)அடிப்படையே காரணம்

பெரும்பாலும் இதனை நம்புபவர்கள் அதிகம் படித்த நடுத்தர வர்க்கத்தினர்களே. கேவலமான நுகர்வு கலாச்சாரத்துக்கு அடிமைப்பட்டு, அதனால் ஏற்படும் வாழ்க்கையின் சவால்களை சந்திக்க பயந்து குறுக்கு வழியில் பயனித்து தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள இவர்கள் ஜோதிடத்தை நாடுகின்றனர். பத்திரிகைகளில் வரும் ஜோதிட கேள்வி பதில்களை படித்தாலே இந்த உண்மை புரியும். மக்கள் உழைப்பு மீதான ஆர்வத்தை இழந்து ஜோதிடத்துக்காக எத்தகைய செலவும் செய்ய தயாராக உள்ளனர். மேலும் மக்களின் அறியாமையை பயன்படுத்தி ஜோதிடம் ஒரு சிறந்த வியாபாரமாகவும் வளர்ந்து வருகிறது. இங்கே வெகு மக்களின் உணர்வு பூர்வமான நம்பிக்கையை தகர்ப்பது நமது நோக்கமல்ல. எந்த அடிப்படையிலும் ஜோதிடமானது விஞ்ஞானபூர்வமானதில்லை.

கலை சார்ந்த தகுதியை கூட இதற்கு தரமுடியாது. எனெனில் கலை என்பது மக்களுக்கானது . அதற்கும் அறிவியல் அளவுகோல் உண்டு. பொழுதுபோக்கிற்கு வேண்டுமானால் இந்த விதியை சற்று மீறலாம். ஆனால் ஜோதிடம் என்பது எல்லாவற்றையும் மீறிய ஒரு மூடநம்பிக்கையாக உள்ளது. இதைப்போன்ற மூடநம்பிக்கைக்கு எதிரான பகுத்தறிவு சிந்தனையை வேண்டுமானால் பல்கலைகழகத்தில் பாடமாக வைக்கலாம். சோதிடத்தை பாடமாக வைப்பதாக இருந்தால் மற்ற அறிவியல் பாடங்களை பாடத்திட்டத்திலிருந்து எடுத்து விடலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Annai Terasa College of Engineering

Thirunaavalur-PO, Ulundurpet.TK, Villlupuram Dt., Ph:04149-24292

APPROVED BY A.I.C.T.E., NEWDELHI AND AFFILIATED TO UNIVERSITY OF MADRAS

*The Courses offered by us:*

**BE** Electronics and Communication Engineering
**BE** Electrical and Electronics Engineering
**BE** Mechanical Engineering
**B.Tech** Information Technology
**B.Tech** Chemical Engineering

Separate Hostel for Girls and Gents

The College is situated in a natural atmosphere with all facilities such as Class rooms, Laboratories, Library, Computer Science lab, Work-shops, Administrative Building, Canteen, Transport facilities etc.

**Dr.K.V. Lingam**
The Principal,
Annai Teresa College of Engineering

---

**S. ARUL, B.E.**
Consulting Engineer

*With Best Compliments from*

**A. K. CONSTRUCTIONS**
**Builders, Designers and Estimates**
56E, Ayyanar koil st.,

Vriddhachalam - 606 001.
Ph. Off. 31969 (O) Res. 62093

www.tamilarangam.net



# திசைகளைத் தேடி...

கரிகாலன்

கிழக்கு
மையல் கொண்ட கரியவிழிகளால்
பேசிக் கொண்டிருக்கிறாய்
எனக்கான பிரத்தியேக மொழியில்
வாசலில் நீர் தெளிக்கிறாள் மனைவி
வீடு மெதுவாய் விழிக்கிறது.
எப்போதும் புழங்கிக் கொண்டிருக்கிறேன்
இரண்டு மொழிகளுக்கிடையில் நான்.

மேற்கு
மேகங்களுக்குள் மறைந்து கொண்டிருக்கிறது
பறவைகள்
மேய்ந்து திரும்பும் செம்மறி ஆட்டு மந்தையிடையே
வழி ஏற்படுத்துகிறது என்
மிதிவண்டியின் சிறுமணியொலி .

தெற்கு
கழுகுகள் மேலே வட்டமிட
மணிமுத்தாற்று மணல் எளிதாய் நெகிழ்கிறது
உதிரக்கவுச்சி நீங்காத கைக்குழந்தைக்கு
சூன்யமாயிருக்கிறது மயக்கம் தெளியாத
விஜியின் கருப்பையும், தொட்டிலும்.

வடக்கு
எல்லா திசைகளிலும்
உன் அழகான பெரிய கருவிழிகள்
ஞாபகங்களின் பாரம் அழுத்த
வடக்கிருந்து பிரியட்டும் இவ்வுயிர்.

விலை ரூ. 20